# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## சிறுவர் செயற்பாட்டுக் கழகத்தின்

# "கனிவு"

# 2009

## 10வது ஆண்டு
## நிறைவு மலர்



# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
# சிறுவர் செயற்பாட்டுக் கழகத்தின்

# "கனிவு"

## இதழ் - 01

*10ம் ஆண்டு நிறைவு மலர்*

## 2009

### இதழாசிரியர்கள்

இ. சுவிஸ்ரன்

ச. நிதர்சனன்

### பொறுப்பாசிரியர்

திருமதி சா. அருந்தவபாலன்

# சிறுவர் மேம்பாட்டுக் கீதம்

இராகம் :- மோகனம் தாளம் :- ஆதி

யாழ் இந்துக் கல்லூரி சிறுவர் செயற்பாட்டுக் கழகம்

வாழிய வாழியவே!

நாளும் சிறுவர் வாழ்வு நன்றே சிறந்திட என்றென்றும்

வாழிய வாழியவே

உடல் வலுப்பெற்று உளமது மகிழ்ந்து உறுதியாய்

சிறுவர் நாம் செயற்படவே

உறுதுணை வழங்கி உயர்வது பெறவே உழைத்திடும்

கழகம் இதுவே

கடமையைச் செய்து உரிமைகள் பெற வழி காட்டிடும்

கழகம் இதுவே

கசடறக் கற்று காசினி போற்றிட வாழ்வில்

உயர்ந்திடவே

கனிவோடு பற்பல நல்வழி காட்டும் கனிவுறு கழகம்

வாழியவே!

நூல் :- கனிவு

வெளியீடு :- 01

ஆக்கம் :- சிறுவர் செயற்பாட்டுக் கழகம்

முகவரி :- சிறுவர் செயற்பாட்டுக் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிப்பு :- யாழில் Mகொழும்பு பிறிண்டேர்ஸ்

உரிமை :- சிறுவர் செயற்பாட்டுக் கழக 2009
நிர்வாகத்தினருக்கே

# சமர்ப்பணம்

எமது கழகம் ஆல் போல்

தழைத்து

அறுகு போல் வேரூன்ற

ஒத்துழைத்த

அனைவருக்கும்

சமர்ப்பணம்.

# ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி



எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமானின் பேரருளினால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சிறுவர் கழகத் தினரால் இவ்வாண்டு வெளியிடப் படுகின்ற இம்மலரிற்கு ஆசியுரை வழங்குவதில் மிக்க மகிழ்வடைகின்றோம்.

கல்வி கற்பதோடு மாணவர்கள் இது போன்ற ஆக்கங் களை வெளிக்கொணர்வதனாலும் மற்றும் விளையாட்டு, நாடகங் கள் போன்றவற்றில் பங்கு கொண்டு தமது திறமையை வளர்ப் பதாலும் ஏனைய மாணவர்களும் இவர்களின் இந்த முன் மாதிரியை பின்பற்றி வளர ஏதுவாக அமையும்.

சிறுவர் கழகத்தின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வழிநடத்தும் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் பணி மிகவும் போற்றத்தக்கது.

சிறுவர் கழகம் மேலும் வளர்ந்து வருடாந்தம் இது போன்ற மலர்கள் வெளிவர எமது கல்லூரி வளாகத்தில் வீற்றிருந் து அருள்பாலிக்கும் ஞானவைரவப் பெருமானை வேண்டி வணங் குகின்றேன்.

"சமஸ்த லோகா சகினோ பவந்து"

சிவஶ்ரீ கா. சதானந்த சர்மா
பிரதம குரு

# அதிபரின் ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சிறுவர் செயற்பாட்டுக் கழகத்தினரின் பூந்தோட்டத்தில் பல்வேறு வகைப்பட்ட பூஞ்செடிகள் மலர்ந்து வண்ணப் பூக்களையும் இதழ்களையும் பரப்பி மணம் கமழ்வது எமது மனதை மகிழ்விக்கின்றது. சிறுவர்கள் பலர் திரண்டு கழகத்தின் பரிணாமத்தை அடையாளப்படுத்துவதாக "கனிவு" என்னும் மலர் வெளிவருவது கண்டு மகிழ்ச்சி அடைகின் றேன். இம்முயற்சி கழகத்தின் வளர்ச்சியின் போக்குகளில் ஏற்பட் ட மாற்றத்தினை நிலைப்படுத்துகின்றது. சொற் செட்டுடன் சொற் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ள இந்நூல் சிறுவர்களின் உணர் வுகளையும் அனுபவங்களையும் சிந்தனைகளையும் வெளிக் கொணர்ந்துள்ளன. சிறுவயதிலேயே மாணவர்கள் சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்கி சமூக ரீதியான ஒருமைப்பாட்டைப் பெற வழிகாட்டி மாணவர்களது எதிர் காலத்தைச் செப்பநிட இத்தகைய முயற்சிகள் உதவும் என்பதில் ஐயமில்லை வளர்க சிறுவர் செயற்பாட்டுக் கழகம் என வாழ்த்தி ஞானவைரவப் பெருமானை வணங்குகிறேன்.

வீ.கணேசராஜா.<br>
(SLPS - I, SLES III)<br>
அதிபர்<br>
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# பிரதி அதிபர் ஆசியுரை



யாழ் இந்துக் கல்லூரியில் இருபத்தைந்திற்கு மேற்பட்ட கழகங்கள் நற்பழக்க வழக்க ஒழுங்கு விதிகளை, சுகாதார முறைகளை சைவசமய கிரியைகளை, வரவேற்பு உபசாரம், தமிழர் பண்பாடுகள் நுண்ணறிவு விருத்தி, ஆளுமை விருத்தி, நேரம் தவறாமை போன்ற நற்பண்புகளை போட்டியிட்டு புகட்டி வருகின்றன.

சிறுவர் செயற்பாட்டுக் கழகம் மாணவப் பருவத்திலே எவற்றைச் செய்ய வேண்டும் எவற்றைச் செய்யக் கூடாது என்பன பற்றி வலியுறுத்தி வாழக்கற்றலை பழக்கப்படுத்தி வருகின்றது. சிறுவர் கழகம் தனது பத்தாவது வருடத்தில் தான் சிறந்த கழகம் என்ற சிறப்புப் பாராட்டினை பெற்றதுடன் ”கனிவு” என்ற சஞ்சிகையையும் வெளியீடு செய்கின்றது. சிறுவர் மனப்பாங்கு விருத்தி கொள்கைகள் கோட்பாடுகளை இன்றும் உள்வாங்கி தொழிற் பட வேண்டும் என எல்லாம் வல்ல ஞான வைரவப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

என்றும் குழந்தைகள் மனமுடன் மலரட்டும்!

பொ. சிறீஸ்கந்தராசா.
பிரதி அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# உப அதிபரின் ஆசிச்செய்தி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பல்வேறு கழகங்கள் உள்ளன. இவற்றுள் சிறுவர் செயற்பாட்டுக் கழகம் தனக்கென ஒரு இடத்தை தக்க வைத்துள்ளது. நல்லதொரு பொறுப் பாசிரியரின் கீழ் இக் கழகம் மாணவர்கள் பல்வேறு விதமான திறன்களை வெளிக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. அதிகமான அங்கத்தவர்களைக் கொண்டுள்ள இக் கழகமானது, தன்னை சிறந்ததொரு கழகமாக மாற்றியமைத்துக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இக்கழகத்தினர் மலர் ஒன்றினை வெளியிடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்ற அதே வேளை இம் மாணவர்கள் பணி சிறக்கவும் இம் மன்றம் பன்னெடுங்காலம் இக்கல்லூரியில் தடம் பதித்து சிறக்க எல்லாம் வல்ல கல்லூரி சிவஞான வைரவப் பெருமானை பிரார்த்தித்து ஆசியுரையினை நிறைவு செய்து கொள்கின்றேன்.

C. தவராசா.
உப அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# உப அதிபரின் வாழ்த்துச்செய்தி



எமது கல்லூரியின் சிறுவர் செயற்பாட்டுக் கழகம் 2000 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு மிகச்சிறப்பாக தனது செயற்பாடுகளைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் சிறுவர் தின விழா நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இம்முறை "கனிவு" எனப்படும் 10வது ஆண்டு நிறைவு மலர் வெளியீடு நடைபெறுவதையிட்டு மிக மகிழ்ச்சி அடைகின்றேன் சிறுவர் கழகத்தின் தலைவர், செயலாளர், உறுப்பினர்களை வாழ்த்துவதுடன், இக்கழக செயற்பாடுகள் தொடர்ந்தும் சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றேன்.

திருமதி ச. சுரேந்திரன்.
உப அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# பொறுப்பாசிரியரின் உள்ளத்திலிருந்து



2000ம் ஆண்டு நான் இப்பாடசாலைக்கு சமூகமளித்த போது திரு அ. சிறிகுமரன் அதிபரின் காலத்தில் ஆரம்பிக்கப் பட்டது. அதிபர் என்னை அழைத்து சிறுவர் கழகத்திற்கு பொறுப்பாசிரியராக இருக்குமாறு கேட்டார். அப்போது எனது முகமாற்றத்தை அவதானித்த அதிபர் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம் கொழும்புக்கு போக வேண்டிவரும் அதற்கு நான் போகிறேன் என்று கூறினார் அதற்குப் பிற்பாடு பொறுப் பாசிரியராக இருக்க முடிவு செய்தேன்

பின்பு அல்பிரட் ஜெனிவா, திருமலையில் இருந்து வந்து சிறுவர் பொறுப்பதிகாரிகள் தலைமையில் சிறுவர் கழகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சிறுவர்களுக்கு மிக முக்கிய செயற்பாடுகள் என்ன? சிறுவர்களை எவ்வாறு சந்தோசமாக வைத்திருக்க வேண்டும் சிறுவர்களை விளையாட் டு மூலம் மனவலிமையை எவ்வாறு ஏற்படுத்த வேண்டும் சிறுவர்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும், என பல்வேறு விடயங்கள் தெரிவிக்கப் பட்டன. எமது கழகத்திற்கு முதல்

தலைவராக செ. பிரசாந்(தற்போது மருத்துவ பீட மாணவன்)

செயலாளராக சி. ரமணன்(பொருளியளாளர்)

பொருளாளராக ம. யேசுதன்(பல்கலைக்கழக மாணவன்)

கடமை ஏற்று சிறப்பாக நடாத்தி வந்தார்கள்

எமது கழகத்திற்கு நிதிப்பற்றாக்குறையை தீர்க்க ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் பிரார்த்தனை மண்டபத்தில் பணம் சேர்த்து வந்தோம். இப்பணத்தினை வைத்து மாணவர் களின் நலன்கருதி பாதணிகள், சேட், கொப்பிகள் வாங்கி கொடுத்ததோடு தேனீர் இடைவேளையில் தேனீர்ச்சாலையில்

உணவுப்பொருட்களும் வாங்கி கொடுத்தோம். இதற்கு மாணவர்கள் தங்கள் ஒத்துழைப்பை நல்கினர் பின் இந்நிகழ் வினைத் தொடர முடியாமல் போனது மிகவும் மனவருத்தத்திற்கு உரியதாகும். இதற்கு வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட் களில் மாணவர்கள் காலை உடற்பயிற்சிக்கு சென்றமையே காரணம் ஆகும்.

வருடம் தோறும் எமது பாடசாலை மாணவர் களின் அறிவு, திறன் ஆளுமை விடா முயற்சி என்பதனை வளர்க்கும் முகமாக சிறவர் தினத்தை முன்னிட்டு கட்டுரை, கவிதை, நாடகம், சித்திரம், பேச்சு, மனைப் போட்டிகளை வைத்து வெற்றியீட்டியோருக்க சான்றிதழ்களும், பரிசுகளையும் கொடுத்தோம்.

மேலும் எமது கழகம் மூலம் பாடசாலை வளவுக்குள் சிரமதானப்பணிகளை மேற்கொண்டோம். இதில் சிறுவர் கழக அங்கத்தவர்கள் அதிக அக்கறையுடன் செயற்பட்டதை நான் நன்கு கண்டு உணர்ந்தேன். ஆண்டு தோறும் இப்பணி தொடரவேண்டும் என எதிர்பார்க்கிறேன். "சிறுதுளி பெருவெள் ளம் என்பது போல நாம் சிறுகச் சிறுக சேர்த்த பணமானது இரு பல்கழைக்கழக மாணவர்களுக்கு உதவிப் பணமாக கொடுக்க முடிந்தது. கலைப்பிரிவைச் சேர்ந்த பத்மநிருபாவுக் கும் எமது கழகத்தில் நீண்ட காலமாக செயலாளராக இருந் து பொறியியல் துறைக்கு தெரிவான ஜெயமோகனுக்கும் தலா 10, 000 கொடுக்கப்பட்டது. மேலும் எமது கழகத்திலிருந்து பல்கலைக் கழகம் செல்லும் வறிய மாணவர்க்கு உதவிப் பணம் கொடுக்க தயாராகவுள்ளோம்

2007ம் ஆண்டு எமது கழகத்தினால் சிறுவர் தினத்தை முன்னிட்டு P. C. Park முகாமையாளா கமலநாதன் சசிந்திரன் அவர்களின் ஆதரவில் பொது அறிவுப் போட்டி நடத்தினோம். இதற்கு முழுமையாக உழைத்தவர் 2007ஆம் ஆண்டு தலைவர் டிலிப் அமுதனும் ஏனைய கழக அங்கத்தவர் களும் உண்மையில் அது அவருடைய தனிப்பட்ட திறமை என்று தான் கூற வேண்டும். கேள்விகள் எடுத்து அதை நடாத்தி திறம்பட மதிப்பிட்டு பெறுபேறுகள் பெறுவது என்பது சுலபமான காரியமில்லை நிச்சயமாக அவரை மனப்பூர்வமாக வாழ்த்தத்தான் வேண்டும்.

2008ம் ஆண்டு பொதுஅறிவு போட்டி பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்டது. இதற்கு ஐங்கரன் ராம்ஜி அவர்களின் ஈடுபாடு குறிப்பிடத்தக்கது. 2009ம் ஆண்டு இப்பொது அறிவுப் போட்டி பல பாடசாலைக்கு விஸ்தரிக்கப்பட்து. இதில் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரிகள் பங்குபற்றின. இதற்கு மூல காரணமாக இருந்தவர் தற்போதைய தலைவர் க. உசாந்தன் கழக வளர்ச்சிக்காக பத்திரிகையில் விளம்பரம் கொடுத்ததோடு குழுவாகத் சேர்ந்து மதிப்பீடு செய்த முறையும் சிறப்பானதென்றே கூறலாம்.

போட்டிகள் வைக்கப்பட்ட போது பாடசாலை ஆசிரியர்கள் கை கொடுத்து உறுதுணையாக இருந்தார்கள்.

நாடகங்களை ஆக்குவதிலும் எவரின் துணையுமின்றி தாமே அபிநயம் செய்வதில் உண்மையில் இப் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றி இருந்தாலும் அதிபர் 2008ம் ஆண்டு நாடகப் போட்டி நடத்தப்பட்ட வேளையில் ஒரு அறிவித்தல் விடுத்தார். பாடசாலை முடிந்தும் நாடகம் நடத்தப்பட வேண்டும் என்பது அவ் அறிவித்தல் எனக்கு இக்கட்டான சூழ் நிலை ஏற்படுத்தியது மனம் வேதனைப்பட்டது. சொல்லில் வடிக்க முடியாத சோகம் மதிப்பீடு செய்ய யாரைக் கேட்பது. ஓடி ஓடி பலரைக் கேட்டேன் எல்லோருக்கும் தனிப்பட்ட வேலைகள் பாடசாலை விட்ட பின் நிற்க முடியாது. மாணவர் களைப் பெற்றோர்கள் கூட்ட வந்திடுவார்கள் என்ன செய்வது என்று தடுமாறியும் எடுத்த காலை பின் வைக்கக் கூடாது என எண்ணி ஜெயபாலனும்(சமயம்) உப அதிபர் திரு. சிறிஸ்கந் தராசாவும் எனக்குக் கை கொடுத்தார்கள். உண்மையில் இருவர்களும் அன்று எனது தெய்வமாக இருந்தார்கள். நீண்ட பொழுது சென்ற போதும் அதனைக் கணக்கில் எடுக்காது மதிப்பீடு செய்து தந்தார்கள் அவர்கள் இருவருக்கும் என்றென்றும் கடமைப்பட்டவர் ஆனேன்

இம் முறை புதிய முறை ஒன்றைக் கையாண்டேன் நாடகம் நடிப்பதை விட குறுநாடகம் எழுதுதல் என்ற முறையை அறிமுகப்படுத்தினேன் ஏனெனில் பிரச்சனைக்கு முகம் கொடுப்பதை விட பிரச்சனையில் இருந்து சுலபமாகவிடுபட இதுவே சிறந்த வழி என அறிவு பூர்வமாக இருந்து செயற்பட்டேன். நாடகம் ஒருவர் எழுதுவார் 10பேர்

நடிப்பார்கள் பெருந் தொகையானோர் ஈடுபடுவர். ஆனால் குறுநாடகம் என்னும் போது ஒரு சிலர்தான் ஈடுபட்டார்கள் இது கவலைக்குரிய விடயமாக இருந்தது. நாம் என்ன காரியம் செய்தாலும் அது பலர் பயன் அடைவது தான் சிறந்தது. இது சமுதாயத்திற்கும் வேண்டப்படுவது.

மேலும் சிறுவர் கழகத்திற்கு பல ஆசிரியர்களை சிறிக்குமரன் அதிபர் சேர்த்து வைத்த போதிலும் மற்றும் ஆசிரியர்கள் மெல்லமாக நழுவி விட்டார்கள் தந்த பொறுப்பை செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் என்னை நழுவ விடவில்லை.

முன்னாள் உப அதிபர் மகேஸ்வரன் அவர்களை இங்கு குறிப்பிட்டு காட்டுவது எனது கடமையாகும் சிறுவர் தினக் கொண்டாட்டம் முடிந்ததும் என்னை சந்திப்பார். அப்போது என்ன தவறுகள் என்று கூறமாட்டார் "தனிமையில் சிறப்பாக நடத்தி முடித்து விட்டீர்கள்" என்பார். உண்மையில் அவர் கூறும் போது எனக்கு நடத்தப்பட்ட போது ஏற்பட்ட கஸ்ரங்கள் என்னை விட்டு ஓடி விடும் குறைகள் இருக்கும் அவர் நிறைவுப் பக்கத்தை மட்டும் பார்த்துக் கூறுவார்.

மேலும் 10 ஆண்டு நிறைவை ஓட்டி "கனிவு" என்ற சிறிய புத்தகம் ஒன்றை வெளியிட இருக்கின்றோம். அதற்கு பல மாணவர்கள் ஆக்கங்களைத் தந்துள்ளனர் அவர் களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

2009 ம் ஆண்டு சிறந்த கழகமாக "சிறுவர் கழகம்" தெரிவு செய்யப்பட்டமை எமது கழக மாணவர்களுக்கு பெரும் மகிழ்ச்சியாகவுள்ளது.

சிறுவர் கழகம் தொடர்பான கழக கீதம் 2009ம் ஆண்டு உருவாக்கியுள்ளோம். என்பதனை கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

மேலும் சிறுவர் தினக் கொண்டாட்டத்தின் போது தேனீர் உபசாரத்திற்கு உதவி செய்த செல்வி.செல்லத்துரை, திருமதி. சுரேந்திரன் ஆசிரியர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**"வாழ்க சிறுவர் கழகம்"**

S. அருந்தவபாலன்.
சிறுவர் கழக பொறுப்பாசிரியர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.



## பிரதம விருந்தினர் கலாநிதி த. மனோரஞ்சன்
## B.sc(Hons) Ph.D அவர்களின்
## ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சிறுவர் கழகம் ஒவ்வொரு ஆண்டும் ஆண்டு விழா கொண்டாடி வருகின்றது. இவ்வாண்டு பத்தாவது ஆண்டு விழாவை கொண்டாடுகின்றது. பழைய மாணவன் என்ற வகையில் என்னை பிரதம விருந்தினராக அழைத்துள்ளனர். என்னை உருவாக்கி விட்ட தாயாகிய கல்லூரிக்கு குடும்ப சகிதமாக இவ்வாறான ஒரு வைபவத்தில் கலந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். "கனிவு" என்கின்ற இனிமையான பெயர் கொண்ட சஞ்சிகை தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பதுடன் அதனை வெளியீடு செய்ய தூண்டு கோல் விடுப்போருக்கு பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

எமது கல்லூரி நீண்ட காலமாக கட்டிக்காத்து வரும் பல்கலைக்கழக அனுமதியில் உயர்நிலையில் இருப்பதற்கு ஆசிரியர்களின் அயராத உழைப்பும், மாணவர்களின் உறுதியான கற்றல் பழக்கமும் தொடர்ந்திருக்க வேண்டும் என இறைவணைப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி த. மனோகரன் B.sc (Hons), Ph.D
சிரேஸ்ட விரிவுரையாளர்
இரசாயனவியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

# தலைவரின் உள்ளத்திலிருந்து...



அடியேனை ஈன்றெடுத்த பெற்றோரையும் அறிவுப் பசி தீர்த்து வருகின்ற ஆசிரியர்களையும் நினைந்து கல்லூரியிலே அருளாட்சி புரிகின்ற ஞானவைரவப் பெருமானின் பாதர விந்தங்களை வணங்கி இவ்வுரையை வரைய முற்படுகிறேன்.

பல ஆண்டுகளை கடந்து நிற்கின்ற வரலாற்று பெருமை மிக்கது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பதை சொல்லி அறிய வேண்டியதில்லை அப்படிப்பட்ட கல்லூரியிலே சாதனைகளுக்கும் சோதனைகளிற்கும் குறைவில்லை எனலாம். ஆனால் உங்களிற் கெல்லாம் தெரியாததும் முக்கியமானதுமான ஒரு சாதனையும் அச் சாதனையை நிகழ்த்திக்கொண்டிருப்பவர்கள் பற்றி குறிப்பிட் டாக வேண்டும்.

அவர்கள் வேறு யாருமல்ல இச் சிறுவர் செயற்பாட்டுக் கழகத்தினரே தசாப்தம் ஒன்றைக் கடந்து "கனிவு" என்கின்ற மலரை வெளியிடுகின்ற காலப்பகுதியிலே இக் கழகத்தின் தலைவராக இருப்பதனை பெறுதற்கரிய பேறாக கருதுகின்றேன்.

எமது கல்லூரித் தாய் வளர்ச்சியும் எழுச்சியும் கொண்டு முன்னைக் கம்பீரத்துடன் நிமிர்ந்து நிற்கின் றாள். இவற்றிலே சிறுவர் செயற்பாட்டுக் கழகத்தின் பங்கும் உண்டு. என எண்ணுகையிலே மனம் புளகாங்கிதம் அடைகிறது. கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமைவாக 2000 ஆண்டளவிலே ஆரம்பிக்கப்பட்ட கழகம் வியத்தகு சாதனைகளை புரிந்து வருகிறது. பாடசாலை மட்டத்திலே வருடாந்தம் நடாத்தப் படுகின்ற பொது அறிவுப் போட்டி மாவட்ட மட்டத்திற்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. சிறுவர் தினத்தை முன்னிட்டு போட்டிகள்நடாத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு

தன்று பெறுமதியான பரிசில்கள் சிறுவர் தினத்தன்று வழங்கப்பட்டிருக்கின்றது. கல்லூரிச் சூழல் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டிருக்கிறது. நூலகத்திற்கு நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வாறு பல அளப்பரிய பணிகளை ஆற்றி கல்லூரியில் சிறந்த கழகமாக விருது பெற்றிருக்கிறது.

கழகச் செயற்பாடுகள் மிகச்சிறப்பாகவும் வினைத்திறனாகவும் நடாத்தப்படுவதற்கு கல்லூரி அதிபரினதும் பொறுப்பாசிரியரின் ஒத்துழைப்புக்கள் இன்றியமையாதவையே தடைக்கறகள் யாவற்றையும் சாதனை படிகளாக்கி செயற்படுகின்ற கழக உறுப்பினர்களுக்கு என் இனிய நன்றிகள் இவர்கள் கழகத்திற்காக எதிர்கொள்கிற சவால்கள் அனைத்தும் கண்ணீரில் கரைந்து போகும் காவியங்கள் அல்ல.

**நாளைய சிற்பிகளே,** சிறுவர்கள் இளைஞர்கள் அரட்டையடித்து குடித்து, சினிமா, சிகரட் இன்னும் எத்தனையோ விரும்பத்தகாத வேண்டத்தகாத பழக்கங்களுடன் வாழ முற்படுகின்றனர். இவர்கள் பெற்றோரின் பாரிய எதிர்பார்ப்புக்களை படு குழியில் புதைத்து ஆசிரியரின் எண்ணங்களை சிதைத்து இப்படித்தான் வாழ வேண்டும் என இல்லாது எப்படியும் வாழலாம் என வாழ முற்படுகின்றனர் "திருடனாய் பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாதல்லவா."

நெல்லுக்கும் உமி உண்டு நீருக்கும் குமிழி உண்டு புல்லிதழ் பூவிற்கும் உண்டு. எனினும் பெறுதற்கரிய பேறை பழாக்காது வாழ முற்பட வேண்டும். விதை நெல்லைக் குற்றி உலை இடுவதா? சிந்தியுங்கள்.

கனிவே, உன்னில் கறைபடிய முற்படும் களைந்து கொள், உன் சிந்தனையில் நஞ்சு விதை விதைக்கப்படும் வேருன்ற விடாதே, காலத்தின் கோலம் உன்னை மாற்ற முற்படும் மாறி விடாதே, நீ என்றென்றும் கனிவாய் மலர முதல் நூலுக்குரிய தலைவன் என்ற வகையிலே வாழ்த்துகிறேன்.

கனிவு பூத்து காய்த்து கனியாவதற்கு பல்வேறு வழிகளிலும் ஒத்துழைத்த அனைத்து உள்ளங்களிற்கும் மனப்பூர்வமான நன்றிகள்.

க. உஷாந்தன்
தலைவர்
சிறுவர் செயற்பாட்டுக் கழகம்.

# செயலாளரின் உள்ளத்திலிருந்து...



யாழ் இந்து அன்னையின் சிறுவர் கழகத்தின் செயலாளர் என்ற வகையில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்த வகையில் எமது கழகமானது பல்வேறு பட்ட சாதனைகளை உள்ளடக்கி ஒரு தசாப்தத்தை பூர்த்தி செய்து நிற்கின்றது. சிறுவர் நலனும், சேவை நோக்கமும் தன் இரு கண் களாகக் கொண்டு நிகழும் எம் கழகமானது தனது வெற்றி பாதையில் சுகமாய் வீசி வரும் தென்றல் போன்ற இச் சஞ்சிகையானது "கனிவு" ஊடு கல்வி சமுதாயம் மென்மேலும் பயன் பெறும் என்பதை யாவரும் மறுக்க முடியாது.

இவற்றை விட எமது கழகம் பல்வேறு பட்ட தரப்பினரின் விமர்சனங்களுக்கும் உள்ளானது. இவ்வாறான சோதனைகளையும் சாதனைகளாக மாற்றும் எம் கழக உறுப்பினர்களும் மற்றும் பொறுப்பாசிரியருக்கும் அடியேனின் வாழ்த்து என்றென்றும்.

மேலும் எமது கழகம் அறிவை வளர்ப்பதிலும் முன் நிற்கின்றது. எமது கல்லூரி மாணவரிடையே வருடம் வருடம் பல்வேறுபட்ட போட்டிகளையும் பொது அறிவு பரீட்சையையும் நடாத்தி வருகின்றது.

அதிலும் இவ்வருடம் மென்மேலும் சிறப்பாக யாழ் மாவட்ட பிரபல 5 பாடசாலைகளை இணைத்து பொது அறிவு பரீட்சை நடாத்தி வெற்றியீட்டியவர்களை கௌரவித்துள்ளது. எனவே எமது கழகத்தின் அடுத்த வெற்றிப்படியான "கனிவு"க்கு கல்வி சமூகத்தின் மத்தியில் நல்லதோர் கனிவு கிடைக்கும் என்பது என் எதிர்பார்ப்பு

நன்றி

செல்வன் சு. சாரங்கன்
செயலாளர்
சிறுவர் செயற்பாட்டுக் கழகம்.

# இதழாசிரியர்களின் உள்ளத்திலிருந்து...

யாழ் இந்துக் கல்லூரி இலங்கையில் மட்டுமன்றி உலகிலேயும் புகழ்பெற்ற கல்லூரி என்பதை வாழும் மக்களினூடாக அறிகின்றோம். எமது பாடசாலை மாணவன் நாசாவிலிருந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அன்னையின் பழைய மாணவன் என பெருமையுடன் கூறியவை இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. எமது பாடசாலை மாணவர்கள் "சிறுவர் கழகம் ஒன்றை" கடந்த பத்தாண்டுகளாக செயற்படுத்தி வருவது கண்கூடு

இந்த வகையில் "கனிவு" என்ற மலரினை வெளியிட்டு வைப்பதில் நான் மன நிறைவு எய்துகிறேன். இப்பொழுது இந்த மலரிற்கு இதழாசிரியராக பொறுப்பேற்று பத்தாண்டு நிறைவை ஓட்டி சிறுவர் மலர் ஒன்றை வெளியிட தீர்மானித்தோம். இதன் பிரகாரம் முதன்முதலாக இம்மலரை வெளியிடுகிறோம். கடந்த பத்தாண்டு கால நடவடிக்கைகளை சிறப்பிக்கும் முகமாகவும் கடந்த கால நடவடிக்கைகள் பற்றிய சிறப்பம்சங்களை ஆவணப்படுத்தும் முகமாகவும் இம் மலர் வெளியிடப்பட வேண்டிய ஆதங்கம் உண்டாயிற்று எனவே சிறுவர் கழகம் இம்மலரை வெளியிடுவதில் பெரு மகிழ்வடைகிறது.

எமது கழகம் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களுக்கு பத்தாயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கி தன் பெருமையை மேலும் மெருகூட்டுகிறது.

எமது சிறுவர் கழகம் ஆண்டு தோறும் அயற் பாடசாலைகளை தன்பால் ஈர்த்து பொது அறிவுப் போட்டி ஒன்றை நடாத்தி வருகின்றது. இப்போட்டி வியாபகமடைந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ் இந்து மகளீர் கல்லூரி,

வேம்படி மகளீர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகியவைகளை ஒன்றிணைத்து பொதுஅறிவு போட்டிகளை திறம்படச் செய்து தரமான பரிசில்களையும் சானறிதழ்களையும் வழங்கி கௌரவிக்கிறது. எங்கள் கல்லூரியிலே பழைய மாணவர்களையும் மிக மிக முக்கியமாக யான் குறிப்பிடவேண்டியுள்ளது. புகழ் பூத்த எங்கள் கல்லூரியிலே கல்விகற்ற மாணவர்கள் உலகெல்லாம் புகழ் பரப்பி வாழ்ந்தார்கள், வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அன்பளிப்பினால் கல்லூரி வானளாவி உயர்ந்து நிற்கின்றது.

அத்துடன் எமது கழகம் வறிய மாணவர்களுக்கு கல்வி ஊடாக பல உதவிகளையும் செய்து வருவது சிறப்பம் சமாகும். இத்தோடு எமது சிறுவர் கழக சஞ்சிகையை நல்லொளி பரப்பி நானிலம் போற்ற ஞானவைரவ பெருமானின் பாதார விந்தங்களை நெஞ்சார நினைந்து இம்மலரை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பேருவகை அடைகின்றோம்.

இ. சுவிஸ்ரன்
சி. நிதர்சனன்

# OUR PRINCIPAL



MR.V. GANESARAJAH

## DEPUTY PRINCIPAL



MR.P.SRISKANTHARAJAH

## VICE PRINCIPAL



MR.C.THAVARAJAH

## VICE PRINCIPAL



MRS.S.SURENTHIRAN

## TEACHER INCHARGE



MRS.S.ARUNTHAVAPALAN

# OUR COMMITTEE MEMBERS

PRESIDENT



MAS G. USHATHAN

SECRETORY



MAS S. SARANGAN

TREASURER



MAS T. VAIKUNTHAN

VICE PRESIDENT



MAS V. THANUJAN

VICE SECRETORY



MAS G. VAIKUNTHAN

EDITOR



MAS S. SUHISTAN

## ASST EDITOR



MAS. S. NITHARSANAN

## BUSINESS MANAGER



MAS. R. ANOJAN

## நிர்வாக சபை 2008



இருப்பவர்கள் இடமிருந்து வலம் :- திருமதி த. சுரேந்திரன்(உப அதிபர்), திரு செ. தவராஜா(உபஅதிபர்)
மெ. ராம்ஜி(உப தலைவர்), திரு வீ. கணேசராஜா(அதிபர்), து. ஐங்கரன்(தலைவர்)
திரு பொ. சிறீஸ்கந்தராஜா(பிரதி அதிபர்), திருமதி சா. அருந்தவபாலன்(பொறுப்பாசிரியர்),
நிற்பவர்கள் :- ச. சத்தியன்(பொருளாளர்), பா.ஆஹீசன்(செயலாளர்),



# ஐக்கிய நாடுகள் சபையும் சிறுவர் உரிமைப் பிரகடனமும்

இரண்டாம் உலகப்போர் விளைவித்த நாசத்தால் பயங்கர விளைவுகளின் எதிரொலியாக எழுந்ததே ஐக்கிய நாடுகள் சபை. போரை ஒழிக்க பண்பாட்டு கூட்டுறவை வளர்க்க உலகமக்களின் முன்னேற்றத்திற்கும், நலவாழ்விற்கும் உதவ ஓர் உலக அமைப்பு உருவாக்கப்படவேண்டிய அவசியம் உணரப்பட்டது.

உலக நாடுகளின் அரசியல் அறிஞர்கள் இரண்டாம் உலகப்போரின் இறுதிக்கட்டத்தில் 1945 ஏப்ரலில், சான்பிரானசிஸ்கோ மாநாட்டைக் கூட்டினர். 50 நாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். இம் மாநாடே ஐக்கிய நாடுகள் சபையின் உரிமைப்பத்திரத்தினை வரைந்தது. இது 1945 ஒக்டோபர் 24ஆம் திகதி செயற்படத் தொடங்கியது.

இதுவே முதல் மனித இனக் கழகமாகும் ஏனென்றால் பன்னாட்டுக் கழகம் ஓர் ஐரோப்பியக்கழகமாகவே இருந்தது. அமெரிக்கா அதில் பங்கேற்கவில்லை தற்போது ஐ.நா சபை 192 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இதன் தலைமையகம் நியூயோக்கில் உள்ளது.

இதன் கொடியில் வெளிர்நீலப்பின்னணியில் வெண்மை நிறத்தில் ஐ.நா சபையின் சின்னமாக ஒலிவ் இலைகளுடன் கூடிய உலகப்படம் அமைக்கப்பட்டுள்ளது. ஒக்டோபர் 24 ஐ.நா தினமாகக் கொண்டாடப்படுகின்றது. ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஸ், சீனா, அரபிய மொழிகள் இச்சபையின் அலுவலக மொழிகளாகும்.

## ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம்

ஓர் முன்னுரையுடன் 111 விதிகளைக் கொண்டதாகக் ஐ.நா வின் குறிக்கோள்களை விளக்குகின்றது
அவையாவன:

1. வருங்கால உலகப் போரின் பேரழிவில் இருந்து காப்பது, உலக சமாதானத்தை நிலை நிறுத்துவது
2. அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவது.
3. உலக நாடுகளின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து நீதியை நிலை நாட்டுவது
4. சமுதாய முன்னேற்றத்தையும் உயர் வாழ்க்கைத் தரத்தையும் உருவாக்குவது.

## நாடுகளின் கோட்பாடுகள்

1. அனைத்து உறுப்பு நாடுகளும் கோட்பாடுகளின் கடமைகளை நம்பிக்கையுடன் சாசனத்தின் படி நிறைவேற்றக் கடமைப்பட்டவர்கள்.
2. தங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்த்துக் கொள்வர்.
3. எந்த உறுப்பு நாடும் மற்ற உறுப்பு நாடுகளுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடலாகாது.
4. உறுப்பு நாடுகளின் உள்நாட்டு விடயங்களில் ஐ.நா சபை தலையிடாது.

## ஆறு முக்கிய அம்சங்கள்

ஐ.நா சபை ஆறுமுக்கிய அம்சங்களைக் கொண்டு செயற்படுகிறது அவை

1. பொதுப்பேரவை - GENERAL ASSEMBLY
2. பாதுகாப்பு அவை - SECURITY COUNCIL
3. பொருளாதார மற்றும் சமூகக்குழு - THE ECONOMIC AND SOCIAL COUNCIL
4. அறங்காவலர் குழு - TRUTEESHIP COUNCIL
5. ஐ.நா செயலகம் - THE SECRETARIAT
6. பன்னாட்டு நீதிமன்றம் - THE INTERNATIONAL COURT OF JUSTICE

ஐ.நா. சபை உலகிற்கு ஆற்றிவரும் சேவைகள் அளப்பரியது. உலகின் பல நாடுகளில் மாபெரும் அழிவுகள் நடைபெறாது. தடுப்பதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது முதலாம் இரண்டாம் உலக மகா யுத்தங்களின் போது ஏற்பட்ட அழிவுகள் மீண்டும் வராது தடுப்பதனை இச்சபை உறுதி செய்கின்றது.

நாடுகளுக்கிடையே, இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் ஐ.நா. சபை வெற்றியும் பெற்றுள்ளது. உலகத்தினை அழிவில் இருந்து காப்பாற்றும் ஒரு நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது.

உள்நாட்டு போர்களினாலும் பஞ்சத்தினாலும் பாதிப்புற்ற மக்களுக்கு இவ்வமைப்பு உதவிக்கரம் நீட்டுகின்றது. நிவாரணமும் இதர வசதிகளும் வழங்குகின்றது. இலங்கையில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரினால் பாதிப்புற்ற மக்களுக்கு இச்சபை ஆற்றிய சேவைகள் எண்ணில் அடங்காதவையாகும்.

## ஐக்கிய நாடுகளின் பன்னாட்டுக் குழந்தைகள் அவசர நல நிதி

UNITED NATIONS INTERNAIONAL CHILDREN'S EMERGENCY FOUND (UNICEF)

ஐ.நா சபையின் 6 முக்கிய அம்சங்களில் ஒன்றான பன்னாட்டு நீதிமன்றத்தின் கீழ் இயங்கும் அமைப்பு இதுவாகும். 1946 டிசம்பர் 11ல் இது அமைக்கப்பட்டது. உலககுழந்தைகளின் உடல் நலம், சத்துணவு, சமூகநலம், கல்வி, தொழிற்பயிற்சி, முதலிய துறைகளில் அனைத்து நாடுகளிற்கும் இது உதவுகின்றது. பன்னாட்டு அரசுகள் தங்கள் நாட்டுக் குழந்தைகளின் முக்கிய தேவைகளை மதிப்பீடு செய்யவும் அவற்றை நிறைவேற்றவும் விரிவான திட்டங்களைத் தயாரிக்கவும் இவ்வமைப்பு உதவுகின்றது. இவ்வமைப்பின் தலைமைப்பீடம் நியூயோர்க்கில் உள்ளது.

பதினெட்டு வயதுக்குட்பட்ட சிறார்கள் அனைவருக்கும் ஒத்த கவனிப்பு அளிப்பதிலும் பாரபட்சம் காட்டாமல் இருப்பதற்கும் சுரண்டலில் இருந்து காப்பாற்றவும் உரிய

உரிமைகளை இவ்வமைப்பு வகுத்துள்ளது.

இது பிள்ளைகளுக்கென்றே பிரத்தியேகமாகத் தன்னை அர்ப்பணித்துள்ள நிறுவனமாகும். அது எல்லாப்பிள் ளைகளினதும் எல்லா உரிமைகளையும் பேணிப் பாதுகாக்கும் பணியில் ஐ.நாடுகள் அமைப்பின் வேறு அங்கங்கள், அரசாங்கங்கள், அரசசார்பற்ற அமைப்புகளும் பொதுமக்களுடன் இணைந்து செயலாற்றுகின்றது.

சிறுவர் உரிமைகள் பற்றிய ஐ.நாடுகளின் சமவாயம் சகல தேச வாரியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். எல்லாப் பிள்ளைகளுக்கும் உள்ள உரிமைகளினை இது வரையறுத்துள்ளது. உலகில் அனேகமாக எல்லா நாடுகளிலும் இதன் அடிப்படையிலேயே பிள்ளைகள் நடாத்தப்படுவர் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தில் உலகின் அரசாங்கங்கள் கைச்சாத்திட்டுள்ளன. இதன்படி இச்சிறுவர் உரிமைப் பிரகடனம் உலகநாடுகள் அனைத்திலும் கைக்கொள் ளப்படுகின்றன.

க. துவாரகன்
10F

குறள்:- இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்.

பொருள்:- செய்தே தீர வேண்டும் என்ற கட்டாய நிலை ஏற்பட்டாலும் தமது குடிக்குத் தாழ்வு வரும் செயல்களைச் செய்யக் கூடாது



# இன்றைய சமூகத்தில் சிறுவர்களின் நிலை

உன்னத வாழ்க்கையின் உயிர் பெறும் பருவமே சிறுவர் பருவமாகும். சிறுவர்கள் தமது எதிர்கால வாழ்க்கையை ஒரு மகிழ்ச்சிகரமானதாக அமைத்துக் கொள்வதற்கு ஏணிப்படிகளாய் அமைகின்றது. இவ் சிறுவர் காலப்பகுதியாகும். கல்வி, நட்பு, ஒழுக்கம், பணிவு, பிரிவு, முயற்சி போன்றவற்றை நாம் எம் வாழ்வில் சந்திப்பதற்கு இக்காலப்பகுதி அடியெடுத்துத் தருகின்றது. சிறுவர்களின் எண்ணம், சிந்தை, விடாமுயற்சி என்பவற்றிலேயே அந் நாட்டின் தலையெழுத்து தங்கியுள்ளது. ஆனால் இன்றைய சிறுவர்களின் தலையெழுத்து அவர்களின் கைகளிலேயே இல்லை. காரணம் சிறுவர் துஸ்பிரயோகம். இன்றைய சிறுவர்களின் கல்விக்கு கேள்விக்குறியாக அமைந்து விடுகின்றது. அவர்களின் உரிமை மறுக்கப்படுகின்றன. இக் காலப்பகுதியில் அவர்கள் பல பிரச்சனைகளை எதிர் கொள்கின்றனர்.

சிறுவர்களின் அடிப்படை உரிமைகளாக கல்வி, சுதந்திரம், சுகாதாரம் போன்றன காணப்படுகின்றன. ஆனால் இன்றை சமூகத்தில் அவர்களுக்கு இதில் ஒன்று கூட முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை. சிறுவர்களுக்குரிய கல்வி இன்று சீர் குலைந்து காணப்படுகின்றது. பாடசாலையில் சேர்வதற்குரிய வசதி கூட இன்று சிறுவர்களுக்கு இல்லாது காணப்படுகின்றமை அவர்களின் கல்வி வளர்ச்சித் தடைக்கு பெரிதும் காரணமாக அமைகின்றது. புத்தகங்கள் கிடைக்கப்பெறாமை, பணவசதி இல்லாமை போன்ற காரணங்கள் கல்வி வளர்ச்சித் தடைக்கு உதாரணங்களாக அமைகின்றது. இதில் முக்கியமாக பண

வசதியின்மை ஏழைச் சிறுவர்களின் கல்வி வாழ்க்கை அவர்களின் கனவாகவே தினமும் காணப்படுகின்றது. ஆறுமுக நாவலர் சைவப் பெரியார் க.சிவபாத சுந்தரனார் போன்ற பெரியார்களும் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பெரிதும் பாடுபட்டார்கள். ஆனால் இன்றைய கலாசார சீர்குலைவு காரணமாக கல்வி அழிந்து விடும் தறுவாயில் காணப்படுகிறது. இன்றைய சமூகத்தினரின் கலாசார சீரழிவு சிறுவர்களின் கல்வி வளர்ச்சியின்மைக்கு பெரிதும் காரணமாக அமைகின்றது.

சிட்டுக் குருவி போன்று சிட்டாய் பறந்து திரியும் சிறுவர்கள் அன்றைய காலப்பகுதியில் காணப்பட்டார்கள். காரணம் அன்றைய சூழ்நிலைமைகள் அமைதியான சூழல் பாதுகாப்பு , யுத்த நிலைமைகள் அற்ற நிலை, ஆயுதங்கள் இன்மை போன்றவையாகும். சிறுவர்களின் சுதந்திரம் அவர்களின் வாழ்க்கையின் தேவையாகக் காணப்பட்டது. ஆனால் இன்றைய சூழ்நிலைகள் சிறுவர்களின் வாழ்க்கையில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைகின்றது. சிறுவர்களின் சுதந்திரம், பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்பட்டால் அவர்கள் கல்வியினையும் இலகுவாக மேற்கொள்ள முடியும்.

சிறுவர்களின் அடிப்படை உரிமைகளாக கல்வி , சுதந்திரம் மட்டுமன்றி சுகாதாரமும் முக்கியத்துவம் வகிக்கின்றது. "சுத்தமான வாழ்வே சுகமான வாழ்விற்கு வழி வகுக்கும்" இது ஆன்றோர் வாக்கு.எனவே சிறுவர்களின் வாழ்க்கைக்கு சுகாதாரம் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆனால் இன்றைய சமூகத்தில் பல ஒழுக்க மற்ற நடவடிக்கைகள் காரணமாக சுகாதரம் அற்றுப் போய்விட்டது. அதன் காரணமாக சிறுவர்களின் பாதுகாப்புப் பற்றி சிந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு சிறுவர்களுக்கு கல்வி , சுதந்திரம் ,சுகாதாரம் போன்றவற்றில் பல பிரச்சனைகள் காணப்படுகின்றன. ஆனால் இப் பிரச்சனைகள் பற்றி இன்றைய சமூகம் சிந்தித்ததாகத் தோன்றவில்லை. இன்றைய காலகட்டத்திலே சிறுவர்கள் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து செயற்பட வேண்டிய கட்டாயத்திற்குள் உட்பட்டுள்ளனர். எனவே தான் சிறுவர்களின் உரிமைகள் உரிய முறையில்கிடைக்கப் பெறும்

வாய்ப்புக்கள் ஏற்படும். எதிர் காலத்தில் நாட்டைக் கட்டியெழுப்பும் தகுதி இன்றைய சிறுவர்களிடையே காணப்படுகின்றது. எனவே நாம் சிறுவர்களின் உரிமைகள் உரியவாறு கிடைக்கக் கூடிய வகையில் செயற்பட்டு நாளைய சமுதாயம் இன்றைய சிறுவர் களின் கையில் என உணர்ந்து அவர்களுக்குரிய கல்வி சுதந்திரம் என்பன உரிய வகையில் கிடைக்கப் பாடுபட வேண்டும்.

சி. கௌரி சங்கர்
10F



## இன்றைய சிறுவரும் அவர் தம் உளநலனும்.

இன்றைய சமூக சிறார்கள் அனைவருமே பொதுவாக குறித்த சில நெருக்கடிகளின் மத்தியில் கற்க வேண் டிய சூழ்நிலையில் வாழ்கின்றனர். இத்தகைய நிலையிலும் எப் பாடுபட்டாவது மாணவர்களின் உளவிருத்தியை சீராக பேணுவதன் மூலமே எதிர்கால சமூகத்தைப் பாதுகாக்க முடியும். எனவே , மாணவர்களின் உள நல விருத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் குடும்பச் சூழல், பாடசாலைச்சூழலின் பொறுப்புக்கள் பற்றியும் , சிறார்கள் மத்தியில் தற்கால நெருக்கீடுகள் செலுத்தும் தாக்கம் பற்றியும் ஆராய்வோம்.

குடும்பச்சூழல் என்பது சிறுவன் ஒருவனின் சிறப் பான வளர்ச்சிக்கு அத்திவாரமிடுவதாகும். இத்தகைய குடும்பச் சூழல் சிறப்பாக அமைவதே சிறுவனின் சமூக மயமாக்கலை சிறப் பாக ஆக்க முடியும். எனினும் துரதிஷ்டமாக தற்காலத் தில் வறுமை , மதுப்பாவனை , போர் அனர்த்தம் , நவீன மயப் படுத்தல் என்பவற்றால் குடும்பச்சூழல்காரணிகள் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளன.

சிறப்பான குடும்பச்சூழல் ஒரு சமநிலையைக் கொண் டிருக்க வேண்டும் , சரியான வழிநடத்தலைக் கொண்டிருக்க வேண்டும் , பரஸ்பர புரிந்துணர்வுடைய குடும்ப உறுப்பினர்கள் காணப்படவேண்டும், குறித்த இலக்கை நோக்கி நகர்வதாகவும், கட்டுப்பாடுடையதாகவும் இருத்தல் வேண்டும். சிறுவர்களை

கட்டுப்படுத்தும் போது கட்டுப்பாடுகளை திணிக்காமல் அதன் நன்மைகளை விளக்கி, அதனை அவர்கள் சுயமாக ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும். சில சிறுவர்களிடம் ஏற்படும் பயங்கள், தன்னம்பிக்கை குறைவு என்பவற்றை இணங்கண்டு அவர்களை அதிலிருந்து விடுவிக்க வேண்டும். சிறுவன் ஒருவனை படிக்கச் செய்ய வேண்டும் எனில், கல்வியை அடக்குமுறையால் திணிக்காது படிக்கும் ஆர்வத்தை இயல்பாகத் தூண்டக் கூடிய வகையில் நடந்து கொள்ள வேண்டும் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு சிறந்த வழிகாட்டிகளாக இருத்தல் வேண்டும். பிள்ளைகளின் நடவடிக்கை தொடர்பாக பெற்றோர் அறிந்திருப்பதோடு பிள்ளைகளுடன் எப்போதும் ஆரோக்கியமான கலந்துரையாடல்களை நடாத்தி, அவர்களை வழிப்படுத்துவது இன்றைய சூழலில் இன்றியமையாத நடவடிக்கையாகும்.

பிள்ளைகளின் வளச்சியில் குடும்பச் சூழல் போலவே செல்வாக்குச் செலுத்தும் மற்றொரு சூழல் பாடசாலைச் சூழல் ஆகும். பிள்ளைகளின் சமூக மயமாக்கலின் முக்கிய படியாக விளங்கும் பாடசாலைச் சூழல் அவர்களின் இயல்புகளை தீர்மானிக்கும் ஒரு இடமாகவும் பரிணமிக்கிறது. பாடசாலைகள் சிறாரின் கல்வி வளர்ச்சி நற்பண்பு விருத்தி, உளநல மேம்பாடு மற்றும் அவர்களின் ஆற்றலை வெளிக்கொணர்தல் என்பவற்றில் முக்கிய பங்கு ஆற்றுதல் வேண்டும்.

பாடசாலைச் சூழலின் சிறப்பிற்கு முக்கிய பங்காளராக அமைவோர் ஆசிரியர்களாவர். பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கான எல்லா உத்திகளையும் கையாண்டு மாணவர்களின் கல்வி, உளநல விருத்தியை மேம்படுத்துவதில் ஆசிரியர்கள் பெரும் பங்காற்ற வேண்டும். தன்னுடைய அறிவை மாணவர்களுக்கு திணிப்பதை விட உரிய உபகரணங்களையும், உத்திகளையும், செயற்பாடுகளையும் மற்றும் போதிய ஏனைய வளங்களையும் பாவித்து கல்வியை மாணவர்களுக்கு இலகுவில் விளங்கக்கூடிய வகையில் கற்பிப்போரே சிறந்த ஆசிரியராக கருதப்படுவர். ஆசிரியர்கள் கட்டுப்பாடாக இருப்பது மிகவும் அவசியம். எனினும் பிள்ளைகளை கடுமையாக அடித்து, மிரட்டி, சரீரரீதியான கடுமையான தண்டனைகள் வழங்குவதுசிறுவர்களின் உளநல விருத்திக்கு உகந்தது அல்ல. இதன் மூலம்

அச்சமான மன நிலைக்கு மாணவர்கள் தள்ளப்படலாம். இத்தகைய மிகையான அழுத்தத்திற்க உட்பட்ட சிறுவர்களே சிறிது காலத்தில் கட்டுக்கடங்காதவராக மாறுவர். சிறுவர்களின் தன்னம்பிக்கையை வளத்தெடுப்பதில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர் தேவையான போது பாராட்டுவதுடன் தேவையான போது கண்டித்து பொருத்தமான தண்டனைகள் வழங்கி மாணவர்களை வழிநடத்தல் ஆசிரியர் பணியாகும்.

பாடசாலை, சமூக பங்காளர்களின் சிறப்பான செயற்பாட்டின் மூலமே சிறந்த மாணவர் சமூகம் உருவாக முடியும். பாடசாலைச் சூழல் பொருத்தமாக அமையாவிடின் அது எதிர்மாறான குணம் கொண்ட மாணவர் உருவாக வழிசமைப்பதுடன், எதிர்கால சமூகம் ஆரோக்கியமற்றதாகவும் மாறக்கூடும்.

இன்றைய சமூகச்சூழ்நிலைகளும் மாணவர் வாழ்வில் பெரும்தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. போர், இடப்பெயர்வு, வறுமை, வன்முறைகள், கடும் கட்டுப்பாடுகள் என்பன மாணவர் மத்தியில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. சிறுவர் வன்மமடைதல் இன்றைய போர்ச்சூழலின் ஒரு வெளிப்பாடாக கருதப்படுகிறது. இன்றைய சிறுவர்களின் விளையாட்டு உபகரணமாக யுத்த உபகரணங்களே பயன்படுகின்ற துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய இடர்களின் மத்தியிலும் சிறுவர்களின் உளநலத்தை விருத்தி செய்ய பெற்றோரும் ,ஆசிரியரும் சிறப்பான பங்களிப்பை ஆற்ற வேண்டும். சமூக அக்கறையுடன் ஆசிரியர்கள் இப்பணியில் ஈடுபட வேண்டும் வடுக்களால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு உள ஆற்றுப்படுத்தல்கள் மூலம் நல் இயல்புகளை ஏற்படுத்த முடியும் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆசிரியர்கள் முன்வர வேண்டும். இவ்வாறு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுத்துவதன் மூலமே ஆரோக்கியமான எதிர் கால சமூகத்தை உருவாக்க முடியும்.

**இரவிந்திரன் ரணிசன்**
**10D**



# "புத்திசாலிகள்"

நியூட்டனின் விதிகள்
பைதகரசின் தேற்றம்
பழங்கால விஞ்ஞானிகளின்
பரதேரித் தோற்றம்
எதுவும் எந் நினைவில் இல்லை

தே சக நீர் தேநீர்
தேன் சக நீர் தேநீர் - இந்த
புணர்ச்சி விதிகள் எதுவும்
புரியவில்லை - எனக்கு
புரியவில்லை என்று கவலையுமில்லை.

கணிப்பீட்டுப் புள்ளிகள் யாவும்
கறுப்பாய் வந்தது
அவை என் நிறத்திற்கு இட்ட
நிறமென நினைத்துக் கொண்டேன்

வட்டத்தேற்றத்தை நிறுவ
கஸ்ரப்பட - என்னை
கணித ரீச்சர் முழு மக்கென
மகுடம் சூட்டினார்

அழகான அந்த
ஆங்கில ரீச்சரும்
வழக்கமான புரியாத பாசையில்
"பூல்" என புகழாரம் சூட்டினார்

உருப்படாது என சீல் குத்தி
வெளியே எறிந்த போது தான்
எனக்குப் புரிந்தது!
எனக்கு புரியவைக்கும் அளவிற்கு
இவர்கள் புத்திசாலியில்லையென்று.

## என்னவென்று அறியா வயதில்

என்னவென்று வயதில்
பெண்களுக்கு ஒரு விழா
பூப்புனித நீராட்டு விழா

எட்டுக்கோடு விளையாடிய என்னை
எட்டி அறைக்குள் அடைத்து
பெரியவளாகி விட்டாய் என
பெரிதாக வெருட்டி.......

கொஞ்சம் கொஞ்சமாய் சேர்த்த
பணத்தை கொட்டிச் செலவழித்து....

கொட்டகை பிடித்து
கொட்டுமேழம் அடித்து
ஒரு மாதம் பள்ளியால் மறித்து
ஒரு கொண்டாட்டம் எடுத்து....

அம்மனுக்கு அலங்காரம் செய்தது போல்
அழகாய் உடுத்து
ஆயிரம் பேருக்கு முன்னே
ஐயோ - நிறுத்தி

சினிமா நடிகை போல்
சில்லறையாய் சிரிக்க வைத்து
காடுமேடெல்லாம் ஓடவிட்டு
கமறாவால் சுட்டு

என்னவென்றறியா வயதில்
எனக்கொரு விழா எதற்கு

என்மகள் திருமணத்திற்கு
தயாராகி விட்டாள் என்று பறையடிக்கவா?
அன்பாக இருக்கும் அப்பா அம்மாக்கள்
கொஞ்சம் அறிவாகவும் இருக்க் கூடாதா?

சு. சாரங்கன்
12E
2011 - BIO



# சிறுவர் நலன் காப்போம்

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டிலே மிக நவீன மயமாக்கப்பட்ட உலகத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மிக மிக அவசரமான உலகம் இது என்பதால் நாம் எமது உற்றாரையும் சுற்றத்தாரையும் குடும்பத்தையும் குழந்தைகளையும் மறந்து இவ்வுலகத்தின் போக்கிலேயே ஓடிக் கொண்டிருக்கின்றோம். "இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" என்னும் பொன்மொழியை மறந்து இன்று, சிறுவர்களது நலனைக் கருத்திற் கொள்ளாது, சுயநலமனப்பான்மையோடு இருக்கும் நாம் எமக்கு நாளை ஏற்படவிருக்கும் பாரிய பிரச்சினையைப் பற்றி யோசிக்கவில்லை

ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து அது பெரியவனாகும் வரை மட்டுமே அது சுயாதீனமாய் செயற்படாது இருக்கிறது. எனவே அதனை நலத்துடனும் சிறந்த பழக்கவழக்கங்களுடனும் சேர்த்து வளர்த்தால் மட்டுமே அது பெரியவன் ஆனதும் அதே போன்று எம்மையும் தனது சமூகத்தையும் கவனிக்கிறது. இதற்காகத் தானே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சிறுவர் உரிமைகள் சமவாயம் என்ற உலகின் ஒரே ஓர மிகப் பெரிய சமவாயத்தை உருவாக்கி அதன்மூலம் சிறுவர்கள் அதாவது பதினெட்டு வயதிற்கு குறைந்த யாவரும் நலத்துடன் வாழ 54 முக்கிய சிறுவர் உரிமைகளை 1989ல் நவம்பர் 20இல்

அறிமுகப்படுத்தி 1990 செப்ரெம்பர் 18ல் அறிமுகம் செய்தது. சிறுவர்கள் பாராபட்சம் காட்டப்படாமை (2வது சரத்து) அவர்கள் உரிமைகள் வழங்கப்பட்டு (3வது சரத்து) அவர்களது கருத்துச் சுதந்திரம் வெளிக்கொணரப்பட்டு (12வது சரத்து) அவர்கள் நிம்மதியாக வாழ்ந்து தம்மை விருத்தி செய்து கொள்ள வேண்டும். (6வது சரத்து) என்ற நோக்கிலேயே 192 நாடுகள் இணைந்து இந்த மாபெரும் சமவாயத்தை உருவாக்கியுள்ளனர்.

மேற்குறிப்பிடப்பட்ட நான்கு முக்கிய உரிமைகளும் அனைத்து நாடுகளிலும் கட்டாய அமுலுக்கு வந்தது மட்டுமல்லாது 18 வயதுக்கு உட்பட்ட அனைவருக்கும் கட்டாய கல்வி என்ற நோக்கமும் வெளியிடப்பட்டதே. ஏன்?

ஆம் சிறுவர்களது நலன்கள் மதிப்பளிக்கப்பட்டு அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இப்படி எல்லாம் பல வகையிலும் சிறுவர்களது உரிமைகள் மதிப்பளிக் கப்பட்டு அமுலுக்கு வந்திருக்கும் இந்நிலையில் அவற்றைப் பேணி நாளைய சுதந்திரமான ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க வேண்டிய நாமே சிறுவர்களது உரிமைகளை மதிக் காது அவற்றை துஸ்பிரயோகம் செய்யலாமா?

**"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே**
**அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே"**

என்ற அற்புதமான பாடல் வரிகளை எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய நாமே அதை உதாசீனப்படுத்தி சிறுவரது உரிமையையும் நலனையும் பாதிக்கும் வகையில் எதையாவது செய்யலாமா?

இன்று ஒரு தொழிலாளி, கடினமாக உழைத்து அதில் வரும் சொற்ப வருமானத்தால் தனது பிள்ளைகளை படிக்க வைத்தால் நாளை அவனது வாழ்வும் அவன் பிள்ளைகளது வாழ்வும் ஒளிமயமானதாக இருக்கும். ஆனால் அதற்கு நேர் மாறாக தான் சுகமாக இருக்க வேண்டும் என எண்ணி தனது பிள்ளைகளை வேலைக்கமர்த்தி அந்தப் பிஞ்சு நெஞ்சங்களிலே நஞ்சை விதைத்தால் அவனே அல்லது அவன் பிள்ளைகளோ சாதாரணமாகவாவது வாழ முடியுமா?

இன்று சிறுவர்களது எண்ணிக்கை அதிகமாய் உள்ள நாடுகள் நாளை வளமடையும் என்பதை நாம்

எமது பாடத்திலே கற்றோமே ஆனால் இதை இன்றைய நடைமுறைச்சூழலிலே காணவில்லையே? ஏன்? சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர் இன்று இலங்கையிலே எத்தனை ஆயிரம் சிறுவர்கள் யுத்தத்தால் பாதிக்கப்படுகின்றார் கள் என்பது எமக்குத் தெரியுமா?

இவை எல்லா வற்றிற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவே இன்று அனைத்துப் பாடசாலைகளிலும் சிறுவர் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் சிறுவர்கள் தமது நலனைக் காப்பது மட்டுமன்றி தமது திறன்களையும் விருத்தி செய்து கொள்ளக் கூடியதாய் உள்ளது. இவை அனைத் தையும் கருத்திற்கொண்டுதான் ஒக்டோபர் 1ஐ உலக சிறுவர் தினமாய் அறிமுகப்படுத்தியுள்ளது ஐ.நா. ஸ்தாபனம். எனவே போனவை போக இனியாவது சிறுவரது உரிமைகளையும் நலன்களையும் பாதுகாத்து ஒரு ஒளிமயமான, ஆரோக்கியமான சமூகத்தை நாளைய சந்ததிக்கு உருவாக்கிக் கொடுப்போமாக இது எமக்கு ஒரு முக்கியமான கடமையுங்கூட!

**வ. தனுஜன்**
**கணிதப்பிரிவு**
12B



## சிறுவர் நலன்

சிறுவர்கள் எனப்படுவோர் தாயின் கருவில் இருந்து 18 வயதிற்கு உட்பட்டோர் ஆவர். இச் சிறுவர் நலனைப் பாதுகாக் கும் வேலை முதலில் பெற்றோர்களுக்கும் அடுத்த படியாக பாடசாலை அதிபர், ஆசிரியருக்கும், இதற்கு அடுத்த படியாக அரசாங்கத்தையும் சாரும்.

இச் சிறுவர் நலனைப் பாதிக்கும் செயற்பாடுகளில் ஒன்று சிறுவர் துஷ்பிரயோகம் இது எமது நாட்டிலும் சரி வேறு நாடுகளிலும் சரி அதிகளவு நடந்த வண்ணம் உள்ளது. சிறுவர் துஷ்பிரயோகம் எனப்படுவது தனிநபராலோ குழுவினராலேயோ சம்மதத்துடனோ, சம்மத மின்றியோ சிறுவர்களின் வளர்ச்சி

விருத்தி, ஆரோக்கியம் என்பவற்றைப் பாதிக்கும் செயற்பாடு ஆகும்.

இச் சிறுவர் துஸ்பிரயோகத்தில் அடங்குபவை பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர்களுக்கு கொடுமைகளைச் செய்தல், சிறுவர் உரிமையைப் பேணுவதை நிறுத்தல் என்பனவாகும். இச் சிறுவர் நலனைக் கெடுக்கும் செயற்பாடாக சிறுவர்களுக்கு கொடுமை அழித்தல் மற்றும் சிறுவர்களை சுதந்திமாக இருப்பதைத் தடுத்தல் என்பன அடங்கும்.

இச் சிறுவர் துஷ்பிரயோகங்களில் சிறுவர் நலனைக் கெடுப்பதற்காக செய்யும் ஒரு செயல்தான் பாலியல் துஷ்பிரயோகம் ஆகும். இந்தச் செயற்பாடு நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே செல்கின்றது. இது சிறுவர்களுக்கு ஏற்படுவதற்கு காரணமாக விளங்குவது அவை பற்றி எமக்கு போதிய அளவு விழிப்புணர்வு இல்லாமையே ஆகும்.

அடுத்து சிறுவர்களை கொடுமைப்படுத்தல், சிறவர்களை வேலைக்கு அமர்த்துதல் என்பவற்றைப் பார்ப்போமேயானால் பெற்றோர் வேலை செய்வதை நிறுத்தி விட்டு சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் ஆகும். அடுத்து சிறுவர்களின் உரிமைகளைக் கொடுக்க மறுத்தல் ஆகும். சுதந்திரத்தையும் பறிக்கின்றார்கள். சில பெற்றோர்கள் அதாவது சிறுவர்களுக்கு தேவையானவற்றை பெற்றுக் கொடுக்காமல் விடுதல், சிறுவர்களை உல்லாசமாக அதாவது கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என்று கட்டளை இடுகின்றனர். இப்படிப்பட்ட போக்கினால் சிறுவர்களின் நலம் பாழாக்கப்படுகின்றது.

இந்தியா உபகண்டத்திலே சிறுவர் நலம் பாதுகாக்கின்றோம் என்று தான் கூறகின்றனர். ஆனால் அங்கு சரித்திர வரலாற்றில் சிறுவர் நலனைக் கெடுக்கும் செயற்பாடு ஒன்று நடந்துள்ளது. ஏனெனின் 2500 வருடங்களுக்கு முன்னர் ஒரு சிறுவன் முகம் கொடுத்த வரலாறுதான். அதாவது "சோம்பகா" என்னும் குழந் தையின் வளர்ப்புத் தந்தையானவன் அச்சிறுவனைப்பிணத்துடன் கட்டி சுடலையில் மிருகங்களுக்கு இரையாகட்டும் எனப் போடப் பட்டிருந்தான். அதைக் கண்ட புத்தர் பெருமான் அப்பிள்ளையை மீட்டு தர்மபோதனை வழங்கி திடமாக்கினார். இது பழமை வாய் ந்த சரித்திர சிறுவர் நலனைக் கெடுக்கும் செயற்பாடாகும்.

சிறுவர் நலனைக் கெடுப்பதால் ஏற்படும் விளைவுகளாவன திருமணத்திற்கு முன் கருத்தரித்தல், உளரீதியாகப் பாதிப்படைதல், பாலியல் இம்சைக்கு உள்ளாதல், தற்கொலைச் செயற்பாடு, சமூகத்தால் புறந்தள்ளப்படல் போன்றவை ஆகும்.

இச் சிறுவர் நலனைப் பாதுகாப்பதற்காக செய்ய வேண்டியது பற்றிப் பார்த்தால் சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு தகுந்த தண்டணை அளித்தல், அரசாங்கம் சிறுவர் நலனைப் பாதுகாப்பதற்காக பல நிறுவனங்களை அமைத்தல்.சுகாதாரத் திணைக்களம் பாலியல் துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு அரசாங்கம் தகுந்த தண்டனை அளிக்க வேண்டும்.

“ குழந்தையும் தெய்வமும் ஒன்று தான் ” என்பார்கள் முதியோர்கள். ஆகவே மேற்கூறிய வாக்கிற்கிணங்க நாம் சிறுவர் நலத்தைப் பேணி சிறுவர்களுக்கு உதவுவோமாக.

க. தபேசன்
11F



## சிறுவர்களின் உள்ளங்களும் ஊடகங்களும்

சட்ட ரீதியாக சிறுவர்களின் வயது பதினெட்டு வருடத்துக்கு குறைவானதோடு சமூக ரீதியாக அதே சிறுவர்களைப் பற்றி “பால வயதினர்” என வரைவிலக்கணம் கூறப்படுகின்றது. அதாவது பெற்றோரின் அல்லது பொறுப்பாளரின் அல்லது பாதுகாப்பாளரின் வழிகாட்டலில் சீவிப்பவர்களாக இருப்போரைக் குறிக்கின்றது. எட்டு வயதிற்கு கூடிய பிள்ளை சட்டத்தில் கூறியுள்ள பிள்ளைப் பருவத்தில் சேர்க்கப்படுவதில்லை.

ஒரு காலத்தில் உலகில் “வளர்ந்த மனிதனின் சிறிய உருவமே பிள்ளை’ என்றே கருதினர். இருந்த போதும் சிக்மன் பிராய்ட் என்பவரால் நவீன உளவியல் கண்டுபிடிப்புடன் ”பிள்ளை” என்பதற்கு புதிய வரைவிலக்கணம் எடுக்கப்பட்டது “பிள்ளை என்பது பிள்ளையே என்று அல்லாமல் வளர்ந்த மனிதனின் சிறிய உருவமல்ல” என்னும் கருத்து அவர்

முன்வைத்த புதிய எண்ணக்கரு ஆகும்.

இதன்படி பிற்காலத்தில் பிள்ளை பற்றிய பல்வேறு ஆய்வுக்கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுள் மிகவும் முக்கியமான ஆய்வுக் கற்கையாக கருதப்படுவது பியாஜே என்னும் கல்வியாளரால் மேற்கொள்ளப்பட்ட கற்கையாகும். அவரது ஆய்வின் படி பிள்ளையின் விருத்தியானது நான்கு பருவங்களில் காட்டப்பட்டுள்ளது. அவற்றின் முக்கியத்துவம் என்னவெனில் ஒவ்வொரு பருவத்திலும் பிள்ளையின் உள விருத்தியானது ஒழுங்கு முறைப்படி நடைபெறுகிறது. என்பதாகும். இதற்காக சூழலில் ஏற்படுத்தப்படுகின்ற தாக்கம் மிக விசாலமானதாகும். ஊடகங்கள் சூழலுக்கு உரித்தாகின்றன. இதற்கேற்ப ஊடகங்கள் வழியாக கிடைக்கின்ற தீமையான தாக்கங்கள் இவ் வயதுப் பிள்ளைகளின் உளவிருத்திக்கும் அதிக பாதிப்பினை ஏற்படுத்தும் அதற்கு முக்கிய காரணம் அவ்வவ் அபிவிருத்திப் பருவங்களுக்கு பொருத்தமில்லாத பல விடயங்கள் ஊடகங்கள் வழியாக முன்வைக்கப்படுவதே ஆகும். பியேஜேயினால் காட்டப்பட்டுள்ள பிள்ளை விருத்திப் பருவங்கள்

1. புலன் இயக்கப் பருவம் - (0-2 வருட வயது)
2. தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவம் - (2-7 வருட வயது)
3. தூல சிந்தனைப் பருவம் - (07-11 வருட வயது)
4. நியம சிந்தனைப் பருவம் - (12+)

பிள்ளையின் வாழ்க்கையில் ஒவ்வொரு வயதுத் தொகுதியிலும் நடத்தை முறைகள், கற்றல் முறைகள், எண்ணங்கள், செயற்படும் விதம் மற்றும் சமூக மயமாக்கல் ஆகியன வேறுபடுகின்றன. என்பதை பியாஜேயின் பிள்ளை விருத்தி பருவங்கள் உறுதி செய்கின்றன. பிள்ளைப்பருவம் மிகக் குறுகிய பருவமாயிருப்பினும் அது மனிதனின் வாழ்க்கையின் ஆரம்பப் பருவமாகும்.

எனவே இப்பருவத்திற்குரிய காலத்தில் உருவாக்கி கொள்கின்ற நடத்தைகளே அம்மனிதனின் எதிர்கால வாழ்க்கைப் பாதையை தீர்மானிக்கின்றன. அவ்வாறே மொழிவிருத்தி பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை பிள்ளையொன்று பிள்ளைப் பருவத்தின் ஆரம்ப காலத்திலேயே கற்கின்றது. இதில் மிக முக்கியமாவது தாமே இயல்பாகவே கற்றுக் கொள்கின்றமையாகும்

இங்கே சிறுவர்களின் சூழல், பிள்ளை தானே இயல்பாகக் கற்றுக் கொள்வதில் மிகவும் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றுள் மிகவும் தாக்கமுடைய வீட்டுப் பொருளாவது வெகுசன ஊடகமாகும் . பெற்றோர் தனிநபர், நண்பர்கள் மற்றும் உறவினர்களோடு ஒப்பிடுகையில் வெகுசன ஊடகம் சிறுவர் மீது உள நடத்தைகளை மிகவும் இலகுவாக செயற்படுத்தக் கூடிய நிலையாகும். பிள்ளைப் பருவத்தில் ஊடகங்களை பாவிப்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். என்பது இதன் காரணமாகவே ஆகும்.

## சிறுவர் நுகர்வுப் பெறுமதி

வெகுசன ஊடகங்கள் மிகக் கூடுதலாக இலக்கு வைக்கின்ற நுகர்வோர் குழுக்களை வகைப்படுத்த முடியும்.

1. பெண்கள்
2. இளைஞர்கள்
3. சிறுவர்கள்

சிறுவர்கள் ஏனைய இரு வகையினரையும் விட வித்தியாசப்படுவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. முதலாவது சிறுவர்கள் மிக விரைவாக சிற்சில விடயங்களால் ஆகர்ச்சிக்கப்படுவதற்கும் அல்லது எழுச்சியுறச் செய்யவும் கூடிய மிகவும் மென்மையான உள்ளங்களைக் கொண்டிருத்தலாகும்.

இரண்டாவதாக சிறுவர் ஒரு சுதந்திர நுகர்வோனாகவும் பொருட்களையும் தேர்ந்தெடுப்போனாக கொள்வனவு செய்வோனாக இல்லாதிருப்பதாகும். சிறுவர்களின் நுகர்வுப் பெறுமதி ஊடகங்களுக்கு மிகவும் முக்கியமாவது இதன் காரணமாகவே ஆகும்.

விசேடமாக தொலைக்காட்சி, வானொலி, ஊடகங்கள் சிறுவர்களிடம் ஏற்படுகின்ற கவர்ச்சி மிகவும் உயர்ந்து காணப்படுகின்றன. இதன்படி தொலைக்காட்சி மிகவும் பிரபல்யமான ஊடகமாகும். செய்தித்தாள் ஊடகங்கள் கூட சிறுவர்களுக்கான பொதுப்பக்கங்களை ஒதுக்குதல் சிறுவர் களுக்கான சிறந்த சஞ்சிகைகளை தயாரித்து செய்தித் தாளுடன்

சேர்த்து வழங்குகின்றன. இதன் வழியாக சிறுவர்களை கவர முடியும் என்ற நோக்கத்திலேயே சிறுவர்களின் நுகர்வுப் பெறுமதியை இவ்வாறு ஆய்வு செய்ய முடியும். சிறுவர்களின் உணர்வுகளைத் தூண்டக் கூடிய பல விதமான பண்டங்கள் ஊடகங்கள் வாயிலாக முன்வைக்கப்படுகின்றன. இவற்றின் மூலமாக சிறுவர்கள் அப்பண்டங்களைப் பாவிப்பதற்கான ஆசையை அவர்களிடம் தூண்டி விடுவதே இங்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகளாகும். சிறுவர்களின் நுகர்வுக்காக பல்வேறுபட்டவற்றை முன் வைப்பது ஒரு வர்த்தக செயற்பாடாகும். இவ் விபரங்களை வெகுசன ஊடகங்கள் வழியாக முன் வைப்பதும் ஒரு வர்தகச் செயற்பாடாகும்.

விளம்பரங்கள் தயாரிக்கப்படுவது சிறுவர்களின் உள்ளங்களைக் கவரும் விதத்தில் ஆகும். அவ்வாறு பல்வேறு பண்டங்களை அல்லது சேவைகளை சிறுவர்களுக்கு முன் வைக்கும் உரிமை உண்டென வர்த்தகர்கள் எண்ணுவதோடு அவர்களது குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக சிறுவர்களை தூண்டும் விதத்தில் விளம்பரங்களை தயாரித்திட தமக்கு உரிமை உண்டென விளம்பர தயாரிப்பாளர்களும் எண்ணுகின்றனர். விளம்பரதாரர்கள் தமது கட்டணத்தை செலுத்துவார்களேயானால் அவ் விளம்பரங்களை வெளியிட தமக்கு உரிமை உண்டென ஊடக நிறுவனங்கள் எண்ணுகின்றன. இங்கு மாற்றமொன்று செய்ய வேண்டியது என்னவெனில் சிறுவர்களுக்கு விழிப்புணர்வு அறிவு மற்றும் விளக்கத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும். இல்லையெனில் சிறுவர்களுக்கான பல்வேறு பண்டங்களை ஆக்குதல் மற்றும் முன் வைத்தல் தொடர்பான ஒழுக்க நெறியை அல்லது வேறு ஒழுங்கு முறைகளையும் அரசாங்கத்தின் பங்களிப்போடு தயாரித்தல் வேண்டும்.

சிறுவர்களிடம் உருவாக்கப்படுகின்ற கேள்வி, தொழிற்படு கேள்வியாவது எப்பொழுதெனில் அதற்காக பெற்றோரால் அல்லது வேறு வளர்ந்தோரால் பணம் செலவழிக் கப்படும் போதாகும். கேள்வி சிறுவர்களின் தாயிருக்கும் போது பெற்றோரின் செலவழிக்கும் பாணியும் வேறுபடுகின்றது. அதாவது சிறுவர்களுக்காக பணம் செலவழித்திட பெற்றோர் தயாராகவுள்ளனர். இதன்படி சிறுவர்கள் நுகர்வோராகவும் கேள்வியாளராகவும்

இருப்பார்களேயல்லாமல் செலவழிப்பவர்களாக இருக்க மாட்டார்கள்.

## "THE GREAT END OF LIFE IS NOT KNOWLEDGE BUT ACTION"

**"வாழ்வின் மிகப்பெரிய முடிவு அறிவல்ல செயற்பாடே"**

ம. கிரிஜன்
10D

J.H.C

## இந்து அன்னையின் வளர்ச்சியில் சிறுவர்கழகம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சிறுவர் கழகம் 2000ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் 23ம் நாள் புதன்கிழமை திருமதி சாந்தி அருந்தவபாலன்(பொறுப்பாசிரியர்) தலமையில் ஆரம்பிக்கப்பட்டது. செல்வன் செ. பிரசாந்த் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டாயிரம் ஆண்டிற்கான சிறுவர் தின நிகழ்வு 02.10.2000இல் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறுவர் உரிமைகள் அதிகாரி V.G அல்பிரட் பாலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திரு M. இக்னேசியஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். 07.11.2000 அன்று "SAVE THE CHILDREN" பணிப்பாளர் V.G அல்பிரட் வருகை தந்து கழக அபிவிருத்தி தொடர்பான பலவேறு விடயங்கள் பற்றிக் கலந்துரையாடினார்.

ஆரம்பத்தில் கழகத்தில் 19 உறுப்பினர்கள் இருந்தனர் அவர்கள் 1370/= நிதியினைச் சேகரித்து வறுமைக்கோட்டிற்குட்பட்ட 20 மாணவர்களுக்கு தலா 10 கொப்பிகள் வீதம் வழங்கினர். மாணவர்களது திறன்களை வெளிக்கொணரும் நோக்கில் கழகம் கீழ்ப்பிரிவில் (தரம் 6, 7,8) கட்டுரைப் போட்டியையும் மேற்பிரிவில்

(தரம்9, 10,11) கவிதைப்போட்டியையும் நடாத்தியது. செல்வன் பி. பிரசாந்த் இளவாலை Henrics இற்குச் சென்று "Rihgts Of Children" என்னும் தலைப்பில் உரையாற்றினார். அவர் 02.05. 2001இல் "சிறுவர்குரல்"என்னும் இதழினையும் வெளியிட்டார். 21.06.2001இல் பிரித்தானியாவின் இலங்கைத்தூதுவர் லிண் டாலபீடடைச்சந்தித்து சில அன்பளிப்புப் பொருட்களைப் பெற்றுக் கொண்டனர்.

சிறுவர் கழக செயற்பாட்டின் வளர்ச்சிப்படியில் திருமதி பவானி செபமாலை அவர்களால் சிறுவர் பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது. 09.07.2001ல் "SAVE THE CHILDREN JENO ALBRE வில் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் எமது கழக அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

2001 புரட்டாதி 7ம், 8ம் திகதிகளில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் கழக உறுப்பினர் கலந்து கொண்டனர். 25.092001ல் கழகத் தலைவர் செல்வன் செ. பிரசாந்த் தலைமையில் அல்பிரட் ஜெனிவா வுடன் பாராளுமன்றத்திற்கு 35 சிறுவர்கள் சென்றனர். அவர்கள் அங்கு நல்ல முறையில் வரவேற்று உபசரிக்கப்பட்டனர்.

01.06.2002 இல் 2000/= வைப்பிலிடப் பட்டது. 17.08.2002ல் கழகத்தினூடாக 9 மாணவர்களுக்கு பிரித்தானிய நாட்டின் புலமைப்பரிசில் பெற்றுக் கொடுக்கப்பட்டது. 16.09.2002ல் நான்கு மாணவர்களுக்கு கல்வி உதவியாக 1200/= வழங்கப்பட்டது.

எதிர் காலத்தில் சிறுவர்கள் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு செயற்திட்ட நடவடிக்கைகளில் ஈடுபட உள்ளது.

வா.சிவராசா
ஆசிரியர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



# சிறுவர் துஷ்பிரயோகத்தை எதிர்ப்போம்

இவ்வுலகின் கண்ணே தேற்றிய அத்தனை ஜீவராசிகளும் இப்பூமியில் வாழ உரித்துடையவையாகின்றன. எவ்வாறு வாழ்வது என்பதே கேள்வி எப்படியும் வாழலாம் என்ற விதண்டாவாத நோக்குடன் வாழத்தலைப்படாமல் எப்புறம் முகங் கொடுக்கினும் அழிவைத் தவிர ஆக்கங்களைச் சந்திக்க இயலாது. மாறாக இப்படித்தான் வாழ வேண்டும் என்ற எங்கள் ஆன்றோர் காட்டிய செவ்விய பாதையினைத் தேர்ந்தெடுத்து வாழ் தல் தனக்கு மாத்திரமன்றி அக்குடும்பம், அச் சமுதாயம், அவன் வாழும் நாடே முன்னிலைக்கு வர வாய்ப்புக்கள் தோன்றும் இம் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணியாக அமைவது சிறு பராயத்தில் வழக்கப்படத்திக் கொள்ளும் பழக்கங்களேயாகும்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்பன நாம் எல் லோரும் கேட்டே அலுத்துப் போயிருக்கும் முது மொழிகள் இந்த ஐந்து எதைக் குறிக்கின்ற தென்றால் ஐந்து வயதில் ஆரம்பக் கல்விக்கு அனுப்பப்பட வேண்டிய முக்கியத் துவத்தையே ஆகும் சிறு பராயத்தில் புடலங்காய்க்குச் சிறு கல்லைக் கட்டி அக்காய் சுருண்டு விடாமல் கவனிப்பவர் காய் நீண்டு வர வர கல்லின் பாரத்தைக் கூட்டுவதைக் காணலாம். அதற்கமையவே சிறு வயதிலேயே சிறு சிறு நற்புத்திகளை புகட்டி ஒழுங்காகக் கல்விச்சாலை செல்ல வைக்க வேண்டியது பெற்றோர்களின் தலையாய கடமையாகிறது.

இன்றையகாலகட்டத்தில் விண்வெளியிலேயே ஆய்வு கூடம் அமைத்த பெருமையையும் உலகத்தை ஒரு கிராமப் பரிமாணத்திற்குக் கொண்டு வந்த பெருமையையோ பெரிதாகக் கருத முடியாத அளவிற்கு அதே கண்டு பிடிப்புக்களின் பயனாக வெளிவந்துள்ள பேராபத்தான பேராயுதங்கள் மழுங்கடித்து விட்டதை எல்லோருமே அறிவோம். இப்போரினால் தலைவிரித் தாடும் வறுமை, அநாதைகள் ஆக்கப்பட்டோர், வீடு வாசல்களை இழந்தோர் அவயங்களை இழந்தோர் என்ற இழப்புப் பட்டிகை

நிண்டு கொண்டே போகும் வீட்டுத் தலைவனை இழந்த பின் அக் குடும்பமே தள்ளாட வேண்டிய நிலை அத்தனை அங்கத்தவர் களும் கஸ்டப்படவே செய்வர். பொருளாதார நிலையோ கவலைக் கிடம் பொருள்களின் விலையோ உச்சக்கட்டம் இங்கே தான் சிறுவர்கள் துஷ்பிரயோகங்களிற்குள்ளாகும் நிலை ஏற்படுகிறது.

என்னதான் அபிப்பிராய பேதங்கள் இருந்தாலும் நம் நாட்டிலும் கல்வியின் முன்னேற்றத்திற்காக முழு மூச்சுடன் செயற் படும் திட்டங்கள் இருக்கவே செய்கின்றன. இலவசக் கல்வி, சீருடை வசதி, வசதியற்றோர் தங்கியிருந்து கல்வி கற்கும் வசதிகளடங்கிய காப்பகங்கள், சற்று வளந்தோருக்கு தொழிற் கல்வி புகட்டுதல் எனப் பல வேறு உதவிகள் கிட்டக் கூடிய நிலையிலும், இப்பையனின் தந்தை கொல்லப்பட்டு விட்டார். எங்களுக்கு வாழ வழியே இல்லை என்று கூறியபடி வீடு வீடாகக் கூட்டித்திரிந்து யாசிப்பதை எவ்வாறு மன்னிப்பது. அறியாமையில் அத்தாயானவள் அப்படிச் செய்யுங்கால் தக்கோரிடம் சிபாரிசு செய்து அத்தாயின் சுமையைக் குறைப்போமானால் பிள்ளையின் நல் வாழ்விற்கும் வழிவகுத்தவர்களாவோம்.

சிறுவர்கள் போராயுதங்கள் வெடிபொருட்கள் கையாள்வதைக் காணும் கால் நேரடியாகச் சென்று தடுக்கமுடியா விடினும் சிறுவர் நலன் காப்போரின் கவனத்திற்கு கொண்டு வர முயற்சி உடனடியாக எடுக்கப்படல் வேண்டும். ஆதரரிப்பாரற்ற அவல நிலையும் வறுமையுமே கல்வியறிவற்ற மூடக்கொள் கையுடைய பெற்றோர்களுமே துஷ்பிரயோகத்திற்கான அடிப்படைக் காரணங்களாக அமைந்துள்ளன. தங்களது ஆதரவுடன் பிள் ளைகளை வளர்க்க வசதியற்றோர் பிள்ளைகளைத் தெரு நீளம் அலைய விடுவதையும் முன்பின் அறியாதவர்களுடன் நட்பு வைத் திருப்பதையும் கட்டாயமாகத் தவிர்க்க வேண்டும். மாறாக சகல உதவிகளையும் ஒரே இடத்திற் பெறக் கூடிய காப்பகங்களில் அனுமதிக்க நாமும் உதவ முன் வர வேண்டும்.

நன்றையும் தீதையும் பகுத்தறியாத தெரியாத பிஞ்சு மனங்கள் பசப்பு வார்த்தைகளாலும் பணம் சிற் றுண்டி போன்ற இலஞ்சப்பொருட்களுக்காக மயங்கி கல்நெஞ்சர் விரித்த கபட வலைக்குள் சங்கமமாகி போதைப் பொருட்கள்

கடத்தல், களவுக்குத் துணை போதல் உளவு பார்த்தல் போன்ற சமுதாயச் சீர்கேடுகளுக்குத் துணையாளராய் மாறி பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படும் பரிதாப நிலையை அடைந்து வாழ்வின் ஆரம்ப கட்டத்திலேயே சமுதாயத்தின் மாறாத வடுக்களாக மாற்றப்படுவது பரிதாபமே சிறுவன் எங்கிருந்து பணமோ பொருளே கொண்டு வருகிறான், யாருடன் நட்பு கொண்டிருக்கிறான், வீட்டை விட்டு வெளியே எங்கே போகிறான் என்னசெய்கிறான் என்பதை பெரியோர் கட்டாயமாகக் கண்காணிக்க வேண்டும். பாடசாலைச் சூழலை விட்டதும் வீட்டுச் சூழல் அவனைப் பாதுகாக்க வேண்டும்.

கல்வியில் சற்றுப் பின் தங்கிய நிலையில் இருக்கும் சிறுவர்களுக்கு மாணவர்களாகிய நாமே சிரித்த முகத்துடன் ஊக்குவிக்க முன் வருவோமேயானால் பயத்தையும் தாழ்ந்த மனப்பாங்கையும் விடுத்து கல்வியில் ஊக்கம் காட்டத் தலைப்படுவர். வளங்கள் குன்றிய பல வீடுகளில் அன்பும் இன் றைய கடைச்சரக்குப் போல் உச்ச கட்டத்திற்குப் போய் விடும் எப்போதும் கடுகடுப்புடன் உலா வரும் பெற்றோர் வீட்டில் நமது நாட்டைப் போன்று தீராத போர். இப்படிப்பட்ட இல்லங்களில் வளரும் சிறுவர்கள் எப்படி இருப்பர்கள் என்பதை கற்பனை பண்ணியா அறிய வேண்டும். பயந்து வெருண்டபடி ஓடி ஒழியும் நோக்குடனும் அன்றி எடுத்ததற் கெல்லாம் வளக்காட முனையும் வன் நெஞ்சக்காரர்களாகவே தான் மாறுவார்கள். இவற்றிற்கு எல்லாம் பெற்றோர்கள் சற்றே தங்கள் குணங்களை மாற்றினாலே பரிகாரம் கிடைத்து விடுமே. சிறுவர்கள் முன்னிலையில் பெரியோர்கள் வெகு பக்குவமாக தங்கள் குண நடத்தைகளைப் பழக்கவழக்கங்களை கையாள வேண்டும்.

இச் சர்வதேசத்தை உலுக்கி எடுக்கும் நிகழ்ச்சிகளில் சிறுவர் துஸ்பிரயோகமும் அடங்கியிருப்பது பரிதாபத்திற்குரிய நிகழ்வாகும். சிறுவர் துஸ்பிரயோகம் என்பது எல்லாம் வல்ல இறைவனின் தண்டணையோ? அனுமான் சக்தியோ? அன்றி வேற்றுக்கிரக வாசிகள் செயற்கைகளால் உண் டானதோ அல்ல மாறாக கேவலம் ஒரு சில சர்வாதிகார குணங் கள் கொண்ட சட்டங்களையும் தம் தேவைக்கேற்ப வளைக்க வல்ல பெரும் புள்ளிகளின் செயற்பாடுகளாளையும் அவர்களை தட்டிக் கேட்க சட்டமே பின் நிற்பதாலேயும் தான் படிப்படியாக முன்னேறி தலமை இடத்தை பிடித்துள்ளது.

க. உஷாந்தன்
A/L
2011(உயிரியல்)




**இருப்பவர்கள் இடமிருந்து வலம் :** திருமதி ச. சுரேந்திரன்(உப அதிபர்) திரு செ.தவராஜா(உப அதிபர்) க.உஷாந்தன்(தலைவர்)
திரு. வீ. கணேசராஜா(அதிபர்) சு. சாரங்கன்(செயலாளர்) திரு பொ. சிறீஸ்கந்தராஜா(பிரதி அதிபர்) திருமதி சா. அருந்தவபாலன்(பொறுப்பாசிரியர்)
**நிற்பவர்கள் முதல் நிரை :** வ. தனுஜன்(உப தலைவர்) தி. வைகுந்தன்(பொருளாளர்) ஞா.வைகுந்தன்(உபசெயலாளர்) இ.சுவிஸ்ரன்(இதழாசிரியர்)

# யாழ்ப்பாணமும் சிறுவர்களும்

"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" என்பது மூத்தோர் வாக்கு இன்று சிறுவர்களாக உள்ளவர்கள் நாளை நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் உயர்ந்த தலைவர்களாக வரவேண்டும் என்பதே அனைவரினதும் எதிப்பார்ப்பாகும். தலைசிறந்த பண்புள்ள எதிர்கால சமுதாயம் இன்றைய சிறுவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. இத்தகைய பெருமை மிக்க சமுதாயத்தை கட்டி யெழுப்ப வேண்டும் என்பது நம் அனைவரினதும் பொறுப்பாகும்.

இத்தகைய பொறுப்பை நம்மில் யார் சரிவர செய்கின்றனர் என்பதே இன்றைய கேள்விக்குரிய விடயமாகும். ஏனெனில் நமது யாழ் குடாநாட்டினை எடுத்துக் கொண்டால் சிறுவர்கள் என்ன செய்கிறார்கள்? எங்கே போகிறார்கள் என்பது ஒன்றும் புரியாத விடயமாக உள்ளது. யாழ்குடாநாட்டிற்குரிய தனிச்சிறப்பாக அதன் கல்வித்துறை இருந்து வருகின்றது. இது பெருமைக்குரிய விடயமே அனால் அது செயற்படுத்தப்படுகின்ற விதம் கவலைக்குரியதாக உள்ளது.

நமது உலகிற்கு புதிதாக காலடி எடுத்து வைக்கும் ஒரு சிறு குழந்தை தனது 6ஆம் வயதில் தரம் 1இல் பாடசாலைக்கு சேர்க்கப்படுகின்றான். ஆனால் அவன் 3ஆம் வயதினிலே பாலர் பாடசாலையில் அனுமதிக்கப்படுவது கவலைக்குரிய விடயமே. சிறு பாலகர்கள் தமது சூழலை இலகுவாக கற்றுக்கொள்ள இந்தக் காலம் வாய்ப்பாக உள்ளது. ஆனால் அவர்களே பாலர் பாடசாலைகளில் 3 வருடங்கள் கல்வி கற்கின்றனர். சிறுவர்களின் குழந்தைத்தன குறும்புகள் சிறுவயதிலேயே மழுங்கடிக்கப்படுகின்றன.

மஹாகவி பாரதியார் தனது பாப்பா பாட்டு எனும் பாடலிலேயே "காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுவதும் விளையாடட்டு என்று வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா" என்று அருமையான சிறுவர் பாடலை தந்து விட்டுச் சென்றுள்ளார் ஆனால் இங்கு

சிறுவர்களின் நிலையோ தலைகீழாக உள்ளது. "காலை எழுந்ததும் ரியூசன் பின்பு பகல் முழுவதும் பாடசாலை மீண்டும் மாலை முழுவதும் ரியூசன்என்று வழக்கப்படத்திக் கொள்ளு பாப்பா" என்ற நிலைக்கு வந்து விட்டது. விளையாட்டு ரீதியாக சிறுவர் தமது உடல் நலத்தை மேம்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1ஆம்,2ஆம் ஆண்டிலேயே பாடசாலை படிப்புடன் சிறுவர்கள் ரியூசனிற்கும் அனுபப்படுகின்றனர்.

சிறுவர்கள் மிகவும் பாதிக்கப்படும் ஒரு விடயமாக தரம் 5 புலமைப்பரிசில் பரிட்சை அமைந்துள்ளது. பாடசாலைகளில் அவர்கள் கடுமையாக கல்வி கற்பிக்கப்படுகின்றனர். பின்னர் பெற்றோரின் கண்டிப்பினால் இரண்டு/மூன்று ஆசிரியர் களிடம் மாலை நேரங்களில் வகுப்புக்கள் தரம் 5இல் சிறுவர் களின் விளையாட்டு சூழல் முற்றாக இழக்கப்படுகின்றது. அவர் கள் கல்வி சார்பாக கடுமையான அழுத்தங்களிற்கு உள்ளாகின்றனர். பெற்றோர்கள், ஆசிரியர்களின் நச்சரிப்பால் தம்மால் செய்ய முடியாத சில செயல்களை கூட செய்ய வேண்டிய பரிதாபமான நிலைக்கு அவர்கள் உள்ளாகின்றனர். இவ்வாறான அதிக அழுத்தங்களினால் பிள்ளை பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறமுடியாமல் போகிறது இது புரியாத தாய் தந்தையர் அந்த பிள்ளைக்கு கடுமையான தண்டணைகளை வழங்குகின்றனர்.

இது அவர்கள் சில விபரீத முடிவுகளை எடுக்க தூண்டுகோலாக அமைந்து விடுகின்றது. தற்கொலை எண்ணமோ அல்லது ஒருவிதமான மன அழுத்தமோ அவர்களை தொற்றிக் கொள்கின்றது. இது அவர்களின் எதிர்கால கனவுகளை சிதைக்கக் கூடிய வாய்ப்பை உண்டாக்கிவிடும். எனவே புலமைப் பரிசில் பரீட்சை என்பது ஒரு முக்கியமான பரீட்சையாக இருப்பினும் சிறுவர்களின் சக்திக்கு மேற்பட்ட கல்வியை திணிப் பது பாரதூரமான பின் விளைவுகளை ஏற்படுத்தும் பெற்றோர்கள் இது குறித்து கவனமெடுப்பார்கள் என எதிர்பார்க்கிறேன்.

நவீன தொழில் நுட்ப உலகிலுள்ள எம் சிறுவர்களிற்கு கணனி அறிவு இன்றியமையாததாகும். எதிர்கால உலகுடன் போட்டி போட நாம் சிறுவர்களும் கணனி அறிவை பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆயினும் இது திசைமாறி

சென்றால் விபரீதங்கள் தான் ஏற்படும் சிறுவர்களிடையே கணனி விளையாட்டுக்கள் அமோக வரவேற்பை பெற்றவையாக காணப் படுகின்றன. பெரும்பாலான கணனி விளையாட்டுக்கள் வன் முறைகளை தூண்டும் விதமாக அமைந்துள்ளன. இது சிறுவர்களின் மனதில் விபரீத எண்ண அலைகளை தோற்றுவிக்கக் கூடும். வன்முறை கலாச்சாரத்திற்குள் அவர்களை கூட்டிச் செல்லக் கூடும்.

இக்கணணிப் பாவனையில் இணையத்தளம் சிறுவர்களிற்கு வேண்டாத தக்வல்களை வழங்கக் கூடிய சூழல் தற்போது உள்ளது. தற்போது துரித அபிவிருத்தி கண்டுவரும் யாழ்ப்பாணத்தில் இணைய பாவனை அதிகரித்து வருகின்றது. சிறுவர்களும் இதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். அவர்கள் இதில் தவறான தளங்களிற்கு செல்லும் வாய்ப்புகள் அதிகம் உண்டு. தீய பழக்கவழக்கங்கள் அவர்களை தொற்றிக்கொள்ளும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. இதற்கு பெற்றோரின் கண் காணிப்பு மிகவும் அவசியமாகும். பெற்றோர் சிறுவர்களின் ஒவ்வொரு அசைவிலும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். எவ்வளவு வேலைப்பளு இருந்தாலும் கூட தமது பிள்ளைகளை அன்பாகவும் கனிவாகவும் கவனித்துக் கொள்ள வேண்டிய பெறுப்பு பெற்றோர்களையே சாரும்.

இன்றைய சிறுவர்களை நாட்டின் சிறந்த தலைவர் கர்களாக, மாற்ற வேண்டிய பொறுப்பு பெற்றோர் , ஆசிரியர் தவிர ஏனையோரையும் சார்ந்த ஒன்றாகும். சிறுர்களை சிறந்த முறையில் கவனிப்பதன் மூலம் எமது யாழ்ப்பாணத்தை எதிர் காலத்தில் ஓர் முன்னேற்றகரமான பிரதேசமாக மாற்ற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

புதிய உலகை நாமும் உருவாக்குவோம்.

T. ஹரிகரன்
A/L 2008
J.H.C
முன்னாள் செயலாளர்



# சிறுவரும் கல்வியும் - கல்வியும் சமூகமும்

சிறுவர்கள் எனப்படுவோர் நாளைய நாட்டின் தலைவர்கள் எமது நாட்டை அபிவிருத்தி செய்ய போகின்ற அருஞ்செல்வங்கள் இன்று 18 வயதிற்குட்பட்டவர்கள் சிறுவர் என வகை செய்யப் படுகின்றனர். இத்தகைய சிறுவர்கள் பல உரிமைகளை பெறுவதில் உரித்துடையவர்கள் ஆவார். சிறுவர்களுக்கு வாழும் உரிமை அடிப்படை வசதிகள் பெறும் உரிமை, கல்வி பெறும் உரிமை, தனது விருப்பங்கள், தேவைகளை பூர்த்தி செய்யும் உரிமை, என ஒரு தொகைப்பட்ட உரிமைகள் அடங்கிய கோவையே உள்ளது.

ஆனால் 21ஆம் (மனித நேயமற்ற) நூற்றாண்டிலே சிறியவர்களில் பலர் கல்வி அபிவிருத்தி போன்ற விடயங்களை தமது வளமான வாழ்க்கையில் பெறுவதற்கு தடைசெய்யப்பட்டுள்ளனர். குடும்ப வறுமை, யுத்தம், போன்ற காரணிகளால் தமது கல்வியை இழந்து வருகின்றனர். இலங்கை மக்களிலே 92மூ மக்கள் எழுத்தறிவு உடையவர் என்ற நிலைமாறி 89மூ மக்கள் தான் இலங்கையில் எழுத்தறிவுள்ள மக்களாக உள்ளர். என்ற கல்வி வீழ்ச்சி தரவு ஏற்பட்டுள்ளது.

ஏன்? எமது வடமாகாணத்தை நோக்குகின்றபோது தற்போது கல்வி வீழ்ச்சியடைவதற்கு காரணம் இன்றைய கல்வி பயிலும் சிறுவர்கள் யுத்தம், வறுமை காரணமாக பல கோணங் களில் திசை திருப்பம் செய்யப்படுகின்றனர். அம்மா தொட்டு வணங்க வேண்டிய கைகள் யாவும் யுத்தம் காரணமாக தம் உறவுகளை இழந்த நிலையில் அலவாங்கு தூக்கி அரை குறையாக வயிற்றை கழுவுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. கல்வி என்பது ஒரு சமூகத்தை நாகரிகம் மிக்க, அபிவித்தி மிக்க சமூக மயமானதாக்க பயன்படுத்தப்படும் ஓர் சாதனமாகும். எனவே சமூகத்தை உயர்துகின்ற கல்வியை நாம் பரவலாக்கம் செய்ய வேண்டும்.

இன்று சிறுவரின் உரிமைகள் யாவும் மறுக்கப்படுகின்றது.

அவர்களது கோரிக்கைகள் யாவும் தட்டி கழிக்கப்படுகின்றது. இந்த நிலை மாற வேண்டும். சிறுவர்களுக்கு கட்டாயம் கல்வி போதிக்கப்படல் வேண்டும்.

"நம் நாட்டின் எதிர் காலம் சிறுவர்கள்"
நாங்கள் அவர்களின் கல்வியை உயர்த்துவோம்.

ஸ்ரீ. சிவஸ்கந்தஸ்ரீ
தரம்-10F



# தமிழ் சினிமாவும் இலக்கியமும்

இலக்கியம் மிக நீண்ட வரலாற்றினை உடையது. கலைகளின் கடைக்குட்டி எனத்தகும் சினிமா அல்லது திரைப் படம் சுமார் எழுபத்தைந்து ஆண்டு வளர்ச்சியினை கண்டதாகும். அதன் வரலாறு சிறியதாயினும் சினிமாக் கலையானது வசதியும் வாய்ப்பும் மிகுந்த அற்புதமானதொரு சாதனமாகும். மக்களுடைய அனுபவங்களை செம்மைப்படுத்தவும் உணர்வுகளை இதப்படுத் தவும் அறிவினை ஆழமுடையதாக்கவும் சினிமாக்கலை அதிக அளவில் உதவத்தக்கதென்பதில் ஐயமில்லை.

தமிழிலக்கியத்தை பொறுத்தவரையில் அது இரண்டாயிரம் ஆண்டு கால பெருமை மிகு வரலாற்றினை உடையது. இவ்வரலாற்றின் ஆரம்பகாலமென இன்று கொள்ளப் படும் சங்ககாலத்திலேயே இலக்கியப்புலவர்கள் பல்வேறு வகையினவான வாழ்க்கை அனுபவங்களை துலாம்பரமாகவும் துல்லியமாகவும் சித்தரிக்கிறார்கள்.

சினிமாக்கலை சென்ற நூற்றாண்டின் இறுதியில் மேலைநாட்டில் உருவான கையோடு இந்தியாவில் அறிமுகப்படுத் தப்பட்டது. அறிமுகமாகிப் பதினைந்து ஆண்டுகளில் அதாவது 1912ல் இந்தியாவின் முதற்கதை கூறும் படமாக புன்டலீக் வெளியானது. அடுத்த ஆண்டு வெளியான ராஜா கரிச்சந்திரா மிகப்பிரசித்தி பெற்றதாகும். 1919ல் வெளிவந்த கீசகன்வதை தமிழிலான முதற் கதை கூறும் திரைப்படமாக கொள்ளப்படுகிறது

இக்காலப்பகுதிவரை வெளிவந்தவை பேசாப்படங்களே ஆகும். 1931ல் வெளியான ஆலம்ஆராவே இந்தியாவின் முதலாவது பேசும் படமாகும்.

இலக்கியம் வேறு, சினிமா வேறு ஆயினும் சினிமாவின் நயத்தை இலக்கியத்திலும் இலக்கியத்தின் நயத்தை சினிமாவிலும் காணமுடியாதென்றில்லை. ஆனால் இலக்கியம் பழையது சினிமா புதியது. இலக்கியம் தனியொருவரின் கற்பனைத் திறனிலும் முயற்சியிலும் உருவாகுவது சினிமாக்கூட்டு முயற்சியால் ஆவது. இலக்கியத்தை படிக்கவோ கேட்டு விளங்கவோ கூடியவர்கள் தம் அகக் கண்களாலும் அனுபவ நாளங்களாலும் சுவைக்கலாம். இலக்கியத்தில் கதாநாயகன் தங்கியமைவது சிருஷ்டிகர்த்தாவின் திறனாலேயே.

இன்று கூடிய செல்வாக்கும் தாக்கமும் உடைய கலை சினிமாவாகவே விளங்குகிறது. திரைப்படத்தை அர்த்தமும் அவசியமும் மிகுந்த ஒன்றாக கொள்ளும் ஒரு பண்பாட்டில் வளர்ந்த தலைமுறையினை இன்று நாம் பார்க்கின்றோம். இலக்கியம் ஒன்றேனும் அறியாத பலரைக் காண முடியும். ஆனால் திரைப்படம் பார்க்காத ஒருரை இன்று காண்பது அபூர்வமாகும்.

தொகுத்து நோக்குமிடத்து சிறந்த ஓர் இலக்கியம் சிறந்த சினிமாவாகவே வேண்டுமாயின் அவ்விலக்கியத்தின் உட்பொருளை கிரகித்து வெளியிடத்தக்க ஆற்றல்மிக்க சினிமா தயாரிப்பாளனும் நயக்கும் மனப்பாங்குடைய பார்வையாளரும் தேவை. தமிழ்ப்பட உலகினைப் பற்றி பல ஆண்டுகளுக்கு முன் பாரதிதாசன் கேட்டதன் அர்த்தம் இன்றும் குறைந்துவிடவில்லை. அவர் கேட்டது.

**"பாமர மக்கள் மகிழ்ந்திட வைத்தல்**
**படங்களின் நோக்கமெனில்**
**நாமம் குலைத்திடவோ அறிவாளர்கள்**
**நற்கலை கண்டார்கள்"**

**ம.ஹெரசாந்தன்**
**தரம் 10F**

# கழக அங்கத்தவர்கள் - 2009



**இருப்பவர்கள் இடமிருந்து வலம் :** திருமதி சா. அருந்தவபாலன் ( பொறுப்பாசிரியர்) தி. வைகுந்தன் (பொருளாளர்), திரு செ.தவராஜா (உப அதிபர்), திரு வீ.கணேசராஜா (அதிபர்) க. உஷாந்தன் (தலைவர்), திரு பொ. சிறீஸ்கந்தராஜா (பிரதி அதிபர்) சு. சாரங்கன் (செயலாளர்), இ. சுவிஸ்டன் (இதழ் அசிரியர்), திருமதி ச. சுரேந்திரன் (உப அதிபர்),

**நிற்பவர்கள் முதல் நிரை :** த.தபேசன், சி.கௌரிசங்கர், இ. ரணீசன், சி. சாகித்தியன், ம. றொசாந்தன், சி. திவ்யன், ப. மகிதனன், ந. வேணுதனுயன், ப. கஜமாலன், சி. சுகந்தன், த. மதீஷன், ச. நிவேஷன், க. அஜித்.

**நிற்பவர்கள் இரண்டாம் நிரை :** ந. சிவகுலன், இ நிரோஷன், சி. சிவஸ்கந்தஶ்ரீ, ப. வைசீகன், த. வைதேகன், சி. கீர்த்தனன், மி. துமிளன், ஓ. நிதுாஷன், ச. துவாரகன், சி. விக்னேஷ்வரன், து. அருனன், சி. நிதர்ஷன், இ. ஆரூரன் சி. விசாகனன்.



# காக்கும் கலைகள்

கராத்தே, குங்.்.பூ ஜுடோ ஆகிய விளையாட்டுக்கள் "மார்ஷியல் ஆர்ட்ஸ்" என்கின்ற தற்காப்புக் கலைகளின் கீழ் வருவன. இவை சைனா, தீபெத், இந்தியா போன்ற நாடுகளில் உருவாக்கப்பட்ட கலைகள். உறுதியான மன வலிமை பெறுவதற்குத் தற்பாதுகாப்புக் கலைகள் உதவுகின்றன.

கராத்தே என்பது பல்லாயிரக் கணக்காண வருடங்களாக ஐப்பானில் அதிகார பூர்வமான தற்காப்புக்கலை விளையாட்டாகும்! இந்த விளையாட்டில் உடலின் எல்லா பாகங்களைக் கொண்டும் விளையாடலாம். கை, கால், முட்டி போன்றவற்றைப் பயன்படுத்தலாம். கரேத்தே என்றால் "ஆயுதங்கள் இல்லாமல் வெறும் கையால் சண்டை போடுவது" என்று அர்த்தம்.

"ஒகினவா" என்கிற தீவைச் சேர்ந்தவர்களால் ஐப்பான் மக்களுக்குகராத்தே அறிமுகமானது. "ஷோட்டாக்கன்" எனும் இவர்களின் பயிற்சி பிரசித்தி பெற்றது. குத்துச்சண்டை,மல்யுத்தம்," "கிக் பாக்ஸிங்" (kick boxing) ஆகியவற்றைக் காட்டிலும் இது (Benefit) நன்மைபயக்கக் கூடியது.பலராலும் பாராட்டப்பட்டது ஆபத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் மனதை சமநிலையில் (Relaxing) வைத்திருக்கவும் கரேத்தே உதவுகிறது. "பஞ்ச்" செய்வது , "ப் ளாக்" பண்ணுவது , "கிக்" (Kick) அடிப்பது போன்றவை கராத்தேயின் அடிப்படைப்பயிற்சிகள் , கியோன் (அடிப்படைப் பயிற்சிகள்), ஆகியவற்றை கராத்தேவின் பயிற்சி முறையில் பயிலலாம்.அடிப்படையாக "வெய்ட் பெல்ட்" (Weight belet) அளிக் கப்படும். பின்(Brown belt) "பிறவுன் பெல்ட்" கொடுக்கப்படும். இ வை தகுதி மற்றும் வலிமை இதனை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும். "புருஸ்லீ" தமது படங்களில் "கரேத்தே" கலையைக் பயன்படுத்தி சண்டைபிடிப்பார்.

"ஜு டோ" என்பது சமீபகாலமாக அதாவது 19ம் நூற்றாண்டில கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒரு தற்காப்புக் கலை. "ஜீகாரோ கேணோ" (I i goro kono) எனும் ஐப்பானியரால்

கண்டுபிடிக்கப்பட்ட தற்காப்புக்கலைகள் "ஜூ டோ" தான் முதல் முதலில் ஒலிம்பிக் விளையாட்டில் இடம்பிடித்தது. காயங்கள் எதுவுமில்லாமல் ஒரு தற்காப்புக் கலை வேண்டும் என "கேனோ" விரும்ப, கண்டுபிடித்த விளையாட்டே இது. "ஜூ டோ" என்றால் "மென்மை" என அர்த்தம். இவ்விளையாட்டில் எதிரணியைப் பூமியில் தூக்கி எறிய வேண்டும்.

எதிராணியின் முதுகைப் பூமியில் அழுத்த வேண்டும். அப்போது தான் "வெற்றி" கிடைக்கும். சம நிறையுடைய மனிதர்கள் மோதும் விளையாட்டே இது. "குங்.்.பூ" "China" (சீனா) மக்களின் பாரம்பரிய தற்பாதுகாப்புக்கலை. இது சீனாவில் உள்ள "ஒப்ரோ" பள்ளிகளில் இன்றும் கற்பிக்கப்படுகின்றது. "எப்பேர்ப்பட்ட நேரத்திலும் எதிராளியினை மண் கவ்வச்செய்யும் கலையே "குங்.்.பூ" கலையாகும். அந்தக் காலத்தில் விலங்குகளுடன் சண்டையிடக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு தற்பாதுகாப்புக்கலைகளில் "குங்.்.பூ"வும் ஒன்று.

பெரும்பாலும் "மார்ஷியல்" கலைகள் "India" வில் இருந்து தோன்றியதாய் நம்பப்படுகின்றது. புத்த பிட்சுக்கள் இந்தியாவிலிருந்து தற்காப்புக் கலைகளை உலகம் முழுக்கப் பரப்பினர் என்பதற்கு ஆதாரங்கள் பல உள்ளன. இந்த 3 "மார்ஷியல்" கலைகளிலும் பொதுவான அம்சங்கள் உண்டு.

1) எதிரி நம்மைத் தாக்க வரும் முன்பு நாம் அவனைத் தாக்க வேண்டும்.
2) எதிராளியின் பலம்,பலவீனம் இரண்டும் அறிய வேண்டும்.
3) எப்போதும் எதிராளியைக் குறைத்து மதிப்பிடவே கூடாது.
4) உடல் வலிமையுடன் மனவலிமையினையும் அடைய வேண்டும்.

எனவே நாம் சிறுவர்கள் என்பதால் எம்மைப் பலர் ஏமாற்றநினைக்கலாம். எம்மிடம் இருந்து பலவேலைகளைப் பெறலாம். எனவே நாம் எப்போதும் முன் எச்சரிக்கையாக இருந்து ஆபத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளல் வேண்டும்.

ப.கஜமாலன்

10D



## பாடித்திரியும் பள்ளிச் சிறார்களே

பாடித்திரியும் பள்ளிச் சிறார்களே
பதற்றமில்லா பருவம் இதுவே
தேடித் திரிந்து படித்திடுவீர்
அத் தேட்டத்திலே உம் எதிர்காலம்,
கூடித்திரிந்து மகிழ்ந்திடுவீர்
இறைவனை, கூவி அழைத்து வணங்கிடுவீர்
ஓடி ஓடிப் புரியும் சேவையும் உழைப்பும்
புகழ் ஏணி தனில் உமை ஏற்றிடுமே

விடியும் காலை விடிவது போல்
வாழ்வும் வளமும் வளர்ந்திடுமே
நடிப்பும் துடிப்பும் மிகுந்திருந்தால்
அறிவும் ஆற்றலும் பெருகிடுமே
வடிவில் திருமகள் மனத்திருந்தால்
வாழ்வில் செல்வமும் கொழித்திடுமே
படிப்பில் மனமே நிலைத்திருந்தால்
கலை வாணி தன் அருளும் பெருகிடுமே.

இ.ஆரூரன்
6C



## வெற்றியின் இரகசியம்

தொழிலின் மதிப்பு அதனுடைய குணத்தையும் தன்மையையும் பொறுத்தே தீர்மானிக்கப்படுமே தவிர அதனுடைய அளவில் அல்ல.செயலின் தன்மை உலகில் பணிபுரியும் ஒரு தனிமனிதனை வழிகாட்டி ஊக்குவிக்கும் குறிக்கோள்களையே சாந்திருக்கும்; குறிக்கோள் உயர்ந்தும் சிறந்தும் இருப்பின்

ஒருவருடைய செயலின் அழகும் திறமையும் அதிகரிக்கின்றன. மகோன்னத வெற்றிகளையும் குவிக்கும் மாமனிதர்கள் எல்லோரும் அப்படிப்பட்ட குறிக்கோள்களினால் ஊக்கமடைந்து உலகில் சீர் மிகுந்த செயல்களினை அற்புதமாக படைத்து, அவர் களுடைய செயல்களின் பலன்களைத் தொடரும் தலைமுறையினர்கள் அனுபவித்து வருகின்றார்கள். இன்றைய உலகில் மனிதன் ஒருவனுடைய செயல்களை அணை போட்டு அரவணைத்துச் செல்லாது ஒரு தெளிவான குறிக்கோள் இல்லாமல் இருக்கின்றனர். அவன் சுயநல பாவனையுடன் செயலாற்றுகின்றான். இன்னமும் சிறப்பு மிக்க செயல்களை மேற்கொள்ளத்தூண்டும் ஒரு காரியாலத்தில்ஊழியனாகவோ அல்லது ஒரு அமைப்பின் நிர் வாகியாகவோ அவன் எந்த ஒரு வேலையை மேற்கொண்டாலும் அதில் ஒரு செயலையே தொடர்ந்து செய்யும் மனச் சோர்வையே அனுபவிப்பான். அவன் அலுவலகத்தை அடைந்து வேலையைத் தொடங்கிய உடனேயே ஓய்ந்து விடுகின்றான். மாலை வீடு திரும்பிச் செல்லக் கூட அவனுக்கு சக்தியில்லை. இச் சூழ்நிலையில் அவன் செய்யும் வேலை மதிப்பற்றதாகி அவன் சமுதாயத்திற்கு ஒரு சுமையாகி விடுகிறான்.

ஏதையும் விட்டு விடாத நிலையான ஆராய்ச்சிக்குப் பிறகு இத்தகைய சோர்வுக்கான காரணங்களை , கடந்த காலத்தில் மேன்மை பொருந்திய தலைவர்களை கண்டு பிடித்து அவற்றை சமாளிக்கும் வழியை நமக்குக் காட்டினார்கள். இதன்படி நம்முடைய செயல்களில் தரத்தைஅழகையும் அதிகரித்து இப் புவியில் உண்மையான கலகலப்பையும் சந்தோசத்தையும் தருவிக்கலாம். இந்த புற உலக ஆசையும் ஆவலும் நம்முள் இருக்கும் வாழ்க்கைச் சக்தியை அறிந்து நம்மைச்சத்தியற்றவனாக்கும்.வாழ்க்கையிலேயே ஒரு தீர்மானத்தை அற்புதமான குறிக்கோள் / இலக்கைத் தேர்தெடுக்க அதனுடைய சாதனையிலேயே கருத்தூன்றி முழு அர்ப்பணத்துடன, சலிப்பின்றி உழைத்து இப்படிப்பட்ட மனச்சவால்களை அடக்குவதிலேயே வெற்றியின் இரகசியம் புதைந்துள்ளது.

இத்தகைய செயல்கள் வாழ்க்கையில் ஒரு ஊக்கத்தையும் மன அமைதியையும் ஒரு பிடிப்பையும் மகிழ்ச்சியையும் இடைவிடாது தந்து நம்மை திறமைக்கும் வெற்றிக்கும் வழிநடத்திச் செல்லும் நாம் தனித்துவத்தை தவிர சமுதாய நன்மையோ நாட்டின் வளர்ச்சியோ அந்த ஒரு குறிக்கோளுக்காக

செயற்படுமாறுபணித்தனர் சிந்தனையாளர்கள். ஒருவரின் உள்ளத்திலேயே வாழ்க்கையின் வெற்றி அடங்கியுள்ளது. புற உலகில் அல்ல, மதம், ஜாதி அதற்கு வழிசமைகின்றது.

பா.ஆஷ்ஷன்
13D



## இயற்கை வாழ்கையுடன்...

நாம் இயற்கையுடன் ஒட்டி வாழ்ந்தால் நோய் இன்றி நன்றாய் வாழலாம். இயற்கையிலேயே உள்ள பல மருத்துவக் குணங்களுடைய கீரைகளும் அவற்றின் பயன்களும்

1) பொன்னாங்காணி

இதனைத்தனித்தனியாகவோ அல்லது பருப்புடன் சேர்த்துச் சாப்பிட்டால் உடல் மினுமினுப்புத்தன்மையாகும்.

2) கொத்தமல்லிக்கீரை

இதில் Vitamin A,B,C உண்டு. இது வாந்தி, விக்கல், ஏப்பம், முலச்சூடு என்பவற்றை நீக்கும்.

3) முருங்கைக்கீரை

இதில் Vitamin A,B உண்டு. இரும்புச்சத்து அதிகமாய் உண்டு.

4) கண்பார்வைக்குச் சிறந்தது.

நீரிழிவு நோயாளிகள் தினந்தோறும் உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

5) வெந்தயக்கீரை

இதில் Vitamin C உண்டு. இது கல்ஈரல், மண்ணீரல் என்பவற்றின் செயற்பாட்டை அதிகரிக்கச் செய்து நன்றாகப் பசி ஏற்படச் செய்யும்.

6) முளைக்கீரை

இதனை அவித்து சாப்பிட்டால் கண்நோய், வாய்நாற்றம், மலச்சிக்கல்,நரம்புத்தளர்ச்சி, கணப்பு, உடல் உழைச்சல் போன்றன நீங்கும்.

**7) வல்லாரை**

அறிவு மற்றும் விவேகத்தை வளர்க்கும்.

பசியை ஏற்படுத்தும்.

இரத்தத்தைச் சுத்தப்படுத்தும்.

எனவே சிறுவர்களாகிய நாம் இதனை அறிவதன் மூலம் வாழ்க்கையில் இவ்வாறான உணவுகளை உண்டு நமது எதிர் காலத்தினை வெற்றிகரமானதாய் அமைத்துக் கொள்ளமுடியும் என்பதில் அச்சமில்லை.

**ப.கஜமாலன்**
10D



## அவனியிலே வேண்டுவது

இது இருபத்தோரம் நூற்றாண்டு. மனித வர்க்கத்தின் பொற்காலம் இது. நொடிக்கு நொடி விஞ்ஞானம் அசுர வேகத்தில் வளர்ச்சியைடைந்து கொண்டிருக்கிறது. இத்தகைய இன்றைய சமூகத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் எனும் பாரிய பிரச்சனையும் தலைதூக்கியிருப்பது சரளமாக, பரவலாக அவதானிக்கபடுகின்றது.

**"ஓடி விளையாடு பாப்பா**
**நீ ஒய்ந்திருக்கலாகாது பாப்பா**
**தெய்வம் நமக்குத் துணை பாப்பா"**

என்று பாடிய பாரதியின் கவிப்பாவிற்கு இக்காலத்தில் அர்த்தமேயில்லாமல் போகின்றது.

இன்றைய சிறுவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் என்று பார்க்கும் போது சிறுவர் உரிமைகள் மீறப்படுதல், அவர்களது தேவைகள் புறக்கணிக்கப்படுதல், வேலைக்கு அமர்த்துதல் போன்றன காணப்படுகின்றன. சமீபத்தில் ஒரு ஆய்வின் படி 15 வீத சிறுவர்கள் ஓரளவான துஷ்பிரயோகங் களிற்கும், 8.5 வீதமானோர் முழுமையான துஷ்பிரயோகங்களிற் கும் ஆளாகியிருக்கின்றனர் எனும் பேரதிர்ச்சியான தகவல் கிடைத்துள்ளது. ஏன் இந்த அவலநிலை? இக்கால வறுமையும், மக்கள் மத்தியில் காணப்படும் அறியாமையுமே இதன் காரணங்களாக

அமைவதாக இன்றைய சிறுவர் நன்னடத்தையாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

"தேடிச் சோறு நிதம் தின்று

பல சின்னஞ்சிறு கதைகள் பேசி"........

ஓடியாடித் திரியும் இன்றைய சிறார்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக்கப்படுவது வருத்தத்திற்குரிய விடயமாகும். படிப்பறிவில்லாத ஏழைக்குழந்தைகள் ஏழைகளாகவேதான் பிறந்து ஏழைகளாகத்தான் சாகவேண்டுமா? அப்படிப்போயிருந்தால் இன்று ஒரு நியூட்டனோ அல்லது தோமஸ் அல்வா எடிசனோ உருவாகியிக்கமாட்டார்கள்.

ஆகவேதான் சிறார்களின் ஏழ்மையினை காரணம் காட்டுவதும், ஏன் பாடசாலைக்குப்போகவில்லை யென்றால் வறுமையைக் காரணம் காட்டுவதும், ஏன் சிறுவர்களுக்கு அவர்களின் உரிமைகளை வழங்கவில்லை என்றால் அதற்கும் வறுமையைக் காரணங்காட்டும் நிலை இன்றைய ஏழைச் சமூகத்திடையே பரவலாகக் காணப்படுகின்றது. பேனா பிடிக்க வேண்டிய வயதில் குறடு பிடிக்கிறார்கள் படங்களை ஒட்ட வேண்டிய வயதில் சைக்கிள்களை ஓட்டுகின்றார்கள். இந்நிலை தேவைதானா? உண்மையில் சிறுவர் பராயம் தான் வாழ்க்கையின் பொற்காலம் என வர்ணிக்கிறார்கள். எந்தச் சுமைகளோ, இடர்களோ இன்றி வானில் சுதந்திரக் காற்றைச் சுவாசித்தபடி பறந்து திரியும் பட்சிகளைப் போல ஓடி யாடித் திரியும் வயது அது. ஆனால் அவர்களுக்கு அந்தகைய பருவத்தில் உரிமைகளை வழங்காமல், துஷ்பிரயோகங்களுக்கு ஆட்படுத்தி எதிர்கால வாழ்வைச் சீரழிக்கின்றார்கள். ஒரு ஏணியின் இரண்டு கம்பிகள் உடைந்து விட்டால் எம்மால் மேலே ஏற முடியாது. அதேபோல சிறுவர்களின் ஆரம்பப் பருவம் பறிக்கப்படுமிடத்து எதிர்கால யுகத்தை ஆரம்பிப்பதென்பது அரிதினும், அரிதாய் போய்விடும்.

எனவே இந்நிலை மாற்றப்பட வேண்டும். எமது சிறார்களுக்கு ஒளிமையமான எதிர்காலம் வழங்கப்பட வேண்டும். இதற்காக இன்று எத்தனையோ அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கடும் பிரயத்தனம் மேற்கொள்கின்றன. ஆகவே பொறுப்புள்ள சமூகத்தினரான நாமும் எமது பங்களிப்பை இதற்கு

வழங்க வேண்டும். மற்றவர்களையும் பங்களிப்புச் செய்யத் தூண்ட வேண்டும். அப்போது தான் சிறந்த ஒளிமயமான சிறுவர்களுக்கு ஒரு சமுதாயம் உருவாகும். இல்லையேல் 22ஆம் நூற்றாண்டு மனிதர்க்கத்தின் இரண்டாவது "இருண்டயுகம்" ஆகி விடும் என்பது மட்டும் திண்ணம்.

நன்றி

ந.வேணுதஜன்
10A

## ஒளிமயம்



இன்று உலகளாவிய ரீதியில் சிறுவர் நலன் பேணும் அமைப்புக்கள் பல தோன்றிய வண்ணம் உள்ளன. இவ்வாறு பெரும் திரளாக சிறுவர் அமைப்பு தோன்றுவதால் அதன் ஊடே வெளிப்படுத்தப்படும் செய்தி யாதெனில் சிறுவர் உரிமைகள் சிறுவர் துஸ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு இருக்கிறது என்பதாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் அமைப்பு 18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் சிறுவர்கள் பெற்றோர்களாலும் மற்றோர்களாலும் துன்புறுத்தப்படுவதை காணக்கூடியதாக உள்ளது. இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என கூறப்பட்டாலும் எம் போன்ற சிறுவர்களை சிறுவர்களாக வாழ பெற்றோர்களும் மற்றோர்களும் அனுமதிக்கிறார்களா சுதந்திரமான சிந்தனைக்கு தடை, விளையாட்டுக்குத் தடை, கற்பதற்குத் தடை, கருத்து சொல்வதற்கு தடை, நட்பு கொள்வதற்கு தடை என குடும்ப அங்கத்தவர்களால் எத்தனையோ சிறுவர்கள் துஸ்பிரயோகங்களிற்கு ஆளாகின்றனர்.

சிறுவர்கள் எத்தையோ நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டிய பிள்ளைகள் பஞ்சபாதகத்துடன் ஈவிரக்கமின்றி வேலைவாங்கப் படுகின்றனர். அவர்களின் உழைப்புக்கு ஏற்ற ஊதியமாவது

வழங்குகிறார்களா? இல்லவே இல்லை

அந்நிய நாடுகளில் இருந்து வரும் உல்லாசபிரயாணிகள் பலர் சிறுவர்களையே துஸ்பிரயோகங் களில் ஈடுபடுத்துகிறார்கள். வீடுகளில் இருந்து வெறுக்கப்பட்ட பிள்ளைகள் நாதியற்று மற்றவர்களின் சுகபோகங்களிற்கு பலிகடாக்களாக்கப்படுகின்றார்கள்.

சாதாரண மனிதனுக்கு சுதந்திரம் ஏதும் மறுக்கப்பட்டால் மனிதன் உரிமை மீறல் என்கிறார்கள். சிறுவர் கள் இவ்வாறு நசுக்கப்படும் போது நாதியற்று கைகொட்டி பார்த் துக் கொண்டிருக்கிறது. சமுதாயம் சிறுவர் உரிமை பேணும் அமைப்புக்களே சிறுவர்களது உரிமை மதிக்கப்பட வேண்டும். வெறுமனே கண்டனங்களை தெரிவிப்பதால் சிறுவர் உரிமை மதிக் கப்படுகிறது என கொள்ள முடியாது.

தொழிற்சாலையில் கூலிக்கு அமர்த்தப்பட்ட சிறுவர்களை விடுவிப்பதுடன் சிறுவர்களை வேலைக்கு உட்படுத் துதல் தடுக்கப்பட வேண்டும். தடுப்பதற்குரிய நடவடிக்கைகளும் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட வேண்டும். சிறுவர்களுக்கு தமக் குள்ள உரிமைகள் எவை என்னபவற்றை விளக்கம் அளிப்பதுடன் அவர்களுக்கு உள்ள உரிமைகளை பெற்றுக் கொள்ளச் செய்வதில் சிறுவர் கழகங்கள் போன்ற கழகங்கள் குழந் தைகளுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

சிறுவர்களின் உரிமைகளை நாம் வழங்கும் வரை மனித உரிமைகள் நல்ல முறையில் பேணப்படும் என்று எதிர்பார்க்க முடியாது. "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்று நம்மவர்கள் அறியமுடியாமலா கூறியிருந்தார்கள். சிறுவர்களுக்கு உரிய உரிமைகளை வழங்கியும் அவர்களை பாதுகாத்தும் அவர் களது உரிமைகள் அப்போது தான் உண்மையான சிறுவர் உரிமைகள் இவ்வுலகில் பேணப்படுகிறது எனக் கருதலாம். ஒவ்வொரு சிறுவனும் சமூகம் மதிக்கும் நற்பிரைஜையாக திகழ வேண்டும்.

**இன்றைய மாநாக்களும் நாம் - தான்**
**எனி நாட்டை ஆளும் இராசாக்களும் நாம் தான்**
**ஆறறிவு படைத்த மனிதரும் - நாம் - தான்**
**ஒழுக்கம் எனும் மாணிக்கத்தை ஒளிர்பெறச் செய்யும் சிற்பிகளும் நாம் - தான்**

சிறுவர் உரிமைகளை காப்போம் சிறுவர் துஸ்பிரயோகங்களை தடுப்போம். ஒளிமையான சிறுவர் உரிமை பேணும் நாட்டினை கட்டியெழுப்புவோம்.

ந. சிவகுலன்
9C



# பிராணிகள் உலகம்

**ஆபிரிக்கக் காட்டெருமை**

இவ் ஆபிரிக்க காட்டெருமை சிங்கத்தாலும் வெல்ல முடியாது. மூர்க்கமான இதன் தாக்குதலுக்கு எப்பிராணியாலும் தாக்கு பிடிக்க முடியாது.

**காட்டெருமைகள்**

பாம்புகள் பழைய தோலை உரித்து புதிய தோலுடன் காட்சி தரும் சிலவகைப்பறவைகளும் கூட தம் பழைய இறக்கைகளை உதிர்த்து புதிய இறகுகள் முளைக்க வழிசெய்கின்றன. அதே போல காட்டெருமைகளும் நாளாகிப்போன உரோமங்களை அகற்றி புதியவற்றை வளரச் செய்வதற்கு தமது உடலை பாறைகளுடன், கரடுமுரடான மரங்களுடனும் தேய்த்து பழைய உரோமங்களை அகற்றுவதுடன் அவற்றின் உடலில் ஒட்டி உள்ள ஒட்டு விதைகளும், பூச்சிகளும் கூட அகற்றப்பட்டு இரட்டிப்பு நன்மையை பெறுகின்றன.

**ஹைனா**

ஹைனா எனப்படும் இக் கழுதை புலியிற்கு அதனது பலம் தெரியாது இவற்றின் தாடைப்பற்கள் இரும்பு போல வன்மையானவை; இறந்த பிராணிகளது உறுதியான என்பைக் கூட நொருக்கவல்லவை; எனினும் இற்கையாக இதற்கு இவ்வளவு பலமிருந்தும் இது ஒரு பயந்தாங்குளி வளர்ப்புப் பிராணிகளான பசு போன்றவை மிரட்டினால்பயந்து தலைகுனிந்தபடி ஓடும்.

டோலஸ் (இந்தியக் காட்டு நாய்கள்)

இவை ஒருவகை இந்தியக் காட்டு நாய்கள் இவை கூட்டமாகவே செல்லும் இவற்றிடம் பலம்மிக்க வேங்கை கூட தன் இரையை விட்டுவிட்டு ஓடிவிடும்.

தாயோபட்டிகள்

இவையும் "டோலஸ்" போலவே செயற்படுகின்றன. வேகமாக ஓடக் கூடிய மானை விரட்டி தனிமைப்படுத்தி அதை களைப்படையச் செய்து தம் இரையாக்கிக் கொள்ளும்.

நரி

சலனமின்றி செத்தது போலக்கிடக்கும். நரியைப்பார்த்து பல பிராணிகள் செத்துக்கிடக்கும் அபாயமில்லை என்று கிட்டப் போகும் மிருகங்கள் தம் நினைப்பு தவறு என்று உணருவதற்குள் நரி அவற்றை தமது உணவாக்கிக் கொள்ளும்.

ஐரோப்பியக் காட்டுப் பூனை

இவை மற்ற பெண்பூனைகளைப் போலவே தன் குட்டிகளோடு இருக்கும் போது திருப்தியாகவும், மகிழ்ச்சியாகவும் உறுமல் ஒலி எழுப்பும் பீதி அடையும் போது தன் முதுகை வளைத்து சீறும் இக்காட்டுப்பூனையை பழக்கவோ,வளர்க்கவோ முடியாது. இது மானை தனியாக தாக்கிக் கொள்ளும் அளவிற்கு முரட்டுக் குணமுடையது.

துருவக் கரடி

உறை நிலைக்கும் கீழான வெப்பநிலை நிலவும் போதும் ஆண் துருவக்கரடி ஆர்க்டிக் மாரி காலத்தில் சுறுசுறுப்பாக இயங்கும் எனினும் பெண் கரடி பனிக்கடியில் குழி தோண்டி அங்கே குட்டி ஈன்று சில மாதம் வாழும்.

**எலி**

எலி போன்று கொறித்து தின்னும் பிராணிகள் பறவைகளால் பிடிக்கப்படும் போது அவற்றுக்கு வலியோ பீதியோ ஏற்படுவதில் லை. அதன் மனம் (mind) உடனே செயலற்றுப்போகும் இதே போல காயமுற்றாலோ நோயுற்றாலோ இவை துன்புறுவதில்லை அது சரியாகும் வரை தூக்கத்தில் ஆழ்ந்து விடும் குணமாகாவிடின் தூக்கத்திலேயே இறந்து விடும்.

சு. நரேந்திரன்
11F



# இன்றைய சிறுவர்களின் கல்வியில் ஏற்படும் பாதிப்பும் தீர்வும்

இன்றைய சிறுவர்களின் முன்னேற்றத்திற்கு கல்வி, சமூகம், பொருளாதாரம் போன்றவை உதவுகின்றன. இதில் கல் வியே முன் நிற்கிறது. இதுவே சிறுவர்களை சிறந்தவர்கள் ஆக் குகிறது.

ஆனால் அவர்களின் கல்விக்கு பல்வேறு வகையான இடையூறுகள் இல்லாமல் இல்லை அதாவது தொலைக்காட்சி, கணனி, நண்பர்கள் கூட்டம் என்று ஏகப்பட்டவை கல்விக்கான சந்தர்ப்பங்களை மழுங்கடித்து விடுகின்றன.

சற்றே உற்று நோக்கினால் அவற்றில் முதலிடம் நிற்பது தொலைக்காட்சியாகும். தொலைகாட்சியில் ஒளிபரப்பப்படும் கேலிச் சித்திரங்கள், ஆங்கில படங்களைப் பார் த்து விட்டு படிக்கின்ற நேரங்களில் எல்லாம் அதைப் பற்றியே நினைத்துக் கொண்டால் எவ்வாறு கல்வி கற்கலாம்?

அடுத்ததாக கணனி என்னடா! கணனிகல் விச் சாதனம் என்றா பார்க்கிறீர்கள் கணனி கல்விச் சாதனம் தான் ஆனால் சிறுவர்கள் கணனியில் கணனி விளையாட்டுக்கள் விளையாடுதல், திரைப்படம் பார்த்தல் என்று கல்வியை கட்டிப் போடும் விடயங்களேயே நேரத்தைக் கழிக்கிறார்கள். இவ்வாறு போனால் கல்வியின் சாராசரி வீதம் குவைடைந்தே செல்லும்

இதையெல்லாம் விட்டாலும் சரி ஒரு சிறுவனுடன் சேருகின்ற நண்பர் குழாம் அவனுடைய கல்வியை ஒரு முன்னேற்றமும் இல்லாது ஆக்கி விடுகிறது. நண்பர் குழுக்கள் அச்சிறுவனின் மனத்தை மாற்றி தீயவழிக்கு இழுத்து செல்கின்றன. இவ்வாறு இந்தக் காரணிகளை ஒருசிறுவனின் கல்வியை திசை திருப்புகின்றன.

இதனால் ஒரு வைத்தியரகவோ, மாவட்ட ஆட்சியாளராகவோ ஆக வேண்டியவர்கள் கூலி வேலைக்கு செல்லும் நிலை கூட உருவாகிறது. இந்நிலை மாறுவதற்கு பெற்றோர்களே அதிக அக்கறை காட்டி இவற்றை கட்டுப்படுத்த வேண்டும். மாணவராகிய நாமும் இதனை உணர்ந்து நன்றாக கல்வி கற்க வேண்டும். இந்த நாட்டை வளப்படுத்த வேண்டியது ஒவ்வொரு சிறுவனினதும் கடமையும் உரிமையமாகும்.

த. வைதேகன்
9E



## சிறுவர்களிற்கு கல்வி இன்றியமையாதது

கோடிக்கணக்கான பிள்ளைகளுக்கு படிப்பு என்பது தெருக்கள், வயல்வெளிகள் அல்லது கூலி வேலைகளில் அதாவது பாடசாலையைத் தவிர வேறெங்காவது பெற்றுகொள் ளும் ஒன்றாக இருக்கிறது. ஏனெனில் நானும் ஒரு நாட்டின் சிறுவன் என்ற முறையில் இதனை கூறியே தீர வேண்டும் இதில் வருந்தத்தக்கவிடயம் என்னவெனில் இந்த இளைஞர்களில் பெரும்பாலானவர்களுக்கு தமது பெற்றோரிடம் இருந்து சிறப்பான வாய்ப்பை பெற வழிவகை இல்லாமையாகும் அநேகர் இளம் பராயத்திலேயே வேலைத் தளங்களிலே உபத்திரவங்களுக்கு உள்ளானவர்கள். முறையான அடிப்படைக் கல்வி இல் லாமையினாலும் அவர்களின் எதிர்காலம் வறுமையாலும் கல்வியறிவின்மையாலும் இருளுண்டு கிடக்கின்றது. கல்வியறிவின்மை

கூடுதலாக காணப்படும் வறிய நாடுகளில் எதிர்காலம் மோசமாக இருக்கிறது. படிப்பறிவற்ற தொழிலாளர் அணி ஒரு தேசத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக விளங்குகின்றது. விஞ்ஞானதொழில் நுட்பமுன்னேற்றங்கள் உணவு உற்பத்தி அதிகரிப்புக்கு வழிகோழியுள்ளது. தொழில்துறை பெருக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. நோய், மரணம் ஆகியவற்றுக்கான முக்கிய காரணங்களை தடுத்தும் வருகின்றன. ஆயினும் இந்த அறிவை எவ்வளவு சிறப்பாகக் கிரகித்துப் பயன்படுத்தலாமென்பதிலையே ஒரு நாட்டின் பொருளாதாரம், சமூக முன்னேற்றங்கள் முன் எப்போதையைப் பார்க்கிலும் அதிகம் தங்கியுள்ளது.

1990ஆம் ஆண்டு ஜொம்தியன் நகரில் (தாய்லாந்து) நடைபெற்ற "யாவர்க்கும் கல்வி" தொடர்பான உலக மாநாடு கல்வித்துறையில் இரண்டு தசாப்த காலமாக பூண்ட முன்னேற்றத் திற்கு பின்னர் வளர்முக உலகில் ஆரம்பக் கல்வித்துறையில் உலகளாவிய முறையில் முறையீடு செய்ய ஸ்தம்பிதமாகும்? ஆபிரிக்காவின் ஆநேக பகுதிகளில் பெருமளவு கல்வி வீழ்ச்சியடைந்துள்ளதெனவும் எச்சரிக்கை செய்தது. சில நாடுகளில் கல்வித்துறைக்கென ஒதுக்கப்படும் பணம் பாடநூல் களிற்கோ ஆசிரியர்களின் சம்பளத்துக்கோ போதுமாக உள்ளது. கல்வியின் தராதரம் ஆதாள பாதாளத்தில் வீழ்ச்சியடைந்துள்ளமையால் பெருந்தொகையான மாணவர்கள் கல்வியினை கைவிட்டு வருகின்றனர். 50% நாடுகளில் ஆரம்ப வகுப்புக்களில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதென்வும் தெரிவிக்கப்படுகின்றது. வளர்முக உலகில் வயது வந்த நால்வரில் ஒருவருக்கு படிக்கவோ, வாசிக்கவோ தெரியாது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த புள்ளி விவரங்களின் மற்றொரு அவமானம் மறைந்து கிடைக்கிறது. பொதுவாக ஒவ்வொருவருடமும் பாடசாலையிற் சேராதிருக்கும் பிள்ளைகளுட் குறைந்த பட்சம் 60% பெண்பிள் ளைகளாவர் உலகில் எழுத்தறிவற்ற 100 கோடி மக்களில் மூன் றில் 2/3னர் பெண்களாவர். கல்வித்துறையில் பெண்களுக்கு பாகுபாடு காட்டும் நாடுகள் எதிர்வரும் பல தசாப்த காலங்களில் அதன் பாதகமான விளைவுகளை அனுபவிக்க நேரிடும்.

பாசாலையில் அதிக பிள்ளைகளை சேர்ப்பிப்பதே முதற்படியாக அமையும். என்று யுனஸ்கோவின்

மா அதிபர் பெடரிகோ மேயர் ஜொம்தியன் மாநாட்டிற் குறிப்பிட்டார். பல நாடுகளில் கல்வித்தராதரம் குறைந்து காணப்படுவதன் விளைவு மாணவர்கள் பல வருட காலமாக பாடசாலைக்குச் சென்ற போதிலும் நிலைபேறான எழுத்தறிவை பெறமுடியாமலிருப்பதன் அடிப்படையில் ஏற்படக்கூடிய மேலதிகச் செயலாகும். உலகில் தோன்றும் குழந்தைகளினது ஆசைகளும் கனவுகளும் புதுவடிவம் பெறுகின்றன. இவற்றை எல்லாவற்றையும் அந்நியர்களே, உடன் நிறுத்துங்கள்.

இன்றைய சிறார்கள்
ஏற்றிப் போற்றுவோம் அவர்களை

ப. வைஷீகன்
9E



# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களா?

இன்றைய உலகில் சிறுவர்கள் என்பவர்கள் மிகவும் முக்கியமானவர்கள் ஆதலினாலே முன்னோர்கள் கூட இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்று கூறினர். அதற்கு சான்றாக அப்துல்கலாம், ஆபிரகாம் இலிங்கன், பாரக் ஓபாமா போன்றவர்களை சான்றாக குறிப்பிடலாம்.

ஆனால் இன்றைய சிறுவர்களுக்கோ நாளை ஒரு ஒளிர் மயமான எதிர் காலம் இருக்கின்றது என்பதையே கூறமுடியாது. காரணம் இன்றைய தமிழ் சினிமா, போதைப் பொருள் பாவனை, குடும்பத்தினர் பிரச்சினை, சமூக சீரழிவுகள் என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

முதலாவதாக நாம் தமிழ் சினிமாவையே உற்றுநோக்கினால் சினிமாவில் நடிகர்களை பார்த்து விட்டு தாமும் அவரைப் போல் ஆக வேண்டும் என்று இனம் புரியாத கற்பனையை வளர்த்துக் கொள்ளல். பாடசாலை செல்வதென்று பாதியில் சினிமா பார்க்க செல்வது இதெல்லாம் இன்றைய

சிறுவரின் நடத்தைகளாகும்.

போதைப் பொருள் பாவனை சிறுவர்களினை கவர்ந்து தன் அடிமைகளாக்கிறது. கவனயீர்ப்பு விளம்பரம், அப்பாவின் பாவனை , மூட எண்ணங்கள் மூலம் மது, புகைத்தல் போன்ற போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுகின்றனர். இருபத்து ஒரு வயதுக்கு மேல் ஆனாலும் புகையிலை பாவிகக் கூடாது என்பதை மீறி இளம் வயதிலேயே போதைப்பொருள்களுக்கு அடிமையாகின்றனர்.

குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள் இவை சிறுவர்களை மிகவும் ஒரு மன நல குறைபாடாக ஆக்கிவிடும். அதாவது குடும்பத்தில் தாய், தந்தை பிரச்சினைகளை பார்த்தல், குடும்ப வறுமைக்காக கூலிவேலை செய்தல் போன்றவை பிள்ளைகளின் கல்வியின் ஏக்கத்தை தூண்டிவிடும். இதுவே மனநல குறைபாட்டிற்கும் காரணமாகும்.

சமூக சீரழிவுகள் என்றால் மேலைத் தேய கலாச்சாரத்தை உட்புகுத்தி சமூக சீரழிவை ஏற்படுத்தல். இதனால் சிறுவர்களும் சமூக சீரழிவிற்கு உள்ளாகின்றனர். சிலர் சமூக வன்முறை சீரழிவுகளை பார்த்து சிறுவயதிலே தீவிரவாத எண்ணம் கூடத் தோன்றுகிறது.

இறுதியாக சிறுவர்கள் பலியிடுதல் இது பெரும்பாலும் இந்தியாவின் கிராமப் புறத்திலேயே இடம் பெறும். கல்வி கற்க வேண்டிய சிறுவர்களை விவசாயத்தை வளர்ப்பதற்காக முன்னோரின் மூடநம்பிக்கைகள் சிறுவர்களை துண்டாடச் செய்கின்றன. அவர்களின் இரத்தத்தை ஆறாக வயலில் விடுவதும் நிலவி வருகின்றது.

ஆகவே எவ்வாறு இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவராக முடியும்? அதற்காக சிறுவர் உரிமைகளை கட்டாயப் படுத்தல், சிறுவர்கள் வேலைக்கு அமர்த்துவதை தடுத்தல், போதைப்பொருட்களை அழித்தல், ஏழைச்சிறுவர்களுக்கு நிதியுதவி வழங்கல், மூட நம்பிக்கைக்கு எதிராக விழிப்புணர்வு செய்தல். இவ்வாறு செய்தால் இன்றைய சிறுவர்கள் நாளை நிச்சயம் தலைவர்கள் ஆவது திண்ணம்


த. வைதேகன்

9E

# கடந்து வந்த பாதைகள்



கல்லூரிக்கு நூல்கள் அன்பளிப்பு



மாவட்ட மட்ட பொது அறிவுப் போட்டி



முதல் நிர்வாக சபை [2000]

# முயற்சி செய்

படிக்கின்ற பரவசத்தில்
எழுச்சி கொள்
உன் பாதைகளை தெரிந்து
பாதங்களை பதித்து கொள்

பிறந்திட்டோம் வாழ்வோம் என
பிடிப்பின்றி இருந்திடாமல்
அழியாத கால் தடங்களை
ஆங்காங்கே விட்டுசெல்

இமைகளை திறந்து
கனவுகளை நிஜமாக்கு
சிந்தனை சிதறல்களை
சில நிமிடம் ஒதுக்கு

பூட்டுக்களை தகர்த்தெறி
புதுவுலகம் கண்டுபிடி
பூமிப்பந்து உன் காலடியில்
தவம் இருக்கும்

விடியல்களை கண்டு கொள்
விடைகளைத் தேடிக்கொள்
உன் நரம்பெல்லாம் புது
நம்பிக்கை படரும்

சோகங்கள் வேண்டாம்
கண்ணில் ஈரம் வேண்டாம்
சோதனைகளை ஏற்றிகொள்
தோற்று ஓடுவது சோம்பல் தான்

வியக்குமளவு சிந்தனை செய்
வாயார இன்சொல் பேசு
வானம் இறங்கி வந்து
வெண்கம்பளம் விரிக்கும்

கரையில் மோதுவதால் தான்
கடலலை அழகு பெறுகிறது
கவலைகளுடன் போராடுவதே
கற்ற கல்விக்கு அழகு

பல தடவை வீழ்ந்தாலும்
பக்குவமாய் எழுந்து நில்
மறுபடியும் உன் வழியில்
மாற்ற மின்றி பயணம் செய்

இன்றைய ஒவ்வொரு நொடியும்
உன்னால் உபயோகமானால்
நொடிகளால் ஆன ஒவ்வொரு நாளும்
உனக்கு விடிவு தான்.

மூட்டைப்பூச்சி கூட
முடங்கிக் கிடப்பதில்லை
மூளை கொண்ட மனிதா
இன்னுமா அச்சம்???

B. சுரேஸ்
A/L (2011)
கணிதப்பிரிவு



# மாணவரின் அச்ச உணர்வுகளும் அதன் தாக்கங்களும்

தன்னொழுக்கங்களை மிகவும் பாதிக்கும் உணர்வுகளில் அச்ச உணர்வு மிக முதன்மையானது ஆகும். மாணவர் மத்தியில் பல்வேறு காரணங்களினால் ஏற்படும் அச்ச உணர்வுகள் அவர்களின் கல்வியிலும் உள உடல் நலத்திலும் பல தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

சிறு வயதிலே பெற்றோர், உறவினர், நண்பர், போன்றவர்களின் தவறான வழிநடத்தைகள் காரணமாகச் சிறுவர் பலர் அச்ச உணர்வுக்குள்ளாக்கப்படுகின்றனர். இன்னொரு வகையினர் தாமாகவே தன்னம்பிக்கை துணிவு, மனோதைரியம் இன்றி இத்தகைய உணர்வுகளிற்குள்ளாக்கப்படுகின்றனர். சிலர் தமது அங்கவீனம் மற்றும் குறைபாடுகளால் தாழ்வு மனப்பாங்கிற்கு உட்பட்டு அச்சவுணர்வுக்கு அடிமையாகின்றனர்.

சிறுவயது முதல் தன்னம்பிக்கை, மனோதைரியம், துணிவு என்பவற்றை வளர்ப்பவர்கள் பெற்றோராவர் குறைபாடுகள் காரணமாக எழும் தாழ்வு மனப்பான்மையைப் போக்கி உன்னால் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டித் துணிவுள்ளவர்களாகச் சிறுவரை வளர்த்தல் அவசியமாகும்.

## புதிய விடயங்களை கற்கும் போது ஏற்படும் அச்ச உணர்வு

மாணவப்பருவத்திலே மாணவர் பல புதிய விடயங்களைக் கற்கும் போது பதகளிப்பு அடைகின்ற நிலையை நாம் அவதானிக்கலாம். அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் இடர்பாடுகளையும் தீர்க்க முடியாத ஒரு நடு நிலையற்ற இயல்பு பதகளிப்பு என சிக்மன்ட் புரொய்ட் கூறுகின்றார். பதகளிப்பை ஒரு பய உணர்வாக கொள்ளலாம். பதகளிப்பை கற்கும் நிலையில் இதயம் விரைவாகத் துடித்தல், வியர்த்தல், மூச்சு வாங்குதல் என்பன மூலம் இவ் உணர்வுகள் வெளிக்காட்டப்படுகின்றன. இதனால் சிக்கலும் ஏற்படுகிறது.

## பரீட்சைகள் காரணமாக அச்சம் ஏற்படல்

பொதுவாக மாணவர் பலருக்கு பரீட்சைப்பயம் எனும் உணர்வு ஏற்படுவது இயற்கை, கல்வியலாளர்களும், உளவியலாளர்களையும் சிறிதளவு பய உணர்வு மாணவரைப் பரீட்சைக்கு நன்றாக ஆயத்தப்படுத்த உதவும் என்கின்றனர். ஆனால் பரீட்சையில் கடினமான கேள்விகள் வந்தால் என்ன செய்வது என்ற அதீதமான பயவுணர்வு மாணவரைப் பாதகமான விளைவுகளுக்கு இட்டுச் செல்கின்றன. இவ்வுணர்வுகளைப் புரிந்து கொண்டு இவர்களை இதில் இருந்து விடுவிப்போராகப் பெற்றோரும், ஆசிரியர்களும் செயற்படுதல் வேண்டும்.

இத்தகைய அச்ச உணர்வுகளை நீக்கச் சகல முயற்சிகளும் மனம் சோராது தொடர்ந்து செயற்பட வேண்டும். அச்சமும் தாழ்வுணர்வும் வெற்றியின் முதல் எதிரிகளாகும். நீரில் இறங்காது நீந்த முடியாது இதேபோலவே செயலில் இறங்காமல் திறமையும், வெற்றியும் பெறமுடியாது என உணர்த்தப்பட வேண்டும். ஒரேயடியாகப் பெரு வெற்றிகளைப் பெற ஊக்குவித்து இப் பய உணர்வினைப் போக்க வேண்டும். இந்தச் சிறு சிறு வெற்றிகள் நாளடைவில் பெரு வெற்றியாக மாறும்.

சி. சாகித்தியன்
9E



## சிறுவரும் பக்தி சார் செயற்பாடுகளும்

பொதுவாக சிறுவர்கள் உடல், உள, ஆன்மீகம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுவோர். அதிலும் கூடுதலாக ஆன்மீகம் சார்ந்த செயற்பாடுகளிலே ஈடுபடுவார்கள்.

உதாரணமாக ஒரு கோயிலில் அநேகமாக மாணவர்களே தேவாரம் பாடுவார்கள், பூசைப் பொருளை ஒழுங்கு செய்வார்கள், இது அவர்களிற்கு பிடித்தமான

விடமாகக் கூட அமையலாம்.

பாடசாலை கோயில் கும்பாபிஷேகத்திலும் பொதுவாக சிறுவர்களே தோரணம் கட்டல், பூசை ஒழுங்கை நிர்வகித்தல் போன்றவற்றை செய்வார்கள்.

பிரார்த்தனை மண்டபத்திலும் இவர்கள் இவ்வாறான செயற்பாட்டுடன் "ஓம்" காரம் செய்தல் பண்ணிசை பாடல், சமயப் பேச்சுக்கள் பேசுதல் போன்றவற்றில் ஈடுபடுவார்கள்.

அதுமட்டுமல்லாது பக்திசார் செயற்பாட்டு போட்டிகள் கூட எம் சமூகத்தில் இடம்பெறுவதை அவதானிக்கலாம்.

இதன் மூலம் மனம் ஒருமைப்படும், பக்தி வளரும், வீரம் வளரும், அமைதி அதிகரிக்கும், குரல் இனிமையாகும் இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம் .

மற்றுமொரு விடயமாக இன்று பக்தி சார் விடயங்கள் சிறுவர்களுக்கிடையே சினிமா மோகத்தாலும், கணனி போன்ற தொழில் அம்சங்களாலும் குறைக்கப்படுகிறது.

இதற்காக சிறுவர்களுக்காக இந்துக் கழகங்கள் இயங்கி வருகின்றன. இது சிறுவர் பக்தி சார் செயற்பாட்டை மேலும் மெருகூட்டும் இவ்வாறான சந்தர்ப்பங்களை சிறுவர்கள் பயன்படுத்தி வாழ்வாங்கு வாழவேண்டுமென்பதே அனைவர்களினதும் அவா.

க. வைதேகன்
9E



## சிறுவர் துஸ்பிரயோகம்

இன்றைய சிறுவர்களே நமது நாட்டின் தலைவர்கள் இதனை உணராதவர்கள் சிறுவர்களை பல்வேறு வகையில் துன்புறுத்துகின்றனர். இதனை அறிந்த ஐக்கிய நாடுகள் சபை ஒக்டோபர் முதலாம் திகதியை சிறுவர் தினமாக பிரகடன்படுத்தியுள்ளது. எனவே எதிர்கால நாட்டின் சிற்பிகளை நல்லபடி பேணிக் காப்பது அனைவரினதும் கடமையாகும்.

ஆனால் நமது சமுதாயத்தில் சிறுவர்களை பலர் இழிவாக நினைத்து சித்திரவதை செய்கின்றனர். கொடுமைப் படுத்துகின்றனர். அதைவிட பிஞ்சுக்கைகளினால் வேலை வாங்குகின்றனர் சில இடங்களில் குடும்பப் பொறுப்பை சிறுவருக் கு சுமத்துகின்றனர். சிலர் சிறுவர்களை உலகில் கால் எடுத்து வைக்க முன்னர் அழித்து விடுகின்றனர். உலகில் எழுத்தறிவின்மை சுமார் 86 கோடியை தாக்கியுள்ள பெரும் பிரச்சினையாகும் இதில் பெரும்பாண்மையானவர் சிறுவர்கள் என ஐ.நா சபை தெரிவித்துள்ளது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் 6-11 வயதுக்கு உட்பட்ட 12 கோடி சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்புவதில்லை இதில் பெண்கள் அதிகம் வீட்டுவேலைகளில் ஈடுபடும் சிறுவர்களிலும் பெண்களே அதிகம் இவர்கள் பாலியற் துஸ்பிரயோகம், கடத்தல் என்பவற்றில் ஈடுபடுத்தப்படுகின்றனர். தெற்காசியாவில் 50 இலட்சம் பிள்ளைகள் வீட்டு வேலைக்காக அமர்த்தப்பட்டுள்ளனர் தெற்காசியாவில் அடிமை வியாபாரம் அதிகரித்திருப்பதால் சுமார் ஒரு இலட்சம் சிறுவா சிறுமியர் கடத்தப்பட்டு விற்கப்படுகின்றனர் உலகம் பூராக 5 இலட்சம் சிறுவரும் 12 இலட்சம் சிறுமியரும் கடத்தப்பட்டு விற்பனை செய்வதாக யுனிசெப் கூறுகிறது.

உலகில் ஒவ்வொரு செக்கனிலும் 20 இளஞ்சிறுவர்கள் தடுக்கக் கூடிய நோய்களால் இறக்கின்றனர். ஆபிரிக்காவின் தென் பிராந்தியத்தின் ஒரு கோடியே 60 இலட்சம் சிறுவர்கள் இலகுவில் தடுக்கக் கூடிய நோய்களால் மரணமடைகின்றனர். இவ்வாறு இந்நிலமை தொடர்ந்தால் உலகின் நாளைய தலைமுறை அழிக்கப்படுவார்கள் உலகின் நாளைய நிலை என் னாவது?

இதைத் தடுக்கவே வருடம் தோறும் சிறுவர் தினம் கொண்டாடப்படுகிறது. இதன் நோக்கம் விழிப்புணர் வின் மூலம் சிறுவர் துஸ்பிரயோகங்களை தடுத்தல் இதைவிட பல சட்டங்கள் வெளிநாடுகளில் ஏன் எமது நாட்டிலும் நடைமுறையில் உள்ளன. SAFE THE CHILDREN யுனிசெப் நிறுவனம் உலகம் பூராகவும் காணப்படுகின்றது.

எனினும் இந்த துஸ்பிரயோகங்கள்

குறையவில்லை இந்த வருடம் எமது சிறுவருக்காக ஐக்கியப்பட்ட தேசத்தை கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் கொண்டாடப்பட்டது. இதன் போது சிறுவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்த பல விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படும். ஆனால் சிறுவர்களின் சமூகத்தில் ஏற்படும் சிக்கலை தீர்ப்பதற்கான அறிவும் அனுபவமும் ஆற்றலும் வழங்குவது சிறந்தது. எனவே நாம் அனைவரும் எமது எதிர்கால சந்ததியினரை இயன்றவரை சிக்கலில் இருந்து காப்பாற்றி நமது உலகின் எதிர்காலத்தை வளம் படுத்துவோம்.

இ. சுவிஸ்ரன்
A/l 2011



## சின்னஞ் சிறார்கள்

துள்ளித் திரியும் சிறுவர்கள் நாம்
துடிப்புடன் விளையாடிடுவோம்
பள்ளி செல்லும் சிறுவர்கள்
பாங்குடன் கூடி மகிழ்ந்திடுவோம்.

வண்ண வண்ணப் பூக்கள் நாம்
வகை வகையாக மலர்ந்திடுவோம்
சின்னச் சின்னச் சிறுவர்கள் நாம்
சேர்ந்து கூடி ஆடிடுவோம்.

சிரித்துச் சிரித்து மகிழும் நாம்
சீரான கதைகள் பகிர்ந்திடுவோம்
சேர்ந்து கூடிக் குலவும் நாம்
செல்லமான சிறுவர்களாவோம்.

சி. விஷாகனன்
தரம் 6C

# சிறந்தது எது?

கல்வி என்பது சிறுவர்களாகிய யாவரும் கற்க வேண்டிய ஒரு விடயமாகும். இதன் மூலமே ஒவ்வொருவரினதும் வாழ்க்கைத்தரம் வேறுபடுகின்றது. கல்வியை நன்றாக கற்றவர் கள் தங்கள் வாழ்க்கையில் உயர் நிலையையும் கல்வியை நன்கு கற்காதவர்கள் தங்கள் வாழ்க்கையில் தாழ்ந்த நிலையையும் அடைகிறார்கள். இதனையே வள்ளுவர் தமது நூலில் "மன்னனுக்கு தன் தேசமல்லால் சிறப்பில்லை கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என அழகாக கூறியுள்ளார். முன்னொரு காலத்திலே "கல்வியானது சிறுவர்களது உரிமையாகும்" எனும் தலைப்பிலே ஒரு பெரியவரானவர் பேசுகையிலே இக்கருத்தைப் புலப்படுத்தும் முகமாக ஓர் கதை ஒன்று கூறினார் இக் கதையானது.

"முன்னோர் காலத்திலே விசவாயங்கபுரம் என்னும் ஓர் ஊர் இருந்தது. அக்கிராமத்தில் வாழ்ந்தவர்களில் அதிகமானோர் ஏழ்மைக் குடும்பத்தை சார்ந்தவர்கள் அவர்கள் கமத் தொழிலையே தங்கள் பிரதான தொழிலாக கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் தொழில் அப்படியிருக்க அவர்களது கிராமத்தில் 15 ஆண்டுகளுக்கு மேலாக போதியளவு மழை பெய்வதில்லை இதனால் மிகவும் திண்டாடினார்கள். இவர்களது வாழ்க்கை சற்றுக் காலம் இவ்வாறே கழிந்தது.

இவர்களது குழந்தைகளில் அனேகம் பேர் பள்ளிசெல்லும் வயதினை எட்டியும் அவர்களால் பள்ளி செல்ல முடியவில்லை. இதையே ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொண்ட ஒரு சிறுவர் குழுவானது பள்ளிக்குச் செல்லும் எண்ணத்தையே முற்றாக மறந்து, பள்ளிக்குச் செல்பவர்கள் அனைவரும் வீண்பொழுது போக்குகிறார்கள் என்று தங்களுக்குள் நினைத்தவர்கள் போன்று நாட்களையெல்லாம் விளையாடுவதிலும் வெட்டிப் பொழுது போக்குவதுமாக கழித்து வந்தார்கள்.

இதையெல்லாம் பார்த்த மற்றைய சிறுவர் குழுவானது இவர்கள் பள்ளிக்குச் செல்லும் எண்ணத்தையே முற்றாக மறந்து வீண்பொழுது போக்குவதிலேயே ஆர்வமாக உள்ளார்கள்

என்பதை உணர்ந்து அவர்களுக்கு கல்வி கற்கவேண்டியதன் அவசியம் கல்வியானது அனைத்து சிறுவர்களினதும் உரிமை என்பவற்றையெல்லாம் அவர்களுக்கு கூறி அதற்கு அவர்களுக்கு விளங்கும்படியாக அதன் பொருளையும் கூறி அவர்களையும் தங்களுடன் இணைத்துக் கொண்டு கல்வியை எவ்வாறு கற்கலாம் என்ற வழியைத் தேடுவதில் அனைவரும் முனைப்பாக ஈடுபட்டிருந்தனர்.

சிறிது நாட்களின் பின் அவ்வூரிலே நிகழ்ந்த பொதுக் கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கல்விப் பணிப்பாளரானவர், சிறுவர்களிடம் அவர்களது குறைகளைக் கேட்க முனைந்த போது அங்கிருந்த சிறுவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் தங்களுக்கு இருந்த ஒரே குறையான கல்வி கற்கும் வசதியை செய்து தருமாறு கேட்ட போது உடனே அதை செய்து தருவதாக உறுதி மொழி கூறிய அவர் மறுநாளே அக்கிராமத்துக்கு அயலிலுள்ள பாடசாலை அதிபரிடம் சென்று நடந்தவற்றை கூறி அனைத்து சிறுவர்களும் அப்பாடசாலையிலே கல்வி கற்பதற்கு வசதியை செய்து ஒரு நல்ல நாளில் அனைவரையும் பாடசாலையில் சேர்த்து அவர்களது கோரிக்கையை நிறைவு செய்தனர்.

இவ்வாறு பாடசாலையில் சேர்ந்த அனைவரும் தாங்கள் இக்கல்வியை கற்பதற்காக முன்பு சிரமப்பட்டதை உணர்ந்து கல்வியில் நன்கு தேர்ச்சி பெற்று உயர் நிலையை அடைந்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் என்றும் கல்விச் செல்வத்தை மறவாதவர்களாய் உயர் பதவிகளை வகித்த பின்னர் அக்கிராமத்தையே ஓர் செழிப்பு மிகு கிராமமாக்கி சமூகத்தில் ஓர் உன்னத நிலையை அடைந்தார்கள்" என்று முடித்துக் கொண்டார்.

இவ்வாறே சிறுவர்களாகிய நாம் எமது உரிமையான கல்வியை சிறப்புறக்கற்று எமது வாழ்க்கையில் ஓர் உன்னத நிலையை அடைவோமாக.

சி. சிந்துஷன்
8C




# சிறுபார்வை

சிறுவர்களின் துஸ்பிரயோகத்தை தடுப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் நெவெம்பர் இருபதாம் திகதி உலக சிறுவர் தினமாக பிரகடன படுத்தப்பட்டது. ஆனால் இலங்கையில் ஒக்டோபர் முதலாம் திகதியை சிறுவர் தினமாக இலங்கை அரசாங்கம் பிரகடனப்படுத்தியது.

"இன்றைய சிறுவர்கள் தான் நாளைய தலைவர்கள்" இதனால் நாம் நமது பிள்ளைகளை மட்டும் படிக்க வைக்காமல் ஏழைச்சிறுவர்களையும் படிக்க வைக்க வேண்டும். நாம் இயன்ற அளவு அவர்களுக்கு உதவிகளை செய்ய வேண்டும். நாம் ஒருபோதும் மறந்தும் சிறுவர்களை வேலைக்கோ அல்லது துஸ் பிரயோகங்களுக்கோ உட்படுத்தக் கூடாது.

சிறுவர் துஸ்பிரயோகங்களிற்காக சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதால் சிறுவர்களை சித் திரவதை செய்தல், சிறுவர்களை மோசமாக தண்டித்தல், சிறுவர் களின் மனம் நோக பேசுதல், சிறுவர்களை வைத்து போதை மருந்துகளை கடத்துதல், தீவிரவாதிகளாக மாற்றுதல் போன்ற பல சிறுவர் துஸ்பிரயோகங்களை முக்கியமாக தவிர்க்க வேண் டும் உங்கள் பிரதேசங்களில் இவ்வாறான துஸ்பிரயோக செயல் நடப்பின் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது சிறுவர் அமைப்பிடமோ சிறுவர்களை துஸ்பிரயோகம் செய்பவர் கள் மேல் முறைப்பாடு செய்யுங்கள்.

ம.சிவானுஜன்
8A



# சிறுவர்களும் வீட்டுத் தோட்டமும்

ஒவ்வொரு சிறுவர்களும் ஏதோ ஒரு விதத்தில் தமது பொழுதினை போக்குகின்றனர். விளையாடுவதிலும் தொலைக்காட்சி பார்ப்பதிலும் கதைப்புத்தகங்களை படிப்பதிலும் ஆர்வத்துடன்

ஈடுபடுவதோடு குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்து தமது வீட்டில் தோட்டம் செய்வதிலும் ஈடுபடுகின்றன. வீடுகளுக்கு அருகே உள்ள ஒரு சிறு நிலப்பரப்பில் தாவரங்களை வளர்த்தாலே வீட்டுத் தோட்டமாகும் வீட்டுத்தோட்டம் ஒன்றை உருவாக்க சிறிய நிலப்பரப்பு போதுமானது.

வீட்டுத் தோட்டமொன்றைச் செய்வதால் சிறுவர்களாகிய எங்களுக்கு உடற்பயிற்சியும் மனதுக்கு அமைதியும் கிடைக்கும் இதனால் மனதில் இரம்மியமான நன்மை உருவாவதோடு நோயற்ற வாழ்வையும் வாழ முடியும்.

வீட்டுத் தோட்டம் வீட்டைச்சுற்றி அமைந்திருப்பதால் அதனைப் பார்க்கும் போது கண்ணுக்கும் ஏன் மனதுக்கும் குளிர்ச்சியாக இருப்பதுடன் அழகாகவும் காட்சி கொடுக்கும்

எமக்குத் தேவையான அளவு தேவையான மரக்கறிகளை பழங்களை பெற்றுக்கொள்ள முடியும் இப்பொருட்கள் போசாக்கானவையாக இருப்பதுடன் புதிதானவையாகவும் இருக்கும் புதிதானவையில் சத்து கெடுவதில்லை.

வீட்டுத் தோட்டம் பொழுதுபோக்காகச் செய்தாலும் அதிக உற்பத்தி கிடைக்கும் போது சந்தையில் விற்று பணத்தினையும் சம்பாதிக்கலாம் அப்பணத்தினைக் கொண்டு தேவையான பொருட்களை வாங்கவும் முடியும்.

எமது வீட்டில் தோட்டம் செய்வதினால் கிருமிநாசினிகளின் பயன்பாடு குறைவாகவும் இரசாயன உரவகைகள் குறைவாகவும் பயன்படுத்துவதினால் நச்சூட்டல் குறைவடைகின்றது நச்சூட்டல் குறைவதினால் சிறுவர்களை அல்லது வயது வந்தவர்கள் நோய் நோடிக்கு உட்படுவது குறைவாகவே இருக்கும்

சந்தையில் நாம் மரக்கறிகளை வாங்குவோமாயின் அவை அறுவடை செய்து மூன்று நான்கு நாட்களுக்கு பின்பே பயன்படுத்துவதாக இருப்பதினால் இதனால் ருசியும், தரமும், சத்தும் குறைவாகவே அமையும்.

வீட்டில் தோட்டம் செய்யாதவர்கள் சந்தையிலையே பொருட்களை வாங்குவதினால் அதிக பணம் கொடுக்க வேண்டியுள்ளது. தரகர்கள் - தோட்டக்காரரிடம் வாங்கும்

பொருட்களை அதிக இலாபம் வைத்து விற்க முற்படும் போது அதனால் நுகர்வோர் அதிகரித்த விலையில் கொள்வனவு செய்ய வேண்டி நேரிடும்.

சிறுவர்களாகிய நாம் வீட்டுத்தோட்டங்களை தெரிவு செய்து சில மரக்கறி வகைகளை பயிரிடலாம் உ+ம்:- கத்தரி, வெண்டி, பயிற்றங்காய், தக்காளி, பாகல், புடோல், மிளகாய், முருங்கை வகை, கோவா, கரட், பீற்றூட் இதனை விட நல்ல சத்தான எல்லாலோராலும் விரும்பப்படுகின்ற மருத்துவக் குணமுள்ள இலை மரக்கறி வகைகள் பல உண்டு. அவையாவன வல்லாரை (ஞாபகசக்திக்கு ஏற்றது) அகத்தி, பொண்ணாங்காணி, தவசி முருங்கை, முளைக்கீரை அத்தோடு - உணவு வகைகளுக்கு வாசனை ஊட்டும் பொருட்களாகவும் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடலாம். இதுவும் சிறந்த நடவடிக்கையாகும் அவையாவன கருவேப்பிலை, இஞ்சி, மஞ்சள், ரம்பை போன்றவையாகும்.

வீட்டுத் தோட்டங்களுடன் அதிகமானவர்கள் மிருக வளர்ப்பிலும் அதிக ஆர்வமும் அக்கறையும் காட்டி வருகின்றனர். கோழி, வாத்து, தாரா, முயல், மீன், ஆடு, மாடு என்பன வளர்க்கின்றார்கள் கிராமப் புறங்களில் உள்ள தோட்டம் செய்பவர்கள் மிருக வளர்ப்பில் அதிகம் ஈடுபடுகின்றனர். சிறுவர்களாகிய நாங்கள் முயல், மீன் வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றோம் இவைகளை வைத்து இனத்தைப் பெருக்குகின்றனர். விற்பனை நடவடிக்கையிலும் ஈடுபடலாம். எமக்கு குறுகிய அளவு பணம் கிடைக்கும். எமக்கு விரும்பிய பொருட்களை வாங்க முடியும்.

சி. திவ்வியன்
10A



## சிறுவர்களும் சினிமாவும்

இன்றைய இந்த விஞ்ஞானமயமான உலகிலே பலரும் இயற்கையை விட செயற்கையை அதிகம் விரும்பியிருக்கின்றனர் அதே போல் பொதுவாக பலருக்கு தமது

வேலைகளைத் செய்வதை விட பொழுது போக்கு அம்சங்களையே அதிகம் விரும்புகின்றனர் இதில் சிலர் இந்த போக்குகளிற்காக தமது வேலைகளை ஒதுக்கியவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு பலரும் பொழுது போக்குகளை விரும்பும் நிலையில் அவற்றிற்கான முறைகளும் பல உள்ளன. அவ்வாறு பார்க்கும் பொழுது அவற்றுள் சினிமா என்னும் தொகுதி உலகில் பலரின் மனதைக் கவர்ந்தும் பலரை பித்துப்பிடிக்கவும் வைத்திருக்கிறது சினிமா என்பது தற்போது அனைவரையும் வெகுவாக கவர்ந்திருக்கிறது என்பது மட்டுமல்லாது அது பலரை பாதித்திருக்கிறது சினிமாவில் நடிப்பவர்கள் அதிக பணத்தை சம் பாதிக்க பார்ப்பவர் அதிக பணத்தை இழக்கின்றனர் என்பதே உண்மை.

வியாபார நோக்கங்களிற்காக எடுக்கப்படும் திரைப் படங்கள் மூலம் மக்களிற்கு ஒரு பிரதான உப கருத்துக்களை வெளிப்படுத்துவது சினிமாவாகும். சினிமா என்பது மிகவும் கவர்ச்சிகரமாய் எடுக்கப்படுவதால் பல இளைஞர்கள், யுவதிகள் அவற்றில் ஈர்க்கப்படுகின்றனர் சிறுவர்களும் இதற்கு விதிவிலக் கல்ல.

இன்றைய கால சினிமா அல்லது திரைப்படங்கள் பலவற்றின் மையக்கருத்து நல்லதாய் இருந்தாலும் கூட அவற்றை மக்களுக்கு வெளிப்படுத்த சில தீய வழிகளையே பயன்படுத் துவது குறிப்பிடத்தக்கதாகும் அந்தக் காலங்களில் திரைப்படங் களில் வந்த காட்சிகளும் மையக்க கருத்தும் பெரிதாக மக்களை பாதிக்கவில்லை. ஆனால் தற்போதைய திரைப்படங்கள் சிறுவர் களைப் பெரிதும் பாதிக்கின்றது. என்ற குற்றச்சாட்டு முன் வைக் கப்படுகிறது.

நவீன முறை என்ற வகையில் திரைப் படங்களை பிரமாண்டமாக தயாரித்து இளைஞர்களை சீரழிய வைக்கும் இயக்குனர்கள், தயாரிப்பாளர்களும் உள்ளனர். இதற்கு அண்மையில் வெளிவந்த “போய்ஸ்” திரைப்படம் சிறந்த உதாரணமாகும். பெரும் பட்ஜெட்டில் தயாரிக்கப்பட்ட இத்திரைப் படம் பலரது எதிர்ப்புக்களை பெற்றும் கூட வெற்றிகரமாய் ஓடியது.

எது எவ்வாறாக இருப்பினும் ஆபாசம் இல்லாத

இளைஞர், சிறுவர்களை பாதிக்காத திரைப்படங்கள் பல வெற்றிகரமாய் ஓடியது என்பது குறித்துக் காட்ட வேண் டியவையாகும். உதாரணமாக சுப்பிரமணியபுரம், சந்திரமுகி, வாரணமாயிரம் போன்றவையாகும். இருந்தும் கூட தற்சமயத்தில் மேற்குறிப்பிட்டவை போன்ற படங்கள் செறிந்தே காணப்படுகின்றன.

ஆபாசம் என்பது கட்டிளமை பருவ மாணவர்களை மாத்திரமே பாதிக்கின்றது ஆனால் திரைப்படங் களில் வரும் சண்டைக் காட்சிகள் சிறுவர்களையும் பாதிக்கிறது. சிறுவர் கல்வி நிலையங்களில் வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கு முன் னரும் முடிந்ததன் பின்னரும் சிறுவர்கள் திரைப்படங்களில் வருவது போன்றே சண்டை செய்கின்றனர். திரைப்படங்களில் கதாநாயகனே டூப் போடும் காட்சிகள் சிலவற்றை பலர் தாமே செய்து பார்ப்பதில் உடல் நிலை காயங்களும் உயிர் இழப்புக் களும் பரிதாபமாய் நிகழ்ந்து உள்ளது. காமெடி என்ற பெயரில் சில நகைச்சுவை நடிகர்கள் தீய வார்த்தைகளை பயன்படுத் துகின்றனர். அவ்வாறான காமெடிகள் மாணவரின் மனதில் இடம் பிடித்தாலும் அவ்வாறான சொற் பயன்படுத்தல்கள் இளைஞர் களின் எதிர் காலத்தை வீணடிக்கின்றன.

அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு (Too Much of any thing is good for nothing) எனும் பழமொழிக்கிணங்க நாம் நமது பிரதான பொழுது போக்கான சினிமாவை ஒரு கட்டுப் பாடுடன் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. எனவே இனிமேலாவது இதனை வாழ்வில் கடைப்பிடிப்போம்.

த. மதீசன்
10A



## நல்லதைச் செய்வோம் தீயதை விலக்குவோம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்." என்பது வள்ளுவர் வாக்கு. இவ்வாக்கியத்திற்கு இணங்க நாம் வாழ வேண்டும். ஒரு சாரார் எப்படியும் வாழலாம் என்பர்.

மறு சாரார் இப்படித்தான் வாழ வேண்டும் என்பர். நமது வாழ்வு நல்வாழ்வு பெற்று நலம் பெறுவதற்கு நாம் முதலில் நல்லனவற்றை எடுத்துத் தீயவற்றை விலக்க வேண்டும்.

மானிடராகப் பிறந்த நாம் எமது மனதில் அன்பு, பண்பு, பாசம், நேசம், இரக்கம், ஆகிய நல்ல குணாம்சங்களை வளர்க்க வேண்டும். இவற்றை நாம் கடைப்பிடித்து வந்தால் எமது வாழ்வு சிறக்கும். எமக்கு நன்மை செய்ய முடியாவிட்டாலும் பிறருக்கு தீமையாவது செய்யாதிருக்க வேண்டும். சத்தியத்தின் உயர்வைப் பின்பற்றி நல்ல முறையில் வாழ வழி காட்டும் இலக்கியங்களைப் படிக்க வேண்டும்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்ற முதுமொழிக்கிணங்க நாம் வாழ வேண்டும். நல்ல பழக்கவழக்கங்களைச் சிறு வயதில் இருந்தே பழகிக் கொள்ள வேண்டும். நாம் பிறருக்கு நன்மை பயக்கும் செயல்களையே செய்ய வேண்டும். தீயனவற்றை விலக்கி நல்லனவற்றையே செய்து வந்தால் எமது வாழ்விலும் எமக்கு நல்ல பயன்கள் கிடைக்கும். மகாத்மா காந்தி போன்ற பெரியார்களின் வாழ்க்கை வரலாற்றைப் படித்துச் சிறுவர்களாகிய நாம் என்றென்றும் நல்லதையே செய்வோம். என்று உறுதி பூணுவோமாக

சி. விஷாகணன்
தரம் 6C



## அதிஷ்டம்

அதிஷ்டம் தேடியும் வராது!
எதிரில் இருந்தும் தெரியாது.

துணிந்தவன் கரத்தில்!
துணை நிற்கும்
ஏங்கியிருப்பவனிடத்தே
ஏமாற்றத்தை தான் கொடுக்கும்

சீட்டுக்கள் மட்டுமல்ல
மனத்துள்ளும் முயற்சியாக
குடிகொண்டு - செல்வம்
கோடியாக குவிக்கும்

கண் விழித்தும் பின் எழுதும்
பேனா முனையிலும்
உதட்டோரச் சிரிப்பிலும்
கள்ளமற்ற உள்ளத்திலும்
உளறி நிற்கும்

பரீட்சை பெறுபேறாக
உன்னத தந்த அன்னையாக
அறிவு தரும் தந்தையாக
உயிர் கொடுக்கும் நட்பாக
அருகிலேயே இருக்கும் - அது
எதிரிலேயே தெரியும்!!!

ம. றொசாந்தன்
10F



## நல்லனவாய் வாழ்

ஓடி விளையாடு தம்பி நீ கூடி விளையாடு
சின்னஞ் சிறு வயதினிலே தம்பி நீ
ஓடி விளையாடு
பாலர்ப் பருவமதில் கூடி விளையாடு

கிட்டிப்புல், கிரிக்கட் எனப்பல உள
விளையாட்டில்
நீ அவைகளை தேர்ந்தெடு தம்பி
தேர்ந்தெடு

படிப்பு தனில் கவனம் செலுத்து
விளையாட்டில் மட்டுமன்றி
படித்தாய் தம்பி வாழ்வு
நீ நல்லவனாக வந்தால் வாழ்வு

உன்முயற்சி உன் கையில் அன்றி
மற்றவனிடம் இல்லை
நீ உறுதி உடையவனாக இரு
உறுதியுடன் போராடி வெல்லு

ஓ. நிதூசன்
8C



# சிறுவன் சீலன் எடுத்த புதையல்

ஓர் ஊரிலே ஏழ்மையான தம்பதியினர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் இருவருக்கும் இரு குழந்தைகள் பிறந்தன. அதில் முதலாவது மகனின் பெயர் சத்தியன் அவன் பிறந்து எட்டு வருடங்களின் பின்னேயே மற்றையவன் பிறந்தான். அவனது பெயர் சீலன் இவன் பிறந்து ஆறு மாதத்துக்குள் இவனது தந்தை இறந்து விட்டார்.

அதனால் அவர்கள் இருவரையும் காப் பாற்றும் பொறுப்பு அவர்களின் தாய்க்கு வந்துவிட்டது. அவர் என் ன செய்வார். ஒன்றும் தெரியாதவர் சில நாட்கள் சென்றன. அவர் ஒரு தையல் தொழிற்சாலையில் சேர்ந்து கொண்டாள் அதில் அவருக்கு நாள் ஒன்றுக்கு ரூபா முப்பது மட்டுமே கிடைத்தது அதனை கொண்டே அவர்களுடைய குடும்பத்தை நடத்த வேண் டியிருந்தது. அவர்களுக்கு அது போதாவிடினும் அவளது சேமிப் பின் காரணமாக ஒரு மாதிரி தனது மூத்த மகனை படிப்பித்தார். இரண்டாவது மகனானவன் சிறுவனாக இருந்த படியால் அவன் பள்ளி செல்லவில்லை.

இவரது மூத்த மகனானவன் வீட்டின் நிலமையை உணர்ந்து நன்கு கல்வியை கற்றான். அவனும் அவனது தாயைப் போன்று சிறுவயது முதல் சேமிக்கும் பழக்கத்தை கொண்டிருந்தான். இப்பழக்கமே இவனது குடும்பம் ஏழ்மையில் தவித்தாலும் இவன் படிப்பதற்கு ஊன்று கோலாக

அமைந்தது இவ்வாறு சிரமப்பட்டு விரைவாக தனது படிப்பை முடித்துக்கொண்டு ஓர் சிறு அரசாங்க வேலையில் சேர்ந்து கொண்டான்.

நன்கு ஏழ்மையில் வாடிய குடும்பத்திற்கு இது சற்று சுமை குறைந்தது போன்று இருந்தது. சற்றுக் காலம் செல்லச் செல்ல அவனுக்கு சம்பளமும் அதிகரித்தது. அவனது வீட்டின் ஏழ்மையும் குறைந்தது.

அது அவ்வாறிருக்க அவரது இரண்டாவது மகன் பள்ளி செல்லும் வயதை எட்டியும் பள்ளி செல்ல மறுப்புத் தெரிவித்துக் கொண்டு வீட்டில் சில மாதங்களாக நின்று விட்டான். இதனால் மிகவும் வருத்த முற்ற அவனது தாயார் இதற்கான தீர்வு ஒன்றை யோசிக்கலானார். அதன்படி ஒருநாள் சீலனை அழைத்து நீ பள் ளிக்குச் செல்வாயானால் ஒரு புதையலை எடுப்பாய் என்று கூறினார்.

புதையல் என்றால் என்னவென்று அறியாதவன் தன் தாயிடமே திரும்பக் கேட்டான் புதையல் என்றால் என்னவென்று அதற்கு தாய் எதிர் பார்க்காத அளவு செல்வத்தை அடைதலே புதையல் எனக் கூறினார்.

அன்று முதல் அவரது இரண்டாவது மகன் சீலன் பாடசாலைக்கு ஒருநாள் தவறாது ஒழுங்காகச் சென்று பாடங்கள் அனைத்தையும் நன்கு கற்று ஆசிரியர்களிடமும் நன்மதிப்பைப் பெற்று பின் அரசாங்கத்தில் ஓர் சிறு பகுதிக்கான அதிகாரியாக இவ்வாறு உயர் பதவிகளை வகித்து உயர் சம்பளங்களையும் பெற்று தனது குடும்பத்தில் நிலவிய ஏழ்மையை முற்றாக ஒழித்தான்.

இவ்வாறு சில காலங்கள் சந்தோசமாக கழிந்தன ஒரு நாள் தனது தாயிடம் நீங்கள் அன்றொரு நாள் எனக்கு கூறிய புதையல் இன்று எனக்கு கிடைத்து விட்டது எனக் கூறினான்.

அதைக்கேட்ட அவனது தாயார் அப்புதையல் என்னவென்று கேட்டார். அதற்கு சீலன் இன்று எனக்கு கிடைத்த பதவியும் பணமுமே அப்புதையல் என்று பதிலளித்தான். இதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்த அவனது தாயார் அன்று நான் இதையே புதையல் என்று உனக்கு கூறினேன். இன்று நீ அதை

பெற்ற பின்பே உணர்ந்துள்ளாய் என்று அவனைப் பாராட்டினார். இவ்வாறு அவன், அவனது சகோதரன் அவனது தாய் ஆகிய மூவரும் ஓர் மாளிகை போன்ற வீட்டில் மிகவும் சந்தோசமாக வசித்து வந்தார்கள்.

சி. சிந்துஷன்
8C



## சிறுவர்கள்

பதினெட்டு வயதினுள்ளே சிறுவர்கள்
பாரிலே நாளைய தலைவர்கள்
கள்ள மற்ற மனதுடைய பாலகர்கள்
களிப்பூட்டும் குறும்பின் காவலர்கள்

அன்பினால் அகமகிழும் தாய்
அவள் அரவணைப்பில் சிரிக்கும் சேய்
அறிவினை ஊட்டும் தந்தை
அதை பணிவாய் கேட்கும் அவன் சிந்தை

அன்பின் நண்பர் ஒருபக்கம்
ஆசிரிய பெருந்தகைகள் மறுபக்கம்
நன்றாக கழியும் பொழுது
இவர்கள் ஆலமரத்தின் விழுது

மி. துமிலன்
9E



## சிறுவர் நலம் காப்போம்.

பரமனால் படைக்கப்பட்டுள்ள இப்பாரினிலே இயற்கை அன்னையின் படைப்புக்களில் முதன்மையாக மனிதன் இடம் பெறுகின்றான். உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளை விட தனித்துவமான இம் மனித இனத்திலே பல்வகைப்பட்ட நிலைகள்

அதாவது பருவங்கள் உள்ளன. அவையாவன குழந்தைப்பருவம், இளமைப்பருவம், முதுமைப்பருவம் என்பனவாகும். இவற்றில் குழந்தைப் பருவம் வரை உள்ள காலப்பகுதியைச் சேர்ந்த வயதினரே சிறுவர்கள் ஆவார்கள் சிறுவர்கள் என்போர் யாவர் எனின் பதினெட்டு வயதுக்குட்பட்டோர் என ஐ.நா சபையால் வரையறுக்கப்பட்டுள்ளது. இச் சிறுவர் பராயமே ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு வித்திடும் அடிப்படைப் பராயமாகும்.

"இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்" எனும் மூத்தோர் சொல்லுக்கிணங்க எதிர்கால நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய தலைவர்களே சிறுவர்களாவர் இவர்களை சிறுவயதிலே நெறிப்படுத்துவோமாயின் எதிர்காலத்தில் நற்பிரைஜைகளாக மாற்ற முடியும். அறிவிலும், ஒழுக்கத்திலும், சமூகத்தின் பங்கு முக்கியமானதாகும். அவ்வகையிலே நாம் அவர்களது உரிமைகளை சரிவர வழங்கினால் எதிர்கால சமூகத்தை ஆரோக்கியமான சமூகமாக மாற்ற முடியும்.

சிறுவர்களது உரிமைகள் என்று நோக்குமிடத்து உயிர்வாழ்தல், பாதுகாப்பைப் பெறல், உணவு, உடை என்பவற்றைப் பெறல், கட்டாயக் கல்வியைப் பெறல், பெற்றோரின் அரவணைப்பை பெறல், போன்ற அடிப்படை உரிமைகளையும் சமூகமேம்பாடு, பிறரோடு ஒருங்கிணைந்து வாழ்தல், ஆளிடைப் பண்பை வளர்த்தல் அவர்களிடமிருக்கும் திறன்களை வளர்த்தல், பிறரோடு இணைந்து வாழ்தல், நற்பண்புகளை பெறுதல், அவற்றை வளர்த்தல், துஷ்பிரயோகங்களிலிருந்து விடுபடல், நற்பிஜைகளாக வளர்தல் போன்ற உரிமைகளையும் குறிப்பிடலாம்.

சிறுவர்களது நலம் எனில் உடல், உள, சமூக ஆரோக்கியத்துடன் வாழ்தலாகும். சிறார்கள் தமது உரிமைகளை சரிவரப் பெறுவார்களாயின் நலமாக வாழ்வார்கள். உடல் ஆரோக்கியத்தோடு வாழ பெற்றோரின் அரவணைப்பு, மனச்சஞ்சலம் இன்றி மகிழ்ச்சி, இன்பம், விளையாட்டுக்கள் என்பன தேவை. சமூக ஆரோக்கியத்தோடு வாழ சமூக ஒழுக்கங்களையும், நற்பண்புகளையும் பேணுதல், சமூகத்தோடு ஒத்து வாழ்தல் என்பன தேவை.

இன்றைய சமூகத்தின் நற்பிரஜைகளான

நாம் எதிர்காலத் தலைவர்களான சின்னஞ்சிறு சிறார்களை இன்று நிலவுகின்ற துஸ்பிரயோகங்களில் இருந்த மீட்டு அவர் களது நலத்தைப் பாதுகாக்க வேண்டும். சிறுவர் துஸ்பிரயோகங் களான சிறுவர்களை வேலைக்கமர்த்துதல், இவர்களை வெளிநாடுகளிற்கு விற்றல், அடித்துத் துன்புறுத்தல் என்பன அமைகின்றன.

மாறி வரும் இன்றைய உலகில் நவீனமயமான இயந்திர வாழ்வில் மனிதன் தன்னை ஈடுபடுத்தி எத்தனையோ கண்டுபிடிப்புக்களை கண்டு பிடித்து உலக மக்களின் வாழ்வை இலகுபடுத்தி முன்னேறிச் செல்கின்றான். ஆனால் வறுமையான நாடுகளில் சிறுவர் துஸ்பிரயோகங்கள் அதிகளவில் நடைபெற்று வருகின்றன. சிறுவர்களது அருமை தெரியாது. அவர்களைத் துன்புறுத்துகிறார்கள். இதனால் சிறுவர்களும் நல்வழி தவறி கெட்டபாதையில் செல்கின்றனர். இதனால் எதிர்கால சமூகமும் கெட்ட சமூகமாக மாறும் அபாயம் உள்ளது.

இன்று போரினால் அதிகளவான மக்கள் உலகளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்குள்ள சிறுவர்கள் பெற்றோரை இழந்து, கல்வியை இழந்து பல அசௌகரியங்களை எதிர்நோக் கியுள்ளனர். இவ்வாறான சிறுவர்களுக்கு நாம் அடிப்படை உரிமைகளை வழங்கி அவர்களது வாழ்வை மேம்படுத்த உதவவேண்டும். இன்றைய உதவி வழங்கும் நிறுவனங்களோடு இணைந்து உதவ வேண்டும்.

இன்று நிலவுகின்ற துஸ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களை மீட்டு அவர்களது உரிமைகளை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாக சர்வதேசம் பூராகவும் ஒக்டோபர் 1ம் திகதி சிறுவர் தினமாக கொண்டாடப்படுகிறது. இருந்தும் இன்று சிறுவர் துஸ்பிரயோகங்கள் நடைபெற்று வருகின்றன. என் பது கவலைக்குரிய விடயமாகும். இன்றைய சமூகத்தின் நற் பிரஜைகளாகிய நாம் சிறுவர் துஸ்பிரயோகங்களை இல்லாது ஒழிக்க எம்மால் இயன்ற வழிமுறைகளை அரசாங்கத்தோடு இணைந்து முன்னெடுக்க வேண்டும்.

இன்றைய சமூகத்தின் நற்பிரஜைகளாக எதிர்கால சமூகத்திற்குச் செய்யும் சிறந்த கடமையாக சிறுவர்களை துஸ் பிரயோகங்களிலிருந்து மீட்டு அவர்களது உரிமையை சரிவர

வழங்கி அவர்களது வாழ்வில் ஒழியேற்றி சிறந்த சமூகத் தலைவரை எதிர்கால சமூகத்துக்காக உருவாக்க வேண்டும். இதை அனைவரும் செயற்படுத்த வேண்டும்.

இன்றைய சிறுவர்களின் வாழ்வில் ஒளியேற்றி அவர்களுக்கு நற்பண்புகளையும் ஒழுக்கத்தையும் புகட்டி எதிர்கால தலைவர்களை பண்புள்ளவர்களாகவும் அறிவாற்றலில் சிறந்தவர்களாகவும் உருவாக்குவோமாக.

"சிறுவர் நலம் காப்போம்
நல் உலகம் படைப்போம்."

சி. நிதர்சனன்
A/L (2011)
Commerse



# சிறுவர்களின் சிறுவர் உலகை அவர்களுக்கு வழங்குவோம்

சிறுவர்களே! சிறுவர்களே! - சிறு
உலகைப்படைக்க முயலுங்களே!
மொட்டுக்களாயிலுள்ள நீங்கள் - நாளை
மலர்களாய் மலர
ஆயத்தமாகுங்கள்!
உங்களை விழுங்க ஆயிரம் கழுகுகள்
தரணியில் காத்திருக்கின்றன!
சிறுவர் உரிமை எனும் ஆயுதத்தால்
அவர்களை அடியொடு அழித்து
மலர்களாய் - நீங்கள்
நுண்துளை அகற்றுங்கள்
நறுமணம் நாற்திசை வீச
சிறுவர்கள் விழித்திருங்கள்!
உங்கள் கைகள் எல்லாம் - உலகின்
உறுதிக் கரங்கள்
உண்மை நெறியின் பக்கம் - உங்களை
தயார் செய்யுங்கள்

சிறுவர்கள் கண்ணில் கபடமில்லை
நெஞ்சின் ஓரத்தில் பொய்மையில்லை
உயிர்நாடி உலகிற்கு சிறுவர்களே!
கண்ணாடி விம்பமும் அவர்களே!
முன்னோடியாகுங்கள்
உங்கள் உலகை - நீங்கள்
போராடி வெல்லுங்கள்!
மனித சரித்திரத்தில் - உங்கள் புகழ்
மாறாது என்றும் காணும்!
தண்ணீரில் நனையாமல் - நீச்சல்
கற்க முடியாதே! - போல
போராட்டம் இல்லாது - வரலாறும்
காண முடியாது!
கவி பேசா கண்கள் ஏதோ! - போல
உணர்வற்ற சிறுவர்கள் உண்டோ?
கண் மகிழும் பாசங்களை
கவியுடன் பேசும் ஆற்றல்
சின்னஞ் சிறு சிறார்களின்
ஆயுள் இரேகையே!
ஹிட்லரின் வரலாறு முடிந்ததேனோ!
விதியாலே ஏற்பட்ட
வினை தானே! - அது
உங்கள் விதியெல்லாம் - உலகின்
பார்வை தானே!
உலகத்தின் அத்தனை சாந்தியும்
உங்கள் நெஞ்சிலுண்டு.
மனித இனத்தின் முன்னேற்றமும்
உங்கள் செயலில் தெரியணும்!
மனிதா! நீ யோசியடா.
சிறுவர்கட்கு உலகை வழங்கடா!
உண்மை நெறியில்
உலகை செலுத்தடா!

ஐ. உஷாந்தன்.
A/L(2010)Bio



# மகிழ்ச்சி மிக்க தேசத்தை எமக்கு வழங்குங்கள்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க எமது இளஞ்சமுதாயம் எந்தவித இடருக்கும் முகம் கொடாது சுபீட்சமான வாழ்வு வாழ்வது அவர்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகும். அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டியது இச் சமூகத்தின் தலையாய கடமையாகும். அவ்வாறு வழிப்படுத்தினால் தான் சிறார்களின் எதிர்காலம் ஒளிமயமாத் திகழும்.

சிறுவர்கள் என்று நோக்கும் போது 18 வயதிற்கு உட்பட்ட ஒவ்வொருவருக்கும் சிறுவர்களாகக் கணிக்கப்படுகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிக் கூறப்படுகின்றது. அவற்றை ஒவ்வொரு சிறாருக்கும் வழங்குவதில் முனைப்பாக இருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. சிறுவர்களின் உளவிருத்தித் தேவைகளாக உணவு, உடை, இருப்பிடம், ஆதரவு, அன்பு, கற்றலுக்கான வாய்ப்புக்களைக் குறிப்பிடலாம். இத்தேவைகள் செவ்வனே பூர்த்தியாக்கப்படும் போது தான் அவர்கள் தமது எதிர்காலத்தை நோக்கிச் சுபீட்சமான வாழ்வு மலர முடியும்.

போர், இடப்பெயர்வு, இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றால் சிறுவர்களின் நிலையான சூழல் சிதறடிக்கப்படுகின்றது. நாளுக்கு நாள் சூழல் மாறும் போது அச்சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்ற வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றான் சிறுவன். இதனால் அவனது எதிர்கால நிகழ்வுகள் நிர்ணயிக்க முடியாதவைகளாக உள்ளன. இதனால் அவர்களது வாழ்வு கேள்விக் குறியாகும் நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

தற்போதைய காலகட்டத்திலே சிறுவர் நல்வாழ்விற்காக யாழ் மாவட்டத்தில் பணியாற்றும் யுனிசெவ், சிறுவர் பாதுகாப்பு அரங்க செயற்பாட்டு மையம், மனித உரிமைகள் ஆணைக்குழு, குடும்ப மேம்பாட்டு மையம், முன்பள்ளி, பால் நிலை அபிவிருத்திக்கான நிறுவனம் போன்றவை செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிறுவனங்கள் சிறுவர்களுக்காகப் பல சேவைகளை வழங்கி வருகின்றன. உடல் உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட சிறார்களைப் பாதுகாத்தும் வருகின்றன.

எதிர்கால சமுதாயத்தின் தூண்களாக விளங்கும் இன்றைய சிறுவர்கள் தமது வாழ்நாளை மகிழ்ச்சியாகக் கழிக்க வேண்டியது முக்கியதாகும். அவர்களுக்குப் போதிய சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். இதனால் சிறுவர்களின் பாதிப்புக்கள் ஓரளவு குறைந்து உடல் உள சமூக ஆரோக்கியம் பெற்று, எதிர் காலம் பாதிக்காத வகையில் சுபீட்சமான வாழ்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சி.விஷாகனன்.

தரம்: 6C



## குரல் கொடுப்போம்

உலகில் தோன்றும் ஒவ்வொரு குழந்தையிலும் மனித குலத்தின் ஆசைளும் புது வடிவம் பெறுகின்றது. சிறுவர் கள் எதிர்காலத்தின் சுமைதாங்கிகள் இதனை உலக நாடுகள் அனைத்தும் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தினைத் தழுவிய போது ஏற்றுக்கொண்டன. பிள்ளைகள் தொடர்பாக உலக உச்சி மாநாட்டின் இலக்குக்ளை எய்துவதென்று ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் உறுதியளித்தனர். இந்த கட்டுப் பாடுகளை அரசுகள் மட்டுமல்லாமல் நாம் அனைவருமே நிறைவேற்றுதல் வேண்டும். ஆயினும் இந்த பத்தாயிரமாம் ஆண் டிலே சிறுவர் உரிமை சமவாயத்திலே சொல்லப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாத்து எல்லாப் பிள்ளைகளின் தேவைகளையும் நிறை வேற்றுவதாயின் உலகினர் பலவற்றை சாதித்தல் அவசியமாகும்.

எமது தீர்மானங்களுக்கு ஆணிவேராய் அமையும் கூற்று வருமாறு:

சிறுவர்களின் மிகச் சிறந்த நலன்களை மேலும் செம்மைப்படுத்துவதற்குரிய செம்மையான நடவடிக்கைகள் எம்

சொந்த வாழ்க்கையில் சொந்த இதயத்திலும் ஊற்றெடுத்தல் வேண்டும். பிள்ளைகளின் கருத்துக்களை கேட்டறிந்து மேற்கொள் ளப்படல் வேண்டும். இளைஞர்களும் யுவதிகளும் தாமாக வந்தே செயற்படல் வேண்டும். எந்தச் சிறுவர்களுக்கும் பாகுபாடு காட் டல் ஆகாது ஏனெனில் ஒவ்வொரு சிறுவர்களும் சுதந்திரமாகப் பிறந்தார்கள கௌரவம், உரிமைகள் ஆகிய விடயத்தில் சிறந் தவர்கள் சிறுவர்கள். மீதான ஒழுங்கு முறைகள் யாவும் முற்றுப் பெறல் வேண்டும். எல்லாப் பிள்ளைகளும் சுகாதாரம் அதிலும் விசேடமான தடுப்பு மருந்தேற்றல், போசாக்கு, உணவு சுத்தமான நீர், தகுந்த கழிவு நீக்கம், செம்மையான வீடமைப்பு பாதுகாப்பானது.

போரின் கொடுமைகளால் சிறுவர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். கடந்த ஒரு தசாப்த காலத்தில் ஒன்றைரை இலட்சம் சிறுவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். போரின் கொடுமையால் 1கோடியே 20 லட்சம் பேரில் பெற்றோர்கள் வீடுகளை இழந்துள்ளனர். எண்ணுக்கற்ற பலர் போரின் மிருகத் தனமான விளைவுகளால் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டிருக் கின்றனர். சிறுவர்களுக்கு கல்வி முக்கியமானதொன்றாகும். அனைவருக்கும் ஆரம்பக்கல்வி இலகுவாக கிடைக்க வேண்டும், வெவ்வேறு வகையான இடைநிலைக் கல்வியை உள்ளாக்கி வளர்க்க வேண்டும், எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வி, தொழில் சார் நடவடிக்கைகள் கிடைக்க வேண்டும். பிள்ளையின் ஆளுமை திறமைகள் உடல் உள ஆற்றல்கள் முழுமையாக பரிணமிக்கச் செய்தல், சுதந்திர சமூகத்தில் பொறுப்புணர்ச்சியுடன் வாழ்வதற்கு பிள்ளையை தயார் செய்தல்.

சிறுவர்களுக் கேற்ற உரிமைகளாவன சமூக கலாச்சார நோக்கங்களுக்கு அல்லது இலக்குகளுக்கு உதவக் கூடிய தகவல்களை பெற்றுக் கொள்ளல். பெற்றோர் தொழில் புரியும் பட் சத்தில் பிள்ளைகள் பராமரிப்பு மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல். ஓய்வு இளைப்பாறல் மற்றும் கலை கலாசார நடவடிக் கைகளில் பங்கு கொள்ளும் சுதந்திரம். தமது நல்வாழ்வு, சேமநலன் சார்ந்த விடயங்களில், தமது கருத்தை வெளியிடும் உரிமையும் கவனத்தில் கொள்ளல். பெற்றோரின் முறையான வழிநடத்தலுக்கும். சுயசிந்தனை, மனச்சான்று சமயம்

ஆகியவற்றை கடைப்பிடிக்கும் உரிமை மற்றவர்களை சிந்திக்கவும் சங்கங்களை அமைப்பதற்கான உரிமை.

சிறுவர்கள் பாதிக்கப்படும் உரிமைகள் பிள்ளையின் கருத்தை கேட்காது இருத்தல். பிள்ளைகளின் நன்மைக்கென பங்களிக்காது இருத்தல். சிறுவர் நலனை காத்து நியாயபுத்தி, நம்பிக்கைகள் யாவும் மங்கிவரும் காலத்திலே சிறுவர்களுக்காக குரல் கொடுப்போம்.

ப.வைசிகன்
9E



## சிறுவர்கள் எவ்வாறு இன்புற்றிருக்கிறார்கள்.

சிறுவர் பராயம் என்பது இன்புற்றிருக்கும் பருவம் எனவும் கூறப்படுகிறது. ஏனெனில் சிறுவர்களுக்கு துன்பம் வருவதில்லை, வந்தாலும் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள். அதை விட அவர்களிடையே போட்டி, பொறாமை, வஞ்சகம் என்பன அறவே கிடையாது. இப்போது சிறுவர் இன்புற்றிருக்கும் வழிகளை பார்போம்.

சிறுவர்களின் இன்பம் எங்கே தொடங்குகிறது என்றால் குடும்பம் என்றே கூறப்படும். தாய், தந்தையரின் அரவணைப்பில் சிறுவர் பெறும் மகிழ்ச்சியே தனி. அது மட்டுமல்ல சகோதரர்களின் அன்பும், விளையாட்டுத்தனமும் சிறுவர்களை மகிழ்ச்சியின் உச்சி வரை இட்டுச் செல்லும் அத்துடன் பெற்றோர்களின் தாய், தந்தை, சகோதரர் மூலமும் இன்பத்தை அனுபவிக்கின்றனர்.

சிறுவர்களின் வாழ்வின் முக்கிய அங்கம் நண்பர்கள் ஆவார். அவர்களுடன் சிறுவர்கள் விளையாடும் போது நேரம் போவதே தெரியாது. அவர்களுடன் அளவளாவுதல் என்பது சிறுவர்களுக்கு மிகப் பிடித்த விடயமாகும். அத்துடன் நண்பர்கள் கொண்டு வரும் உணவுப் பண்டங்களை பகிர்ந்து உண்பதிலும் அதிக இன்பம் உண்டு.

அடுத்து பெற்ற அன்னை போன்றே இயற்கை அன்னையாலும் சிறுவர்களுக்கு மகிழ்ச்சி கிட்டுகின்றது. சிறுவர் களுக்கு மட்டுமல்ல நாம் கூட ஏன் வயது முதிர்ந்து இருப்பவர் கூட இயற்கைக் காட்சிகளை ரசிப்பதில் ஆர்வம் காட்டுவர்/ மழை பெய்வதைப் பார்ப்பதிலும் அதில் கப்பல் செய்து விடுவதிலும் காலை, மாலைக் காட்சிகளை பார்ப்பதிலும், அதிக இன்பத்தை சிறுவர்கள் அனுபவிக்கின்றனர்.

பாடசாலை என்பது சிறுவர்களின் பிடித்த இடமாகவே திகழ்கிறது. அங்கு கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவதிலும் பார்க்க நடைபெறும் தேர்வுகளில் சிறந்த புள்ளிகளைப் பெறுவதில் இருக் கும் சந்தோசமே தனி அத்துடன் நற்பண்புக்கு ஆசிரியர்கள் தங்கள் பிள்ளைகளைப் போல சிறுவர்களை அரவணைக்கும் போதும், போட்டிகள் வைத்து பரிசில்கள் வழங்கும் போது சிறுவர் கள் பெறும் இன்பம் அளப்பரியது. சொல்லிலே கூற முடியாது. இ தை விட தற்காலத்தில் சில புதுமையானவைகளும் சிறுவர்களுக் கு மகிழ்ச்சி தரும். ஆம்! அவை மனிதனின் நவீன கண்டுபிடிப் பாகிய கணனிகளாகும். கணனிகளோடு மல்லுப் பிடித்து அவைகளை விளையாட்டுக்களில் ஜெயிப்பது சிறுவர்கள் பெரிதும் ஆர்வம் காட்டுவர்.

பாடசாலையில் விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழா சிறுவர் தினக் கொண்டாட்டங்களின் போது அதிகளவு இன்பத்தை அனுபவிக்கின்றனர். வெற்றியீட்டியோருக்கு பரிசு கிடைக்கும் என சிறுவர் மனம் எண்ணும் போது அதிக இன்பம் கிடைக்கிறது.

ஆகவே சிறுவர்கள் இன்புற பல வழிகள் உள்ளன. அவற்றில் சரியானதை தெரிந்து எடுப்பது எம் கடமையாகும்.

**மி. மிதுலன்**
9E



# சிறுவர்களும் காக்கை வலிப்பு நோயும்

இன்றைய சிறுவர்கள் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள். இதில் நோய் வாய்ப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. ஆரோக்கியமான சிறுவனின் எதிர் காலமே சுபீட்சம் நிறைந்ததாக இருக்கும்.

காக்கை வலிப்பு நோய் சிறுபிராயத்தில் அல்லது இளம் பிராயத்தில் ஏற்படுகின்றது உலக சுகாதார மதிப்பீட்டின் படி இப்போது உலகம் முழுவதும் 50 மில்லியன் பேர் காக்கை வலிப்பு நோய்க்கு உட்பட்டுள்ளனர். இந்நோய் ஏற்படுவதற்குக் காரணம் மின்னியல் இயக்கப்பாடு குறுகியு நேரத்திற்கு அதி வேகமாக செயற்படுவதாகும். இந் நோய் அறிகுறிகள் காய்ச்சல் வரும் போது அல்லது தலையில் காயம் ஏற்படும் போது நிகழலாம். இவ்வாறான விசேட சந்தர்ப்பங்களின் போது இரு முறைக்குமேல் இந் நோய் அறிகுறிகள் ஏற்படின் அதனை காக்கை வலிப்பு என்பர்.

காக்கைவலிப்பு நோய்க்கு இலக்கானோர் பாடசாலை செல்லும் சிறு வயதினரே இதனால் இந்நோயை இனங்கண்டு அவர்களை வழி நடத்தக் கூடிய ஆற்றல்கள் ஆசிரியாருக்கே இருக்க வேண்டும். இவ்வாறான பிள்ளைகளை உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்கு அனுப்பி வைப்பது ஆசிரியரின் அதி உயர் கடமையாகும்.

காக்கை வலிப்பு ஏற்படும் அறிகுறிகளை நாம் அவதானிப்போமானால் அதனை மிக விரைவில் அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

- வாயிலிருந்து நுரை கக்கப்படும்
- வாய் இறுக்கி மூடப்படும்
- கண் மேலே செல்லும்
- நாக்கு, உதடு கடிபடும்
- கை, கால் விறைப்படையும். பின், முன்னும் பின்னும் வேகமாக அசையும்.
- மயக்கமடைந்து கீழே விழுவர்.

பெரும் பாலும் இந்நோய்க்கு இலக்காவது சிறுவர்கள் என்றபடியால் அவர்கள் பாடசாலை நேரங்களில் இவ்வறிகுறி ஏற்படலாம். எனவே சிறுவர்களிடையே இந்த வழமைக்கு மாறான செயற்பாடுகளை இனங்கண்டு அவர்களது ஆளுமைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் ஆசிரியர்கள் தொழிற்படுதல் அவசியமாகும். சில இடங்களில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் தவறுதலாக சிந்திப்பதுமுண்டு.

இந்நோய் உள்ள மாணவர்களை ஏளனம் செய்வதால் வெட்கப்பட்டு மாணவன் பாடசாலைக்கு செல்ல தயக்கமடைகின்றான். இந்நோய் தொற்று நோய் எனக் கருதி மாணவனை பாடசாலையிருந்து நிறுத்த முகாமைத்துவம் முடிவெடுத்தல். நீண்ட காலத்துக்கு மருந்தினைப் பாவிக்க வேண்டுமென்பதால் மாணவனைப் பாடசாலைக்குச் செல்ல விடாது தடுத்தல்.

சிறுவர்கள் இந்நோய்க்கு உட்பட்டுள்ளார்கள் என சரியாக ஆசிரியருக்குத் தெரியாத சமயத்தில் ஆசிரியரினால் தண்டிக்கப் படுகின்றார்கள். பெற்றோர்கள் அளவுக்கதிகமாக இப்பிள்ளையை பாதுகாக்க முனைவதினால் அவர்கள் சமூகத்திலிருந்து பிரிக்கப் படுவதுடன் அவர்களது ஆளுமை வளர்ச்சியும் குன்றுகிறுது. எனவே ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், சமூகத்தினர் இந்நோயுள்ள சிறுவனை புறக்கணிக்காது நடத்தல் வேண்டும்.

திருமதி சா. அருந்தவபாலன்
பொறுப்பாசிரியர்

## சிறுவர் உரிமை

சிறுவர் நலத்தைக் காத்திடுவோம் - நாம்
சிறப்புடன் வாழ்ந்திடுவோம்.
சிறுவர் உரிமையை வளர்த்திடுவோம் - நல்ல
சிந்தனையுடன் செயற்படுவோம்.

சின்னஞ் சிறிய சிறுவர் நாங்கள்
சிங்காரமாய் வாழ்ந்திடுவோம்
அன்பு கொண்ட சிறுவர் நாம்
அறிவுக்கண்ணை திறந்திடுவோம்.

உண்மை பேசும் சிறுவர் நாம்
உற்சாகத்துடன் செயற்படுவோம்
உரிமை கொண்ட சிறுவர் நாம் - பிறர்
உள்ளம் குளிர வாழ்ந்திடுவோம்

பள்ளி செல்லும் சிறுவர் நாம் - நற்
பண்புகளை வளர்ந்திடுவோம்
சிறப்பான சிறுவர் நாம் - நல்ல
சிந்தனைக்களை வளர்திதிடுவோம்.

திறமை கொண்ட சிறுவர் நாம்
திண்மையாய் வாழ்ந்திடுவோம்
சிறுவர் உரிமை மீறலை நாம்
இன்றிலிருந்து தடுத்திடுவோம்
இன்றிலிருந்து தடுத்திடுவோம்.

பா.கீர்த்தனன்.
9E



## சிறுவர்கள் இல்லாத வீடு எப்படி இருக்கும்

பொதுவாக சிறுவர்கள் என்றால் 18 குறைந்த இருபாலர்கள் ஆவார். இவர்களை அநேகமாக எல்லா வீடுகளிலும் காணலாம். ஆனால் சிறுவர்கள் அற்ற வீட்டின் நிலை எப்படியிருக்கும் என நோக்குவோம்.

முதலில் சிறுவர்கள் இருப்பதால் கிடைக்கும் நன்மை எவை என பார்ப்போம். சிறுவர்களின் கள்ளங்கபடமற்ற புன்சிரிப்புக்கள் அவ்வீட்டின் மகிழ்ச்சிக்கு ஓர் முக்கிய காரணம். அவர்கள் வீட்டில் உள்ளவர்க்கு உதவுவதில் பெரிதும் ஆர்வம் காட்டுவர். இதனால் வேலைப்பளு சிறிது குறைவதுடன் சிறுவர்களும்

சிறப்பாக செயலாற்ற கற்றுக்கொள்வர். சிறுவர்கள் தமக்கே உரியதான சிறு குறும்புகளைக் கொண்டு அனைவரையும் மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்வர்.

ஆனால் இவர்களின் செயல்கள் சில வேளைகளில் மனம் வருந்தும்படியான செயல்களில் ஈடுபடுவர் அவர்கள் செய் யும் குறும்புகளால் முதியவர்களின் உடல், உள நலம் பாதிப் புறலாம். அதுமட்டுமல்லாது சில பொருட்கள் உடைவதற்கும் தொலைவதற்கும் இவர்களின் குறும்புகள் காரணமாகும்.

**என்னதான் இருந்தாலும்**

**"ஈன்றபொழுதில் பெரிது உவக்கும்**

தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்." என்ற வள் ளுவர் வாக்குக்கிணங்க தன் மகனை பெற்றபொழுதில் பெற்ற இன்பத்தை விட அவள் சான்றோன் என கேள்விப்பட்டதும் ஒரு தாய் அடையும் மகிழ்ச்சி பெரிது.

இது இப்படியிருக்க சிறுவர் இன்றிய வீட்டின் நிலை யாது என பார்ப்போம். அவ் வீடு கலகலப்பு அற் று வெறுச்சோடி இருக்கும். அங்கு விருந்தினர், வருகையும் குறைவாக இருக்கும் அன்பு, பரஸ்பரம் என்பன செயற்படுவது குன்றியே காணப்படும். இலகுவில் சண்டை மூழ்வதற்கு வாய்ப் புகள் அதிகமாக காணப்படும்.

ஆகவே எது எப்படி இருந்தாலும் வீட் டில் உள்ள சிறுவர்கள் எனும் அங்கம் காணப்படுவது அவசியமாகும். சிறுவர்களில்லாத வீடுகள் உப்பில்லாத உணவு போன்று இருக்கும். எந்த விதமான சந்தோசமும்கிடையாது. இரசனை இல்லாத வாழ்கையாகவே அமையும்.

எனவே கைக்கெட்டியது வாய்கெட் டவில்லையே என எண்ணாது சிறுவர்களை வாழ வைத்து வாழ் வாங்கு வாழ இச் சமூகம் முற்பட வேண்டும் என்பதே பேரவா.

**மி.துமிலன்.**

**9E**



# குழந்தை

மொட்டு தொட்டிலில் முகிழ்ந்துக் கிடக்கும்
பட்டுக் குழந்தையைப் பாத்துச் சிரிக்கின்றேன்.

செதுக்கி வைத்த சேலைச்சிலைகள்
பதுக்கி வைத்த பஞ்சனைச் சின்னம்

மோக நாடக முடிவுரை சொல்லி
கூட்டுப் பண்ணையின் கொழுந்துக் குளிர்கனி

ஆரடைப் போரின் அழுத்தத்தாலே
ஓடை விட்டே ஒதுங்கிய படகு

இருளின் நிழலில் இருவிழி மூடி
இருவர் நடத்திய இன்ப வழக்கின்
விளக்கஞ் சொல்ல வெடித்த சாட்சி
பிளக்கக் கூடாப் பெண்ணிலாத்துண்டு.

நடித்த நாடக நயங்களைச் சொல்லி
வெடித்து வந்த விளம்பரப் பலகை.

உறவுச் சிறப்பில் உறையுந் தாயின்
பருவச் செழிப்பைப் பங்கிடும் மென்புழு

கொள்ளை இன்பக்கடலில் நகரில்
வெள்ளைக் குருதியில் விளைந்த முல்லை

விந்தைத் தின்றுயிர் விளைந்ததே அதுதான்
விந்தை மாபெரும் விந்தை மண்ணில்
விழுந்ததும் குழந்தை வேதனை பாடி
அழுவதும் முனகி அசைவதும் ஏனோ?

மரணக் கணத்தில் மற்றுமோர் பெயரைக்
குறித்துக் கொள் எனக் கூறத் தானே?

இ. அனோஜன்
12Maths 2011

# உலக விருதுகள்

**1. நோபல் பரிசு**

சுவீடன் நாட்டைக் சேர்ந்த அல்பிரட்நோபல் என்பவர் "டைனமைற்" என்னும் சேர்வையைக் கண்டு அறிந்ததன் மூலம் பெறப்பட்ட பணத்தினூடாக வருடாந்தம். நோபல் மறைந்த தினமான டிசெம்பர் 10இல் வழங்கப்படுகிறது.

1910ம் ஆண்டில் இருந்து ரோயல் சுவீடிஸ் அக்கடமி என்னும் வருடாந்தம் உலக சமாதானம், மருத்துவம், இலக்கியம், இரசாயனவியல், பௌதீகவியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு வழங்கப்படுகிறது.

நோபல் பரிசு தொடர்பாக முக்கியமானவை.

- நோபல் பரிசு முதலில் பெற்றவர் - வில் கெம் ரொண்ட்ரஜன்.
- முதல் தமிழர் - சேர் ஊ.ஏ ராமன்.
- ஆசியாவில் முதலில் பெற்றவர் - ரவீந்திரநாத தாகூர் (இலக்கியம்)
- குறைந்த வயதில் பெற்றவர் - லோரன்ஸ் டிராக்
- முதல் பெண்மணி - மேரிகியூரிஅம்மையார் (பௌதிகவியல்)
- அதிக தடவை பெற்ற நாடு - அமெரிக்கா (உலக சமாதான விருது)

**உ. புக்கர்விருது** – உலகின் இலக்கிய நூல்களுக்கான, இவ்விருது 1968ம் ஆண்டு தொடக்கம், இங்கிலாந்தில் வழங்கப்படுகிறது.

**ங. புலிட்ஸர்விருது** – வருடாந்தம். பத்திரிகைத்துறை, நாடகத் துறை,இலக்கியத்துறை, ஆகிய துறைகளில் சிறந்து. விளங்காதோருக்கு ஐக்கிய அமெரிக்காவால் வழங்கப்பட்டு வருகிறது.

**ச. கலிங்காவிருது** – அறிவியல் விருது.

**ரு. றோயல் விருது** – பெண் அரசியல். தலைவருக்கு வழங்கப்படுவது.

**சு. லைவர் பரிசு / தளோபஸ் 500 விருது** – சுற்றுச் சூழல் துறைக்கு வழங்கப்படுவது.

சி. சுகந்தன்.
தரம் – 10D

# சிறுவர்களே எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகள்

"அரிது அரிது மானிடராகப் பிறந்தல் அரிது"

என்றார் ஒளவையார். அரிய மானிடப் பிறவியை எடுத்த மனிதன் இன்று விஞ்ஞான பாதையில் வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறான். இவ்வாறாக சிறந்த அறிவு மிக்கதான சமுதாயத்தை படைப்பதிலே பெரும்பங்கினை வகிப்பவர்கள் சிறுவர்களே நாளைய தலைவர்கள்.... நாளைய சமுதாயத்தை கட்டியெழுப்பும் தலை சிறந்த மனிதர்கள்...

சிறுவர்கள் சமுதாயத்தின் ஆணிவேர் போன்றவர்கள் மரத்திற்கு எவ்வளவு ஆணிவேர் உறுதியோ அதேபோல் சிறுவர்களே சமுதாயத்திற்கு உறுதி. சிறுவர்களது உள்ளம் "வெண் பஞ்சினை போல" மிகத் தூய்மையானது. எனவே அவர்கள் சிற்பியாயும் அவர்களின் தூய எண்ணம் எதிர்காலத்தினை திறம்பட செதுக்கும் உறுதுணையாகின்றன

"இழுக்கல் உடையுளி ஊன்று கோலற்றே
ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்"

என்பது வள்ளுவன் வாக்கு, ஒழுக்கமுடைய ஆன்றோரின் வார்த்தைகள் ஊன்றுகோல் போல வாழ்கைக்கு பயன் படுகின்றன. சிறுவர்களும் ஆன்றோர்களின் வார்த்தைகளை சிரமேற்கொண்டு ஒழுக முற்படுகின்றனர். எனவே இச் சிறுவர்களால் செதுக்கபடும் எதிர்காலத்தை சிறந்ததொரு சமுதாயத்தினை நாம் கண்டு இன்புறலாம்.

"எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணிற் பிறக்கையிலே
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே".

என்கிறார் கவிஞரொருவர். ஒரு பிள்ளையின் முன்னேற்றத்தில் பெற்றோரின் பங்களிப்பு எவ்வளவு முக்கியமானது என்பது இதிலிருந்து புலனாகின்றது. பெரியவர்கள் சிறுவர்களிற்கு முன்மாதிரியாக நடக்க வேண்டும். பெரியவர்கள் தாம் தவறு செய்து கொண்டு சிறியவரை திருத்துவது முறைகேடான செயலாகும். ஒரு பயிரை நாட்டி அதற்கு பசளையிட்டு பராமரித்தால் தான் அதன் மூலம் தக்க பலனை

பெற முடியும். அது போலவே பெரியோர் அன்பையும் அறிவையும் ஊட்டி வளர்தாலே அவர்களால் செதுக்கும் சிற்பம் சிற்பமாக அமையும்.

இன்றைய சூழ்நிலையிலே சிறுவர் துஸ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்வது கண்கூடு. பாடசாலை சென்று கல்வி கற்க வேண்டிய வயதிலே பெற்றோரால் சிறுவர்கள் வேலைக்கு அனுப்படுகின்றனர். சிறுவர்களை கொண்டு கடுமையாக வேலை வாங்குகின்றனர். இதனால் சிறுவர்கள் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பாரிய பாதிப்பிற்குள்ளாகின்றனர். இந்நிலையில் அவர்களால் உருவாக்கப்படும் சமுதாயம் சிறப்பாக அமையும் என்பது சந்தேகமாகும்.

சிறுவர்களுக்கு கல்வி புகட்டுவதில் பெற்றோரின் அக்கறையின்மை காரணமாக எத்தனையோ சிறுவரின் எதிர்காலம் "குடத்துள் விளக்குப் போல" முடக்கப்படுகின்றது. இன்றைய காலகட்டப் பகுதியில் சிறுவர்கள் பெருமளவில் போரில் ஈடுபடுத்தப்படுவதனை நாம் காணலாம். இந்நிலை மாறி சிறுவர்களின் உரிமைகள் பேணப்பட்டால் தான் சிறுவர்களால் எதிர்காலத்தை சிறப்பாக செதுக்க முடியும்.

சிறுவர்களால் சாதிக்க முடியாதது எதுவுமேயில்லை என்பதற்கு பாக்கு நீரினையை கடந்த பதின்மூன்று வயது சிறுவனும், எட்டு வயதில் பட்டதாரியாகிய அமெரிக்க சிறுமியுமே சிறந்த எடுத்துக்காட்டாகும். சிறுவர்களின் மனதில் வஞ்சகம் பெறாமை போன்ற தீய எண்ணம் எள்ளளவும் இல்லை. இதனால் இவர்களால் உருவாக்கபடும் எதிர்காலம் அமைதி நிறைந்ததாக "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற அடிப்படையில் சாதி, இன, நிற மொழி வேறுபாடுகளை கடந்ததாக அமையும்.

சிறுவர்களால் உருவாக்கப்படும் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டுமானால் சிறுவர் உரிமை மீறபடுவது தடை செய்யபட வேண்டும். சிறுவர் உரிமை பாதுகாக்க வேண்டும். சிறுவர்களிற்கு கட்டாயகல்வி வழங்க வேண்டும். சிறுவர் உளரீதியாக பாதிக்கபடா வண்ணம் அவர்களை பேண வேண்டும். "சிறுதுளி பெரு வெள்ளம்" என்று சொல்வார்கள். ஒரு சிறுவனை நாம் இழக்க நேரிடின் சமூகத்தின் ஆணிவேரே இழந்த மாதிரி இருக்கும்.

இன்று சிறுவரிற்கு வழங்கப்படும் அறிவுபூர்வமான விடயங்கள் அவர்களது எதிர்காலத்திற்கு வழி காட்டியாக அமையும். நல் லறிவுடன் வளர்க்கப்படும் சிறுவர்கள் எதிர்கால சமூகத்தில் வைத் தியராய், பொறியியலாளராக, விஞ்ஞானியாக, ஆசிரியராக பலதுறை மேதைகளாக பிரகாசிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இன்று உலகலாவிய ரீதியில் நம் நாட்டு சிறுவர்கள் அகதிகள் என்ற அந்தஸ்தில் உள்ளதால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளதென்று சிறுவர் துஸ்பிரயோகம் தடுக்க ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் மேற்கொள்ளும் நடவடிக்கை நம் மனதில் சிறுவரின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஊட்டியுள்ளன.

ஒரு சிலையை நேர்த்தியாயும் அழகாக செதுக்க வேண் டின் சிற்பி திறமையுறம் தன்னம்பிக்கையும் கொண்டவனாயும் இருப்பதுடன் உளியின் உதவியும் வேண்டும். இது போலவே எதிர் காலம் சிறப்பாய் அமைய வேண்டுமாயின் சிற்பியை போல் சிறுவர்களும் தன்னம்பிக்கையும் திறமையும் உடையவராக இருப் பதுடன் உளிபோன்ற பெரியோரின் அறிவுரையும் உறுதுணையாக இருக்க வேண்டும். அவ்வாறாயின் சிறுவர்களே எதிர்காலத்தினை உருவாக்கும் சிறந்த சிற்பிகள் என்பது தெட்டதெளிவாகும்.

வி.கஜானந்தா
10F

# சிறுவர் செயற்பாட்டுக் கழகம்

2000ம் ஆண்டு முன்னாள் அதிபர் திருவாளர் சிறிக் குமரன் அவர்களை காப்பாளராகவும், திருமதி. கா.அருந்தவபாவன் அவர்களை பொறுப்பாசிரியராகவும் கொண்டு எமது கல்லூரியிலே மழலை அடி எடுத்து வைத்தது சிறுவர் செயற்பாட்டுக் கழகம்.

எமது கல்லூரியிலே பல தரப்பட்ட கழகங்கள், மன்றங்கள் பரிணமித்துக் கொண்டிருப்பினும் தரம் 6 இல் எம் கல் லூரி எம் புது மாணவர் சமுதாயம் தமது ஆளுமை விருத்தியை வளர்த்தெடுப்பதற்காக சுயமாகவே சிறுவர் கழகத்தை தேர்ந் தெடுக்கின்றனர். ஏனெனில் அவர்களின் சிறுபிள்ளைத்தனமான

மழலைக் குறும்புகளும் இன்னும் ஊசலாடும் வயதினிலே தமது தேவைக்கு ஏற்ற களமாக சிறுவர் கழகம் எமது கல்லூரியிலே சுடர் விட்டு ஒளிர்கிறது என்பதனாலாகும்.

எமது கழகத்தின் பிரதான குறிக்கோளாவன மாணவப் பருவத்தினராகிய சிறுவர்களுக்கு அவர்தம் உரிமைகளையும், கடமைகளையும் வகைப்படுத்தி தெரியப்படுத்துவதுடன் அவர்களின் உரிமைகளை பாரபட்சமின்றி அனுபவிப்பதன் ஊடாக தமது கடமைகளையும் சிறப்பாக மேற்கொள்ள நல்லதொரு வழிகாட்டியாக எமது கழகமும், கழக அங்கத்தவர்களும் விளங்குகின்றனர்.

சிறுவர் சமுதாயம் மோசமான சீரழிவுகளையும் பின்னடைவுகளையும் சந்தித்து வரும் இச்சூழ்நிலையில் எமது கல்லூரி மாணவர் சமுதாயம் ஏனைய சிறுவர் சமுதாயத்தவர்க்கு ஓர் முன்னுதாரண புருஷர்களாக திகழ வேண்டும் என்பதே எமது கல்லூரியின் சிறுவர் செயற்பாட்டுக் கழகத்தின் தூர நோக்கான சிந்தனையாகும்.

அந்த வகையில் எமது கல்லூரியில் அடியெடுத்து வைத்த சிறுவர் கழகம் இன்று குறுகிய காலப்பகுதியில் அதிகளவிலான அங்கத்தவர்களையும் ஆளுமைமிக்க கட்டமைப் பாகவும் துரித வளர்ச்சி பெற்றமைக்கு எமது கல்லூரி அதிபர் களினதும், பொறுப்பாசியர்களினதும் செம்மையான வழிப்படுத் தலும், நெறிப்படுத்தலும் என்றால் மிகையாகாது. ஆரம்ப காலத்தில் எமது கழகம் மிகக் குறைந்த அங்கத்தவர்களையே கொண்டிருப்பினும் காலமாற்றத்திற்கு ஏற்ப அங்கத்தவர் அதிகரிப்பும், அதனால் எமது கழகத்தின் செயற்பாடுகள் விரிவாக்கப்பட்டமையும் எமது கழகமும் ஓர் ஸ்திரமான சிறுவர் கட்டமைப்பாக மாற வழிகோலியது.

ஏனைய கழகங்களுடன் ஒப்பிடம் போது எமது கழகத்தின் சந்தாப்பணமானது மிகக்குறைந்த தொகையாக இருப்பது அங்கத்துவ அதிகரிப்புக்கு ஒரு காரணமாக கூறலாம். ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து இன்று வரை கழக சந்தாப்பணம் ரூ10/= மட்டுமே ஒவ்வொரு அங்கத்தவர்களிடமிருந் தும் அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எமது கழகத்தின் நிர்வாக கட்டமைப்பு மிகவும்

வலிமையானதாக காணப்படுகின்றது. எமது பொறுப்பாசிரியை திருமதி சா. அருந்தவபாலன் ஆசிரியை அவர்கள் மாணவர் களுடன் அன்பாக அணுகும் முறையும், தேவையானவிடத்து அளவான கண்டிப்பும் எமது கழகத்தின் வெற்றிகளுக்கு வலு சேர்த்து வருகின்றது. அத்தோடு எமது பொறுப்பாசிரியரால் பொதுச்சபை கூட்டத்தின் போது புதிய ஆண்டிற்கான நிர்வாகசபை தெரிவு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பொதுச்சபை அங்கத்தவர்கள் தமது வாக்களிக்கும் உரிமையை பயன்படுத்தி தலைவர், செயலாளர், பொருளாளர் முதலான நிர்வாக உறுப்பினர்களை தெரிவு செய்கின்றனர். ஒரு நாட்டின் மக்கள் தமது தேவைகளுக்கு தகுந்தாற் போல மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வது போல எமது கழக பொதுச்சபை அங்கத்தவர் களும், உயர்தர மாணவர்களில் இருந்து தகுதியான உறுப்பினர் களை தாமே தெரிந்து பொறுப்பாசிரியரின் பூரண சம்மதத்துடன் நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டு வருகின்றது.

எனவே ஜனநாயக வழிமுறையிலான ஓர் நிர்வாகத் தெரிவு முறையே எமது கழக நிர்வாக சபையின் செயற்பாடுகளுக்கு உந்துதலாக அமைகின்றது. எமது கழகத்தினரால் சர்வதேச சிறுவர் தினம் ஒக்டோபர் 1இல் எமது கல்லூரியில் மிகச் சிறப்பாக கொண்டாடி வருகிறது. சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்லூரி மாணவர்களிடையே 6 தொடக்கம் 13 வரைக்கும் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பல்வேறு பட்ட போட்டிகள் நடத்தப்பட்டு பெறுமதியான பல பரிசில்களும், சான்றிதல்களும் வழங்கப்பட்டு வருகின்றமை. எமது கல்லூரி மாணவர்களுக்கு எமது கழகத்தின் மீது அதீத நம்பிக்கைக்கு அடிப்படையாகும்.

சிறுவர் தினக்கட்டுரை, பேச்சு, கவிதை, சித்திரம், சுவரொட்டி, நாடகம் போன்ற போட்டிகளுடன், கழக அங்கத்தவர் களுக்கு விசேடமாக மனனப்போட்டியும், நாடக எழுத்துருவாக்கல் போட்டியும் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் வெற்றி பெறும் முதல் 5 மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டு வருகிறது.

இம்முறையும் வழமை போன்று சிறுவர் தினப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றியாளர்கள் கௌரவிக்கப்பட

இருக்கின்றனர். எனினும் கடந்த வருடங்களைப் போல் அன்றி இம்முறை நாடகப் போட்டிக்கு பதிவாகும் மாணவர்களின் சுய மதிப்பீட்டை ஒப்பிடும் நோக்கில் நாடக எழுத்துருவாக்கல் போட்டி நடத்தப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இவற்றினை விட சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கு பொது அறிவு போட்டியினையும் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான முறையில் எமது கல்லூரி மாணவர்களின் ஆளுமையை வெளிப்படுத்தும் வகையில் பல தரப்பட்ட போட்டிகளை நடாத்தும் ஒரே கழகம் எமது கழகம் என அனைவராலும் தொடர்ந்து பாராட்டப்பட்டு வருகின்றமை எதிர்கால எமது செயற்பாடுகளை மென்மேலும் ஊக்குவிக்கும் என்பதில் சிறிதளவு கூட ஐயமில்லை

எமது கழக அங்கத்தவர்களுக்கு எமது கழக சின்னம் பொறித்த அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் ஏனைய மாணவர்களிடமிருந்து எமது கழக அங்கத்தவர் களை இலகுவாக அடையாளப்படுத்த முடியும். எமது கழகத்தின் ஏனைய செயற்பாடுகளாவன. எமது கல்லூரியில் வறுமை நிலையில் வாழும் மாணவர்களை இனம் கண்டு அவர்களுக்கு உதவிப்பணக் கொடுப்பனவுகளை எமது கழகம் வழங்கி வருகின்றது. இதைவிட வறிய மாணவர்களுக்கு சப்பாத்துக்களை அன்பளிப்பாக வழங்கி வருகின்றோம்.

இதனைவிட எமது கழக உறுப்பினர் களில் கா.பொ.த உயர் தரத்தில் சிறந்த பெறுபேற்றை பெறும் வறிய மாணவர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவாக ரூபா பத் தாயிரம் வழங்கப்பட்டு வருகின்றது. சிறுவர் கழக அரங்கக் குழுவினர் சமூக நாடக அரங்குகளில் எமது கல்லூரி சார்பில் கலந்து பாராட்டுக்களையும், பல பரிசில்களையும் பெற்று வருகின்றனர்.

எமது கல்லூரி மாணவர்களுக்கும், பின்தங்கிய கிராமியப் பாடசாலை மாணவர்களுக்கும் தேவையான சந்தர்ப்பங்களில் அப்பியாசக் கொப்பிகளை அன்பளிப்பாக வழங் கி வருகின்றோம். இச் செயற்பாட்டுக்கு யுனிசெப் அமைப்பு எமக் கு உதவிகளையும் வழங்கி வருகின்றது சிறுவர் பாதுகாப்பு நிதியம் எமது கல்லூரி மாணவர்களுக்கு எமது கழகத்தினூடாக

பல உதவிகளை வழங்கி வருகின்றன.

எமது கழகத்தின் மூத்த உறுப்பினர்கள் சர்வதேசங்களிலிருந்தும் எமது கழகத்திற்கான உதவிகளை செய்ய தயாராக உள்ளனர். அந்த வகையில் இம்முறை சிறுவர் தின விழாவிற்கான பரிசில்களுக்கு அவுஸ்ரேலியாவிலிருக்கும் எமது கழக அபிமானி செல்வன் தனஞ்செயன் அவர்கள் தாமே பொறுப்பேற்றுள்ளார். அவர்களுக்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது கழகப் போட்டிகளுக்கு நடுவர்களாக எமது கல்லூரி ஆசிரியர்களும், பிற கல்லூரி ஆசிரியர்களும் இணைந்த கடமையாற்றுவது எமது கழக போட்டி முடிவுகளில் அனைவருக்கும் நம்பிக்கையளித்து வருகின்றது. அந்தவகையில் எமது கழக வளர்ச்சிக்கு திருவாளர் பொ. ஞானதேசிகன் ஆசிரியர் அவர்களின் பங்கு அளப்பரியது. எமது கழக ஆலோசகர்களில் முதன்மையானவராக விளங்கும் திருவாளர் பொ. ஞானதேசிகன் அவர்கள் எமது கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது வழங்கிய கழக குறிப்பேடு இன்றும் எம்மால் பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எமது கழக உறுப்பினர்கள் 2007ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற தேசிய சிறுவர் தின விழாவில் கலந்து சிறப்பித்திருந்தனர். அங்கு நடாத்தப்பட்ட போட்டிகள் பலவற்றிலும் எமது கல்லூரி சிறுவர்கள் பாராட்டுக்களைப் பெற்றனர்.

அதுமட்டுமன்றி இணுவில் அரங்கக் குழுவினரால் நடாத்தப்பட்ட சிறுவர் அரங்க விழாவில் எமது உறுப்பினர்கள் அழைக்கப்பட்டு வருகின்றனர். எமது கழகக் கூட்டம் வாரம் ஒருமுறை என்ற ரீதியில் பிரதி வியாழக்கிழமை தோறும் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. இக் கூட்டத்தில் வாராந்த செயற்பாட்டு அறிக்கை தொடர்பிலான முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

எமது கழகத்தினரால் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சிரமதான நிகழ்வொன்றினை கல்லூரியினுள் சிறப்பாக நடாத்தி முடித்துள்ளோம். இச் செயற்பாடு தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவுள்ளது.

எமது கழகம் யாப்பு முறையின் அடிப்படையிலே இயங்கிக்

கொண்டுள்ளது. கழக யாப்பு 2009/10ஆம் ஆண்டிற்கான நிர்வாக சபையினரால் திருத்தியமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எமது கழக நிதி விடயங்கள் வங்கிக் கணக்கிலேயே ஆரம்பம் முதல் பேணப்பட்டு வருகின்றது.

இவற்றுடன் சிறுவர் தின கொடி வாரத்தினை எமது கல்லூரியிலே எமது கழகம் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது. இச் செயற்பாடு மாணவர் மத்தியில் பெரும் வரவேற்பினை பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

எமது கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் முகமாக "கனிவு" என்னும் மலரினையும் எமது கழக உறுப்பினர்களால் சிறுவர் இசை அல்பம் ஒன்று வெளியிடும் பணி மும்முரமாக நடைபெற்று வருகின்றது. இதனுடன் எமது கழக அரங்கப்பிரிவினர் நாடகங்களை காட்சிப்படுத்தி அதனை இறுவட்டாக்கும் முயற்சிகளிலும் இணைந்துள்ளமை எமது கழக பல்வேறு பரிமாணங்களுக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இந்த வகையில் எமது செயற்பாடுகளுக்கு கிடைத்த பரிசாக, வெற்றியாக வெளியிடுவது எமது கழகத்தின் முக்கிய ஆவணப்பதிவாகும். இவற்றுடன் குறும்பட இறுவெட்டுக்களினையும் எமது கழகம் வெளியிட இருப்பது குறிப்பிடத்தக்கது.

எமது கல்லூரியிலே பரிணமிக்கும் கழகங்கள், மன்றங்களுள் ஆக்கபூர்வ செயற்பாடுகளில் தொடர்ச்சி தன் மையாக செயற்படும் கழகங்களில் சிறுவர் செயற்பாட்டுக் கழகமும் ஒன்றாகும். அந்த வகையில் எமது கழகம் சார்பில் கல்லூரி பரிசுத்தினத்தில் ஒருவர் சிறந்த செயற்பாட்டாளராக கௌரவிக்கப்படுகின்றமையிலிருந்து எமது கழகத்தின் குறுகிய கால வளர்ச்சியினை அறியலாம்.சிறுவர் செயற்பாட்டுக்கழகத்தின் சிறப்பான செயற்பாடுகள் மேலும் விரிவாக்கப்பட்டு கல்லூரிக்கும் ,சமூகத்திற்கும் உறுதுணையாய் என்றும் மிளிர எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க வேண்டுகின்றோம்.

**M. ராம்ஜி**
**உபசெயலாளர்**



# குழந்தைகளுக்கு வேண்டாம் செல்போன்

செல்போன்களில் இருந்து வெளியாகும் கதிர்வீச்சு, பாதிப்புக்களை உண்டாக்கும் என்பதால் 8 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் இவற்றை பயன்படுத்துவதை தவிர்க்கும் படி பிரிட்டன் மருத்துவ நிபுணர்கள் எச்சரித்து உள்ளனர். பெரியவர்களும் தகுந்த பாதுகாப்புடன் இவற்றை பயன்படுத்த வேண்டும். என்று நிபுணர்கள் கூறியுள்ளனர். தேசிய கதிர்வீச்சு பாதுகாப்பு வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. செல்போன் தொழில்நுட்பம் மிகவும் வேகமாக வளர்ந்து வருகிறது. அதன் பாதிப்புக்கள் குறித்து ஆராய்வதற்குள் அதன் தொழில்நுட்பம் மாறிவிடும் அளவிற்கு வளர்ச்சி உள்ளது.

செல்போனை பயன்படுத்துவதால் பெரிய உடல்நல பாதிப்புக்கள் ஏற்படக்கூடும் என்பதை நிருபிக்க முடியாவிட்டாலும் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஸ்வீடன் மற்றும் ஜேர்மனியில் நடத்தப்பட்ட ஆய்வில் அனுமதிக்கப்பட்ட அளவை விட குறைந்த அளவே கதிர் வீச்சு உள்ளது. ஆனால் இதுவே உயிரியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். செல்போன்கள் மிகவும் பாதுகாப்பானவை என்று உறுதியாகக் கூற முடியாது.

8 வயதிற்குட்பட்ட குழந்தைகள் செல்போனை தொடர்ந்து பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது. ஏனெனில் கதிர் வீச்சால் குழந்தைகள் அதிகம் பாதிக்கக்கூடிய அபாயம் உள்ளது. அவர்களுடைய நரம்பு வளர்ச்சியடையத் தொடங்கும் நேரம் என்பதாலும் சிசுக்கள் மிகவும் மிருதுவாக இருப்பதாலும் தொடர்ந்து கதிர்வீச்சுப் பாய்வதாலும் அவர்களுக்கு அதிக பாதிப்புக்கள் ஏற்படும் எனப்படுகிறது.

சி. சுகந்தன்
தரம் - 10D

# சிறுவர் உரிமைகள் பற்றிய ஐ.நாடுகள் சமவாயத்தின் சுருக்கமான வாசகம்

**1. பிள்ளை என்பதன் வரையறை**

18 வயதிற்குட்பட்ட ஒவ்வொருவரும் பிள்ளையாவார் சமவாயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லா உரிமைகளையும் ஒவ்வொரு பிள்ளையும் அனுபவித்தல் வேண்டும்.

**2. பாகுபாடு காட்டாமை**

எல்லாப்பிள்ளைகளுக்கும் அவர்களின் வயது, பால், இனம், நிறம், சாதி, மொழி, மதம் எவ்வாறிருப்பினும் இந்த உரிமைகள் உள்ளன. அரசாங்கம் பிள்ளைகளை எல்லா வகையான பாகுபாடுகளில் இருந்தும் பாதுகாப்புடன் அவர்களின் உரிமைகளைப் பரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**3. பிள்ளைகளின் சிறந்த நலன்**

பிள்ளைகள் தொடர்பான சகல செயற்பாடுகள், முடிவுகளும் அவர்களின் சிறந்த நலன்களை கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**4. சமவாயத்தை அமுலாக்கல்**

அரசாங்கம் சமவாயத்தில் இடம் பெற்றுள்ள உரிமைகளை நிதர்சனமாக்குவதற்கு தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

**5. பெற்றோரின் வழிகாட்டலும் பிள்ளையின் வளர்ச்சியும்**

பிள்ளையின் பரிமான வளர்ச்சித் திறனுக்கு ஏற்றவாறான நெறிமுறைகளைப் புகட்டுவது பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் உள்ள உரிமைகளையும் பொறுப்புக் களையும் அரசாங்கம் மதித்தல் வேண்டும்.

**௬. உய்வும் மேன்மையும்**

பிள்ளைகள் உயிர்வாழும் உரிமையுடையவர்கள் என்பதை ஒவ்வொருவரும் அங்கீகரித்தல் வேண்டும். பிள்ளைகளின் உய்வையும் வளர்ச்சியையும் அரசாங்கம் மதித்தல் வேண்டும்.

**7. பெயரும் தேசியமும்**

ஒவ்வொரு குழந்தையும் பிறப்பில் இருந்து தனக்கென ஒரு பெயரைப் பெறும் உரிமையுடையது. அது ஒரு தேசிய இனத்தில் சேர்த்துக் கொள்ளப்படவும் வேண்டும்.

**8. அடையாளம் பேணல்**

அரசாங்கம் குழந்தையின் ஆள் அடையாளத்தை பாதுகாத்தல் வேண்டும் அவசியமானால் அரசாங்கம் குழந்தையின் அடையாளம் தொடர்பான அடிப்படை அம்சங்களை மீளவும் நிலை நாட்டுதல் வேண்டும்.

**௯. பெற்றோரைப் பிரிதல்**

பிள்ளைகளை அவர்களின் சிறந்த நலனை முன்னிட்டு அல்லாமல் மற்றும்படி பெற்ரோரிடம் இருந்து பிரித்தல் ஆகாது. பெற்றோர் பிரிந்து வாழ முடிவு செய்யும் சந்தர்ப்பத்தில் பிள்ளை இருவரில் ஒருவரை அல்லது இருவரையும் பிரிந்து வாழுமானால் இரு பெற்றோரிடனே தொடர்பு வைத்திருக்கும் உரிமை அதற்கு உண்டு.

**10. பிரிந்த குடும்பம் இணைதல்**

பெற்றோருடன் மீண்டும் இணைந்து கொள்வதற்கோ பிள்ளைக்கும் பெற்றோருக்குமுள்ள உறவைப் பேணுவதற்கோ எந்த நாட்டையும் விட்டு அகலுதற்கு அல்லது தன் சொந்த நாட்டில் வாழ்வதற்கோ பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் உரிமையுண்டு.

**11. பிள்ளைகளின் சட்ட விரோத மாற்றமும் பிராமையும்**

